


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2048*

*மலர் - 9 இதழ் - 1 ஏப்ரல் - 2017*

கௌரவ ஆசிரியர்

முனைவர் **அ.அ.மணவாளன்**

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.com
இணைய தள முகவரி: **www.keetru.com**

**தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 300.00**
**அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00**

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## பொருளடக்கம்


படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன் – 4

காம்ரேட் என்.வி.
ஆர்.நல்லகண்ணு – 11

அசோகமித்திரன்: என்றென்றும் வாழும் கலைஞன்
பாவண்ணன் – 15

தஞ்சை மராட்டிய மன்னர்களின் மருத்துவக் கொடை
டாக்டர் சு.நரேந்திரன் – 21

சங்க இலக்கியச் சூழலியல் விழுமியங்களும்...
ந.முருகேசபாண்டியன் – 25

லெனினும் இந்திய விடுதலையும்
எஸ்.ஜி.சர்தேசாய்
தமிழில்:கே.ராமநாதன் – 33

வளர்ச்சியின் ரகசியம்
பொன்னீலன் – 39

அகில இந்திய அளவில் தமிழ்நாட்டில் மட்டும்தான்
ஒரே ஒரு பெரியார் இருந்திருக்கிறார்
ந.முத்துமோகன் – 41

புத்தகங்களே ஞானத்தின் வேர்கள்
முனைவர் நா.சுலோசனா – 53

பெருநகர வாழ்வும் புலிக்கலைஞனும்...
ஜி.சரவணன் – 57

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் என் அறிவுப் பசியைத் தீர்த்தது
திருச்சி சிவா – 61

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை முழக்கம்
உதயை மு.வீரையன் – 65

பால் - ஆல கால விஷமா?
சித்தார்த்தன் சுந்தரம் – 69

பாதயாத்திரை என்பது வாழ்க்கைப் பயணத்தின்
ஒரு பகுதி
செ.இரவி – 71

தமிழில் வட்டார வழக்குச்சொல் அகராதி உருவாக்கம்
முனைவர் இரா.வெங்கடேசன் – 72

# பி.ஆர்.அம்பேத்கர்: தீண்டப்படாதவர்களுக்கு காங்கிரசும் காந்தியும் சாதித்தது என்ன?

## ஆ. சிவசுப்பிரமணியன்

இந்தியச் சமூக அமைப்பில் இன்று வரை ஆதிக்கம் செலுத்தி வரும் ஒரு கருத்தியல், தீண்டாமைக் கருத்தியல் ஆகும். நான்கு வருணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த பண்டைய இந்தியச் சமூகத்தில் இந்நான்கு வருணங் களுக்கும் அப்பால் புதிய பிரிவு ஒன்று மனு என்றழைக்கப்படும் சுமதிபார்கவி என்பவரால் உருவாக்கப்பட்டது. வருணமற்றவர்கள் என்ற பொருளில் அவர்ணர்கள் என்று இப்புதிய பிரிவை அழைத்த மனுச் சண்டாளர் என்ற பெயரையும் இட்டார்.

இந்திய மக்கள் தொகையில் பெருவாரியான இம் மக்கள் பிரிவினர், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு சாதிப் பெயர்களுடனும் சாதிப்பட்டங் களுடனும் பெரும்பாலும் கிராமப்புறங்களில் வேளாண் தொழிலாளர்களாக வாழ்ந்தனர்.


ஆங்கிலக் காலனிய அரசு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முறையை இந்தியாவில் அறிமுகம் செய்த போது தீண்டத்தகாத சாதியினர் யாவர் என்பதைப் பதிவு செய்தது. அவ்வாறு பதிவு செய்ய வழிகாட்டும் வகையில், சில வரையறைகளை 1911-இல் உருவாக்கியது. இவ்வரையறைகளைப் படித்துப் பார்க்கும் போது இம் மக்களின் சமூகப் பொருளியல் நிலை எவ்வாறு இருந்தது என்பதை நம்மால் யூகிக்க முடியும்.

கிறித்தவ மறைப்பணியாளர்களும் ஆங்கில அரசும், தீண்டாமை என்ற ஓர் அடையாளத்தை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொண்டு இக்கொடுமைக்கு ஆளான மக்கள் பிரிவினருக்குப் பெயரிட்டன. இம்மக்களின் தனித்தனிப் பண்பாடுகளும், வாழ்வியலும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இது ஒரு வகையான இனமையவாதச் சிந்தனையின் வெளிப்பாடுதான். இவ்வகையில் ஒடுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டவர், தீண்டத்தகாதோர் என்ற பொதுப் பெயர்களால் இம் மக்கள் பிரிவினர் சுட்டப்பட்டனர். இவர்களின் சாதிப் பெயர்கள் அட்டவணைப்படுத்தப்பட்டதன் அடிப் படையில் அட்டவணை சாதியினர் என்றும் அழைக்கப் படலாயினர்.

•••

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஒரு முக்கிய கட்டமான சுதேசி இயக்கம் இந்தியாவின் நகரப் புறங்களை மையமாகக் கொண்டே நிகழ்ந்தது. மிகச் சொற்ப அளவில் தான் இதன் தாக்கம் கிராமப் புறங்களில் இருந்தது.

காந்தியின் வருகைக்குப் பின்னர் 1920ல் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கம், சுதேசி இயக்கத்தை விடப் பரவலான களங்களில் நிகழ்ந்தது. கிராமங்களை அதிகமாகக் கொண்டிருந்த இந்தியாவில் கிராம மக்களை ஈர்க்காமலும், அவர்களது பங்களிப்பு இல்லாமலும் விடுதலைப் போராட்டத்தை நடத்த முடியாது என்ற உண்மையைக் காந்தி அறிந்து கொண்டார். அதன்



அடிப்படையில் கிராமப்புற மக்களை ஈர்க்கும் வகையிலான செயல் திட்டங்களை உருவாக்கினார். இம் முயற்சியில் தீண்டத்தகாதோர் என்று ஒதுக்கி வைக்கப் பட்டிருந்த மக்கள் பிரிவின் மீது அவரது பார்வை படிந்தது. அவரது மனிதநேய உணர்வும் இதில் கலந்து கொண்டது.

**ஹரிஜன்**

பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்ட தீண்டத் தகாதோர் பிரிவு மக்களுக்கு ஒரே அடையாளத்தைத் தரும் வகையில் ஒரு பெயரை இடவிரும்பினார், இதன் அடிப்படையில் 'ஹரிஜன்' என்ற பெயரை இட்டார்.

இப்பெயரை அவர் உருவாக்கவில்லை. அவர் பிறந்த குஜராத் மாநிலத்தில் வாழ்ந்த நார்சி மோத்தா என்ற குஜராத் கவிஞர் உருவாக்கிய சொல் இது. இந்து சமயம் உருவாக்கிப் பேணிக் காத்த தேவதாசி முறையில் பிறந்த பிள்ளைகள், தம் தந்தை பெயர் அறியாது வாழ வேண்டிய அவலம் நிலவியது. மனித நேய உணர்வு கொண்ட இக்கவிஞர், இவர்கள் விஷ்ணுவின் பிள்ளைகள் என்ற பொருளில் ஹரிஜன் (ஹரி - விஷ்ணு) என்று பெயரிட்டழைத்தார், இச் சொல்லையே காந்தி ஏற்றுக்கொண்டு தீண்டத்தகாதோர் என்று ஒதுக்கப் பட்டிருந்த மக்கள் பிரிவைக் குறிக்கப் பயன்படுத்தலானார். தாம் நடத்திய பத்திரிகைக்கும் இப்பெயரை இட்டார். காங்கிரஸ் இயக்கத்தின் அரசியல் கலைச் சொல்லாக இது விளங்கலாயிற்று.

**இரட்டை வாக்குரிமை**

மற்றொரு பக்கம் காங்கிரஸ் இயக்கத்திற்கு வெளியே இம்மக்கள் பிரிவினரிடம் இருந்தே தலைவர்களும் சிந்தனையாளர்களும் ஆங்காங்கே உருவாகத் தொடங்கினர். இவ்வரிசையில் சிறப்பான இடத்தைப் பெற்றவராக அம்பேத்கர் விளங்கினார். இம் மக்களின் முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு அவர் முன் வைத்த திட்டங்களுள் ஒன்று இரட்டை வாக்குரிமை யாகும்.

அவரது திட்டப்படி தீண்டத்தகாத பிரிவைச் சேர்ந்த வாக்காளர்கள் மட்டும் இரண்டு வாக்குகளைத் தேர்தலில் வழங்கும் உரிமை பெற்றிருப்பர். இவற்றுள் ஒரு வாக்கைப் பயன்படுத்தி ஏனைய வாக்காளர்களுடன் இணைந்து ஒரு வேட்பாளரைத் தேர்வு செய்வர், அவர்களுக்கு மட்டுமே உரிய ஒரு வாக்கைப் பயன்படுத்தி தீண்டத்தகாத பிரிவைச் சார்ந்த ஒரு வேட்பாளரைத் தேர்வு செய்வர்.

இதனால் பிற இயக்கங்களின் கட்டுப்பாட்டிற்குள் வராத தீண்டத்தகாத பிரிவைச் சேர்ந்த ஒருவரைத் தேர்வு செய்ய முடியும். இதில் பிற வகுப்பினர் தலையிட முடியாது.

இதைத் தொடக்கத்தில் இருந்தே காங்கிரஸ் எதிர்த்து வந்தது. கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்தது.

இந்தியாவுக்கு எத்தகைய அரசியல் சட்ட வரைவை உருவாக்குவது என்பது தொடர்பாகக் குழு ஒன்றினை ஆங்கில அரசு 1928 இல் அமைத்தது. இது, இக் குழுவின் தலைவரான சைமன் என்பவரின் பெயரால் சைமன் கமிஷன் எனப்பட்டது. மக்களின் கருத்தறிய இக்குழு இந்தியா வந்த போது, இதற்கு எதிராக, சைமன் கமிஷன் எதிர்ப்புப் போராட்டத்தை காங்கிரஸ் நடத்தியது. அன்றைய காலகட்டத்தில் பரவலான மக்கள் ஆதரவைப் பெற்ற காங்கிரசின் எதிர்ப்பால் எதிர் பார்த்த அளவுக்கு சைமன் குழு வருகை வெற்றி பெறவில்லை. இதனை ஈடு செய்யும் வகையில் 1930 இல் வட்டமேசை மாநாடு ஒன்றை இலண்டனில் ஆங்கில அரசு நடத்தியது. ஆனால் காங்கிரஸ் இதில் கலந்து கொள்ளவில்லை. இதனால் எந்தவொரு முடிவையும் இம்மாநாடு எடுக்க முடியாமல் போனது.

ஆயினும் இந்தியாவுக்கு என்று தனியாக அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கும் போது, தீண்டத் தகாதோர் எனப்படும் மக்கள் பிரிவைக் கலந்து முடிவெடுக்க வேண்டும் என்ற முடிவு முதலாம் வட்ட மேசை மாநாட்டில் எடுக்கப்பட்டது. இவ்வகையில் இது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வெற்றி தருவதாய் அமைந்தது.

1931 செப்டம்பரில் இரண்டாம் வட்ட மேசை மாநாடு நடந்தது. இதில் காந்தியடிகள் கலந்து கொண்டார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனித் தொகுதி முறையை காந்தி எதிர்த்தார். மற்றபடி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. 1932 ஜனவரியில் காந்தி கைதானார். இதே ஆண்டில் இரட்டை வாக்குரிமையை ஏற்றுக் கொள்ளும் முடிவை இங்கிலாந்து பிரதமர் அறிவித்தார்.

இவ் அறிவிப்பு வந்த பின்னர் இம்முடிவுக்கு எதிராக காந்தி உண்ணாநோன்பை 1932 செப்டம்பர் 20ஆவது நாளில் தொடங்கினார். இந்து மகாசபையினரும் காந்தியின் நிலைப்பாட்டிலேயே இருந்தனர். மக்களின் செல்வாக்குப் பெற்ற தலைவரான காந்தியின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய இக்கட்டான சூழலில், இரட்டை வாக்குரிமையை விட்டுக் கொடுக்கும் ஒப்பந்தத்தில் 24.09.1932 இல் அம்பேத்கர் கையெழுத்திட்டார்.

இவ்வாறு முதலாம் வட்ட மேசை மாநாட்டில் பெற்ற இரட்டை வாக்குரிமையை, காந்தியடிகளின் உண்ணா நோன்பால் தாழ்த்தப்பட்ட மக்கள் இழந்தனர்.

இதுவரைப் பார்த்த செய்திகளின் பின்புலத்தில் அம்பேத்கரின் 'தீண்டப்படாதவர்களுக்கு காங்கிரசும்

காந்தியும் சாதித்ததென்ன' என்ற நூலைப் படிக்க வேண்டும்.

**நூல்**

இந்திய அரசியல் அரங்கில், தீண்டத்தகாதவர்களின் பாதுகாவலர்கள் என்ற அடையாளத்தை காந்தியும் காங்கிரசும் உருவாக்கியிருந்த சூழலில் இந்நூலின் தலைப்பு அதிர்ச்சியூட்டுவதாய் அமைந்திருந்தது. நூலின் முதல் பதிப்பு 1945 இல் வெளியானது.

பதினொன்று இயல்களைக் கொண்டிருந்த இந் நூலில், விரிவான பின் இணைப்புகளை அம்பேத்கர் கொடுத்துள்ளார்.

இந்நூல் தமிழில், பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் நூல் தொகுப்பு வரிசையில் பதினாறாவது தொகுதியில் இடம்பெற்றுள்ளது. இப்பதினாறாவது தொகுதி முழுமையும் இந்நூலை உள்ளடக்கியதுதான். எனவே இந்நூலைப் படிக்க விரும்புவோர், அம்பேத்கர் நூல் தொகுதி வரிசையில் பதினாறாவது தொகுதியை வாங்கிப் படிக்க வேண்டும். 627 பக்கங்களைக் கொண்ட இந்நூல் நாற்பது ரூபாய்தான். நூலகப் பதிப்பின் விலை கூட ரூபாய் நூறுதான்.


**நூலின் செய்தி**

நூலின் முதல் இயல் 1917 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நிகழ்ந்த இந்திய தேசியக் காங்கிரஸின் வருடாந்திரக் கூட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் குறை பாடுகளை அகற்றுவதை வலியுறுத்தும் தீர்மானத்தில் இருந்து தொடங்குகிறது.

இத்தீர்மானத்தை வரி மாறாது மேற்கோளாகக் காட்டிவிட்டு இத் தீர்மானத்தை முன்மொழிந்த நடேசன், இத் தீர்மானத்தை ஆதரித்து உரையாற்றிய, புலபாய் தேசாய், ராமய்யர், ஆசப் அலி ஆகியோர் ஆற்றிய உரைகளை மேற்கோளாகக் காட்டுகிறார். இவ் உரைகள் தீண்டப்படாதோர் என்று கூறப்படும் மக்கள் பிரிவின் மீதான காங்கிரஸின் அனுதாப உணர்வையும், அவர்கள் முன்னேற்றத்தின் மீது கொண்டுள்ள ஆர்வத் தையும் வெளிப்படுத்துபவை. இவ்வுரைகள் கண்ணிய மான சொற்களைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடும் அம்பேத்கர் இது விநோதமான நிகழ்வு என்றும் மதிப்பிடுகிறார்.

இம்மதிப்பீட்டிற்கான காரணத்தை இந்நிகழ்வுக்குத் தலைமை வகித்த அன்னிபெசண்டில் இருந்து தொடங்கு கிறார். தீண்டத்தகாதவர்களின் மீது இயல்பான வெறுப்புணர்வு கொண்டார் அன்னிபெசண்ட் என்ற கருத்தை முன்வைக்கும் அம்பேத்கர் அதற்குச் சான்றாக 1909 பிப்ரவரியில் வெளியான இந்தியன் ரெவ்யூ என்ற ஆங்கில ஏட்டில் 'ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை மேம் படுத்தல்' என்ற தலைப்பில் அன்னிபெசண்ட் எழுதிய கட்டுரையை விரிவான மேற்கோளாகக் காட்டுகிறார்.

இக்கட்டுரையில் இம் மக்களைக் குறித்த எதிர் மறையான, அருவருப்பான சித்திரத்தைத் தீட்டும் அன்னிபெசண்ட் அதைப் போக்கும் வழிமுறைகளைக் கூறவில்லை. இதற்குக் காரணமான ஆட்சியாளர்களை விமர்சிக்கவில்லை. மாறாக மேட்டிமைக் குழு மக்களின் குழந்தைகள் பயிலும் பள்ளிகளில் இச் சமூகத்தின் குழந்தைகளை அனுமதிக்கக் கூடாது என்று வாதிடு கிறார். இத்தகைய சிந்தனைப் போக்குடைய அன்னி பெசண்ட்டின் தலைமையில் இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டமையே 'விநோதமான சம்பவம்' என்று குறிப்பிடும்படி அவரைத் தூண்டியுள்ளது.



தீண்டப்படாதவர்களுக்கு
காங்கிரசும் காந்தியும்
சாதித்தது என்ன?

பி.ஆர். அம்பேத்கர்

''எங்களுடைய எஜமானர்களாக இருப்பது உங்களுடைய நலன்களுக்கு உகந்ததாக இருக்கக்கூடும். ஆனால் உங்க ளுடைய அடிமைகளாக இருப்பது எங்களுக்கு எவ்வாறு ஏற்புடையதாக இருக்கும்?''

- துசிடிடெஸ்

(1945 ஆம் ஆண்டு பிரசுரத்தின்
மகாராஷ்டிர அரசாங்கத்தாரின் மறுபதிப்பு)

இரண்டாவது மாநாடு தொடங்கி, சமூக சீர்திருத்தங் களின் பால் தனக்குள்ள அக்கறையை காங்கிரஸ் இயக்கம் வெளிப்படுத்தி வந்தது. 1895 இல் புனே நகரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் சமூக சீர்திருத்தம் தொடர்பான கருத்துக்கள் மாநாட்டில் இடம் பெறுவதை 'சமூகப் பழமைவாதிகள்' திலகர் தலைமையில் எதிர்த்தனர்.

இதன் பின்னர் சமூகத் தீமைகளைக் களைவதிலோ அல்லது தணிப்பதிலோ அக்கறையில்லாத ஆர்வமில்லாத ஓர் அரசியல் அமைப்பாக காங்கிரஸ் மாறியது என்கிறார் அம்பேத்கர்.

இதனால்தான் தீண்டத்தகாதவர் என ஒதுக்கி வைக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் நலன் தொடர்பாக 1917 காங்கிரஸ் மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானத்தை விநோதமான சம்பவம் என்கிறார் அம்பேத்கர். இவ்வாறு குறிப்பிட்டு விட்டு, பின்வரும் ஆறு வினாக்களை எழுப்புகிறார்.

- இப்படி ஒரு தீர்மானத்தை இயற்ற வேண்டியது அவசியம் என்று, காங்கிரஸ் ஏன் கருதியது?
- இவ்வாறு அக்கறை கொள்ள அதைத் தூண்டியது எது?
- இதனால் அது பெற விரும்பிய ஆதாயம் என்ன?
- அது யாரை ஏமாற்ற விரும்பியது?
- அதன் பார்வையால் ஏற்பட்ட மாற்றமா? அல்லது உள்நோக்கமா?
- எது இதை நிறைவேற்றத் தூண்டியது?

இதன் தொடர்ச்சியாக, **'காங்கிரஸ் தீர்மானத்திற்குப் பின் ஓர் உள்நோக்கம் இருந்தது...** அந்த நோக்கம் ஆன்மீக நோக்கமல்ல, அது ஓர் அரசியல் நோக்கமாக இருந்தது' என்பதை விளக்கியுள்ளார்.

1885 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட காங்கிரஸ் 32 ஆண்டுகள் கழித்து 1917 இல் தாழ்த்தப்பட்ட வர்க்கங்கள் குறித்து தீர்மானம் நிறைவேற்றியமைக்குக் காரணம் என்ன என்ற வினாவை எழுப்பும் அம்பேத்கர் அதற்கு விடையும் அளிக்கிறார். 1917 இல் நாராயண் சந்தவார்க்கரின் தலைமையில் நிகழ்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானங்களே இதற்குக் காரணம் என்பது அவரது கருத்தாகும். இம் மாநாட்டை அடுத்து இரண்டாவது கூட்டமும் இதே பங்களிப்பைச் செய்துள்ளது.

காங்கிரஸ் லீக் திட்டத்திற்கு தாழ்த்தப்பட்டவர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில் இத்தீர்மானத்தை நிறை வேற்ற வேண்டிய கடப்பாடு காங்கிரசுக்கு இருந்தது.

### பர்டோலி தீர்மானம்

1919 இல் காந்தியின் வருகைக்குப் பின்னர், பொது மக்களிடம் தொடர்பு கொள்ளும் இயக்கமாக காங்கிரஸ் மாறியது. இம் மாற்றத்தை அடுத்து 1922 பிப்ரவரியில் பர்டோலி என்னும் ஊரில் நிகழ்ந்த கூட்டத்தில் சில செயல் திட்டங்களை அறிவித்தது. உறுப்பினர் சேர்க்கை, கதர் உற்பத்தி, மது எதிர்ப்பு போன்றவற்றுடன் தாழ்த்தப் பட்ட மக்களை மையப்படுத்தும் திட்டம் ஒன்றும் இச் செயல் திட்டத்தில் பின்வருமாறு இடம் பெற்றிருந்தது.

'தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ஒரு சிறந்த வாழ்க்கை வாழ ஒருங்கமைத்தல், அவர்களுடைய சமூக, மன மற்றும் தார்மீக சூழ்நிலைகளை மேம்படுத்தல், தங்களுடைய குழந்தைகளை தேசியப் பள்ளிகளுக்கு அனுப்ப அவர்களைத் தூண்டுதல், இதர பிரஜைகள் அனுபவிக்கும் சாதாரண வசதிகளை அவர்களுக்கு வழங்குதல்' ஆகியவைகளாகும்.

பின்னர் இத்திட்டம் காங்கிரஸ் காரியக் கமிட்டி யால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதை நிறைவேற்ற குழு ஒன்றையும் நியமித்தது. அத்துடன் இதற்காக ஐந்து இலட்சம் நிதியும் ஒதுக்கப்பட்டது.

> 1923-இல் மும்பையில் கூடிய கூட்டத்தில், "... தீண்டப்படாதவர்களின் பிரச்சினை குறிப்பாக இந்து சமுதாயம் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், இந்து சமுதாயத்தினரிடையே இருந்து இத் தீமையை அகற்றும் கடும் முயற்சிகளை மேற் கொள்ளவும், இந்த விஷயத்தைத் தன் பொறுப்பில் ஏற்றுக் கொள்ளவும், அகில இந்திய இந்து மகா சபையை அது கேட்டுக் கொள்கிறது."

என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத் தீர்மானம் குறித்து,

> 'தீண்டப்படாதவர்களின் மேம்பாடு குறித்த பணியை மேற்கொள்வதற்கு இந்து மகாசபையை விட சற்றும் பொருத்தமற்ற ஓர் அமைப்பு வேறெதுவும் இருக்க முடியாது. தீண்டப்படாதவர்களின் பிரச்சினையை சிரமேற்கொண்டு தீர்க்க சற்றும் தகுதியற்ற ஓர் அமைப்பு இருக்கிறதென்றால் அது இந்து மகாசபை தான். அது ஒரு தீவிரவாத இந்து அமைப்பாகும்... அது ஓர் அப்பழுக்கற்ற அரசியல் அமைப்பு, அதன் பிரதானக் குறிக் கோளும் நோக்கமும் இந்திய அரசியலில் முஸ்லீம்களின் செல்வாக்கை எதிர்த்துப் போராடு வதேயாகும். தனது அரசியல் வலிமையைப் பேணிக் காப்பதற்காக அது தனது சமூக ஒருமைப்பாட்டை பராமரிக்க விரும்புகிறது. சமூக ஒருமைப்பாட்டை பராமரிக்கும் வழிமுறை, ஜாதி அல்லது தீண்டாமையைப் பற்றிப் பேசாதிருப்பதேயாகும்".

மேலும், தீண்டப்படாதவர்களின் உண்மையான நண்பரான சுவாமி சித்தானந்தாவை, தான் உருவாக்கிய குழுவின் ஒருங்கிணைப்பாளராக நியமிப்பதை தொடக்கத்தில் இருந்தே காங்கிரஸ் விரும்பவில்லை. அவருக்குப் பதிலாக ஓர் ஆசாரமான பிராமணரான தேஷ்பாண்டேயைத்

தேர்வு செய்தது. இறுதியாக இப்பிரச்சினையை இந்து மகாசபையிடம் ஒப்படைத்தது. பர்டோலி தீர்மானத்தை நடைமுறைப்படுத்த உதவும் வகையில் தேவையான நிதி வழங்கவும் காங்கிரஸ் விரும்பவில்லை. இது தொடர்பாக சுவாமி சித்தானந்தாவுக்கும் பண்டித மோதிலால் நேருவுக்கும் இடையில் நிகழ்ந்த கடிதப் போக்குவரத்தின் நகல்கள் நூலின் பின் இணைப்பில் இடம் பெற்றுள்ளன. இறுதியில் சுவாமி சித்தானந்தா இக்குழுவில் இருந்து 1922 இல் விலகி விட்டார்.

### மன்னரின் தீர்ப்பு

தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதி வழங்கும் திட்டத்தை இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் காந்தி ஏற்றுக்கொள்ளவில்லை. தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்குத் தனித்தொகுதி உரிமை அளிக்கப் படுமானால் என் உயிரைக் கொடுத்தேனும் அதை எதிர்ப்பேன் என்று காந்தி குறிப்பிட்டார். பின்னர் அவர் இந்தியா திரும்பியதும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். சட்ட மறுப்பு இயக்கத்தை மீண்டும் தொடங்கப் போவதாக அவர் எச்சரித்ததே இதற்குக் காரணம்.

சிறையில் இருந்தபடியே 1932 மார்ச் 11இல் இந்திய மந்திரி சாமுவேல் ஹோருக்கு கடிதம் ஒன்றை எழுதினார். இக்கடிதத்தில் தாழ்த்தப்பட்டோருக்குத் தனித்தொகுதி உருவாக்குவது குறித்த தன் எதிர்ப்பைப் பின்வருமாறு பதிவு செய்திருந்தார்.

> "...தனித்தொகுதி முறை அவர்களுக்கும் இந்து சமயத்திற்கும் தீங்கு விளைவிக்கக் கூடியது. கேடு பயப்பது என்று கருதுகிறேன்... ...இந்து சமயத்தைப் பொறுத்தவரையில் தனித் தொகுதி முறை அதனை உடைத்துத் தகர்த்துக் கூறு போட்டு விடும். எனக்கு இந்த வகுப்பாரின் பிரச்சினை பிரதானமாக தார்மீகச் சார்புடையது. சமயத் தொடர்புடையது."

காந்தியடிகளின் இக்கூற்று ஒரு சமூக அரசியல் பிரச்சினையை மதப்பிரச்சினையாகப் பார்த்ததன் வெளிப்பாடுதான். அடுத்ததாக,

> "தாழ்த்தப்பட்ட இனத்தாருக்கு தனித்தொகுதிகள் அமைப்பதென அரசு முடிவு செய்யும் பட்சத்தில் அதனை எதிர்த்து நான் சாகும்வரை உண்ணா விரதம் இருப்பேன் என்பதை மன்னர் பிரான் அரசாங்கத்துக்குப் பண்போடு தெரிவித்துக் கொள்கிறேன்... தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித் தொகுதிகளை உருவாக்கும் உத்தேசம் ஏதும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் நம்பவே விரும்புகிறேன்"

என்றும் தம் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். 1932 ஆகஸ்ட் 17-இல், இங்கிலாந்தின் மன்னர் வெளியிட்ட அறிக்கையானது காந்தியின் எச்சரிக்கையைப் பொருட் படுத்தாததன் வெளிப்பாடாக அமைந்தது. அதன் முக்கிய செய்திகள் வருமாறு:

- தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று தனித் தொகுதிகள் ஒதுக்கப்படும்.
- இம்மக்கள் பிரிவினர் மட்டுமே இத்தொகுதி களில் வாக்களிப்பர்.
- இத்தொகுதியில் வாக்களிக்கும் உரிமை பெற்றவர் பொதுத் தொகுதியிலும் வாக்களிக்கும் உரிமையைப் பெறுவார்.
- தாழ்த்தப்பட்ட மக்கள் மிகுதியாக வாழும் பகுதிகளில் இத்தனித்தொகுதி அமைக்கப்படும்.
- இருபது ஆண்டுகள் வரை இம் முடிவு நீடிக்கும்.

இங்கிலாந்துப் பிரதமரின் இத்தீர்ப்பை எதிர்த்து, கடிதம் ஒன்றை அவருக்கு காந்தி எழுதினார்; அக் கடிதத்தில் இருந்து சில பகுதிகள் வருமாறு:

> **“திரு காந்தி,
> தாம் மிகவும் நேசிக்கிற
> பல்வேறு நோக்கங்களுக்காக
> எத்தனையோ முறை
> உண்ணாவிரதம்
> இருந்திருக்கிறார்?
> இதே காந்தி
> தீண்டப்படாதோருக்காக
> ஏன் ஒருமுறை கூட
> உண்ணாவிரதம்
> மேற்கொள்ளவில்லை?”**

> என் உயிரைப் பணயம் வைத்து உங்கள் முடிவை எதிர்க்க வேண்டியவனாக இருக்கிறேன். இதைச் செய்வதற்கு எனக்குள்ள ஒரே வழி சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதே ஆகும். பிரிட்டிஷ் அரசாங்கம்... தனது முடிவை மாற்றிக் கொள்ளு மானால் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்குத் தனித் தொகுதிகளை ஒதுக்கும் தனது திட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமானால் என் உண்ணாவிரதத்தை நிறுத்தி விடுவேன்."

காந்தியின் இக்கடிதத்திற்கு இங்கிலாந்தின் பிரதமர் ராம்ஸே மக்டொனால்டு பதில் எழுதினார். அதில்,

"தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தங்களது குரலை எதிரொலிக்கக் கூடிய குறிப்பிட்ட எண்ணிக்கை உள்ள தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தங்கள் விருப்பப்படி தேர்ந்தெடுத்து அனுப்புவதைத் தடுக்கும் ஒரே நோக்கத்துடனேயே நீங்கள் உண்ணா விரதத்தை மேற்கொள்ளத் தீர்மானித்திருக் கிறீர்கள். இவ்வாறு தான் உங்கள் போக்கை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது."

என்று குறிப்பிட்டிருந்தார்.

### புனே ஒப்பந்தம்

தாம் குறிப்பிட்டபடி காந்தியடிகள் தம் உண்ணா விரதத்தை 1923 செப்டம்பர் 20 ஆம் நாளன்று தொடங் கினார். இதனால் காந்தியின் உயிரை எவ்வாறு காப்பது என்ற பிரச்சினை உருவானது என்று அம்பேத்கர் குறிப்பிட்டார். காந்தியின் உண்ணாவிரத நிர்ப்பந்தத் திற்குப் பணிந்து தாழ்த்தப்பட்டவர்களின் வகுப்புரிமை தொடர்பான பிரிட்டிஷ் பிரதமரின் தீர்ப்பில் மாற்றம் செய்ய அம்பேத்கர் இணங்கினார். இறுதியில் ஒப்பந்த விதிகள் இறுதி செய்யப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இவ்வொப்பந்தம் இரட்டை வாக்குரிமையைப் பறித்து விட்டது. இது குறித்து சற்று விளக்கமாக சில செய்திகளை அம்பேத்கர் கூறச் செல்கிறார். இதனை அடுத்து தீண்டப்படாதவர்கள் மீதான காங்கிரசின் கருணையை அதன் உள்ளார்ந்த பொருள் என்ன என்று வெளிப்படுத்துகிறார். இந்திய மக்கள் அனைவரையும் காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்துகிறதா என்ற வினாவை எழுப்பி 'தாழ்த்தப்பட்ட இன வேட்பாளர் உண்மையில் இந்துக்களால் நியமிக்கப்படுபவர் என்றே கூற வேண்டும்' என்கிறார்.

'தீண்டப்படாதோர் உட்பட இந்தியா முழு வதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே அமைப்பு' காங்கிரஸ் தான் என்ற கருத்தை அயல்நாட்டினர் நம்பி வந்த சூழலில், இந்திய சமூக அமைப்பு குறித்த உண்மையை இந்நூலின் ஒன்பதாவது இயலில் அம்பேத்கர் வெளியிட்டுள்ளார். 'சுதந்திரத்திற்காக காங்கிரஸ் போராடி வருகிறதா என்ற கேள்வி யாருடைய சுதந்திரத்திற்காக, காங்கிரஸ் போராடி வருகிறது என்னும் கேள்வியுடன் ஒப்பிடும் போது மிக மிகக் குறைந்த முக்கியத்துவத்தையே பெறுகிறது' என்று குறிப்பிட்டு விட்டு, இந்தியாவின் ஆதிக்க வகுப்பினராகப் பிராமணரும் பனியாக்களும் விளங்கி வருவதை அம்பேத்கர் வரலாற்றுச் சான்றுகளுடன் சுட்டிக் காட்டியுள்ளார். இவ்வியலின் இறுதியில் 'காங்கிரசை ஆதரிப்பது என்பது மற்றவர்களை அடிமைப்படுத்த கொடுங்கோன்மைக்கு சுதந்திரமளிப்பதையே குறிக்கும்' என்று முடித்துள்ளார்.

எட்டாவது இயல் இந்து சமயத்திற்கும் தீண்டத் தகாதவர் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் மக்கள் பிரிவினருக்கும் இடையிலான எதிர்மறையான உறவினை விளக்குகிறது.

இறுதி இயல் **'காந்தியம் தீண்டப்படாதவர்களின் தலைக்கு மேல் தொங்கும் வாள்'** என்ற தலைப்பைக் கொண்டுள்ளது. கல்விப்புலம் சார்ந்த பாடநூல்கள், காந்தியவாதிகள் எழுதிய நூல்கள் வாயிலாக மட்டுமே காந்தியை அறிந்து கொண்டவர்களுக்கு இத்தலைப்பு அதிர்ச்சியூட்டுவதாகவே அமையும். தலைப்பு மட்டு மின்றி இவ்வியலில் இடம் பெற்றுள்ள சாதி, வருணம் தொடர்பான காந்தியின் கூற்றுகளும்கூட அதிர்ச்சி யூட்டுபவை தாம். சாதிமுறை, வருணமுறை தொடர்பான காந்தியின் கூற்றுகளை அப்படியே மேற்கோளாக அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார் (பக் 442 - 444). இவை அவரது வருணாசிரமச் சார்பை வெளிப்படுத்தி நிற்கின்றன.

உழைக்கும் வர்க்கத்தினரான தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் அவர் வழங்கியுள்ள அறிவுரை களையும் அம்பேத்கர் மேற்கோளாகக் காட்டியுள்ளார். இவையும் கூட எரிச்சலூட்டும் தன்மையின. நம் கால காந்தியவாதிகள் சிலர் ஆலைத் துணிகளையும் ஏன் கைத்தறித் துணிகளையும் கூடத் துறந்து, கதராடை அணிந்து வாழ்ந்தாலும் சாதி உணர்வைத் துறக்காது வாழ்கிறார்கள். அம்பேத்கர் மேற்கோளாகக் காட்டும் இப் பகுதிகளைப் படிக்கும் போது அவர்கள் உண்மை யாகவே காந்தியைப் பின்பற்றுபவர்கள் என்றே கூறத் தோன்றுகிறது.

'அம்பேத்கர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கையாள்' என்ற குற்றச்சாட்டை முன்வைப்பவர்களின் போலி வாழ்க்கையையும், குருவாயூர் கோவில் நுழைவுப் போராட்டத்தில் காந்தியின் எதிர்மறையான செயல் பாட்டையும் அம்பேத்கர் வலுவான சான்றுகளுடன் வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் பின்வரும் வினாக்களையும் காந்தியை நோக்கி எழுப்பியுள்ளார்.

1. திரு காந்தி, தாம் மிகவும் நேசிக்கிற பல்வேறு நோக்கங்களுக்காக எத்தனையோ முறை உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்? இதே காந்தி தீண்டப்படாதோருக்காக ஏன் ஒரு முறை கூட உண்ணாவிரதம் மேற்கொள்ள வில்லை?
2. தீண்டப்படாதோருக்கு ஆதரவாக காந்தி ஏன் ஒருமுறை கூட சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்க வில்லை.
3. பொதுக் கிணறுகளையும், ஆலயங்களையும் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்துக்களுக்கு

எதிராக தீண்டப்படாதோர் காந்தியின் வழியைப் பின்பற்றி 1929 முதல் சத்தியாக்கிரகம் செய்து வந்துள்ளனர். அவர்களது சத்தியாக் கிரகத்தை திரு காந்தி ஏன் எதிர்க்க வேண்டும்?

பல முக்கிய ஆவணங்கள் இந்நூலின் பின்னிணைப்பு களாக இடம் பெற்றுள்ளன? மொத்தத்தில் தீண்டாமை ஒழிப்பு தொடர்பாக காங்கிரசும் காந்தியும் மேற் கொண்ட அணுகுமுறை குறித்த ஓர் ஆழமான ஆய்வு நூலாக இந்நூல் அமைந்துள்ளது.

**காங்கிரசின் எதிர்வினை**

1945 இல் அம்பேத்கர் இந்நூலை வெளியிட்ட பின் இதற்கு மறுப்புரை எதையும் காந்தி எழுதவில்லை. ஆனால் 26.07.1945ல் ராஜாஜிக்கும் 18.10.1945இல் ராஜாஜியின் சீடர் க.சந்தானத்திற்கும் கடிதம் எழுதி அம்பேத்கரின் நூலுக்கு மறுப்புரை எழுதும்படி வேண்டியுள்ளார். இருவரும் இரு சிறுநூல்களை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டனர்.

இந்நூல்களில் அம்பேத்கர் எழுப்பிய பல வினாக் களுக்கு விடையில்லை. மாறாக சில அறிக்கைகளையும் புள்ளிவிவரங்களையும் அடிப்படையாகக் கொண்ட விளக்கங்களாக மட்டுமே அமைந்தன. குறிப்பாக இந்து மதத்திற்கும் தீண்டாமைக்கும் இடையிலான நெருக்க மான பிணைப்பு, தீண்டத்தகாதவர்களுக்காக ஒரு முறை கூட காந்தி உண்ணாவிரதம் இருக்காமை, தீண்டத்தகாத மக்கள் மேற்கொண்ட சத்தியாக்கிரகத்தை காந்தி ஆதரிக் காமை, சாதி குறித்த காந்தியின் கருத்து என அம்பேத்கர் முன்வைத்த கருத்துக்களுக்குத் தெளிவான பதிலை இரு நூல்களிலும் காணமுடியவில்லை.

இவ்விரு நூல்களும் ஆங்கிலத்தில் வெளியாகி 71 ஆண்டுகள் கழித்து மதுரை காந்திய இலக்கிய சங்கம் இவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து ஒரே நூலாக இன்று வெளியிட்டுள்ளது. பதிப்புரை எழுதியுள்ள திரு. மா.பா.குருசாமி தம் பதிப்புரையில்,

> அண்ணலின் அரிய பணிகளை ஆய்வுரை என்ற பெயரில் புரட்டிப் போட்ட ஒரு நூலுக்கு மதிப்புரையாக இரண்டு அறிஞர் பெருமக்கள் ஆய்வுரை வழங்கினர்.
>
> டாக்டர் அம்பேத்கர் "காங்கிரசும் காந்தியும் தீண்டத்தகாதோருக்குச் செய்ததென்ன?" என்ற ஒரு நூலை ஆங்கிலேய அரசிடம் நற்பெயர் பெறுவதற்காக எழுதி வெளியிட்டார். அதில் நெஞ்சறிந்தே பொய்களையும் புரட்டுகளையும் தொகுத்து வரலாற்றுண்மைகளை மறைத்து அண்ணல் காந்தியடிகளின் நற்பெயரைக் கெடுக்க முயன்றிருந்தார். அந்தக் கட்டியளந்த கருத்துக் களை அறிவார்ந்த முறையில் மறுத்து அண்ணலும் காங்கிரசும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்ததைச் சான்றுகளோடு தொகுத்துத் தருகின்றன இந்த ஆய்வு நூல்கள்.

என்று எழுதியுள்ளார். அம்பேத்கரின் மீது அவர் கொண்ட காழ்ப்புணர்வின் பதிவாக இதைக் கருத இடமுள்ளது.

இன்றைய இந்தியாவின் அரசியல் சூழலில் அம்பேத்கர், பெரியார் சிந்தனாவாதிகளும் இடது சாரிகளும் இணைந்து செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது. இந்நிலையில் காந்தியத்தின் பெயரால் அம்பேத்கரை, சிறுமைப்படுத்தும் இந்நூலை இத்தகைய பதிப்புரையுடன் இன்று வெளியிடுவது யாருக்காக? ●


## FORM - IV

Statement about ownership and other particulars about newspaper New Centuryin Ungal Noolagam to be published in the first issue every year after the last day March.

1. Place of Publication : Chennai

2. Periodicity of its Publication : Monthly

3. Printer's Name : T. Rathinasabapathy
   Nationality : Indian
   Address : Pavai Printers (P) Ltd., 142, Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

4. Publisher's Name : Shanmugam Saravanan
   Nationality : Indian
   Address : New Century's Readers Sangam, 142, Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

5. Editor's Name : T.Stalin Gunasekaran
   Nationality : Indian
   Address : 142, Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

6. Names and addresses of individuals those who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.

I, S.Saravanan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(S.Saravanan)

Signature of Publisher



# காம்ரேட் என்.வி.

## ஆர்.நல்லகண்ணு

முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, ஜனசக்தி பிரசுராலயத்திலிருந்து 'ஒப்பில்லாத சமுதாயம்' என்ற சிறுநூல் வெளிவந்தது. அப்போது இந்த நூலுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. நானும் இதை விற்றிருக்கிறேன்.

இந்திய மக்கள் விருப்பு, வெறுப்பில்லாமல் புரிந்துகொள்ளும் வகையில் சோவியத் யூனியனில் சோஷலிஸ அமைப்பின் சிறப்பு பற்றி எழுதப் பட்டிருந்தது.

கான்டர்பரி பிஷப் (Dean of Canterbury) எழுதிய 'உலகில் ஆறில் ஒரு பங்கு' (One sixth of the world) என்ற ஆங்கில நூலின் சுருக்கத்தை ஆரவார மில்லாத அழகிய தமிழில் எழுதிய தோழர் நா. வானமாமலை அவர்கள் அந்நூலுக்குக் கொடுத் திருந்த தலைப்புதான் "ஒப்பில்லாத சமுதாயம்."

இச்சிறு வெளியீட்டின் மூலமே தோழர் என்.வி. அவர்களை முதன் முதலில் புரிந்து கொண்டேன்.

### முதல் சந்திப்பு

1946-ல் நான்குநேரி தாலுகாவில் விவசாயி களிடையே கட்சிப் பணிக்காக முழுநேர ஊழியராக அனுப்பப்பட்டேன். அரசியல் ஆர்வத்தில் கல்லூரிப் படிப்பை அரைகுறையாக நிறுத்தி விட்டு, சொந்த ஊரில் அரசியலைத் தொடர்ந்து நடத்த முடியாமல் கட்சித் தலைமைக்கு எழுதினேன்.

திடீரென்று ஒருநாள் தோழர் பாலதண்டா யுதம் அவர்களிடமிருந்து கடிதம் வந்தது. உடனே நான்குனேரிக்குப் புறப்பட்டு ஆசிரியர் நா. வான மாமலை அவர்களைச் சந்திக்குமாறு எழுதி யிருந்தார். வழிச்செலவுக்குரிய பணத்தை தோழர் களிடமிருந்து பெற்றுக்கொண்டேன்.

நான்குநேரி போய்ச் சேர்ந்தேன். ஆசிரியர் அவர்களைச் சந்தித்தேன். வயதுக்கும் திறமைக்கும் மிஞ்சிய அடக்கம்; ஆழ்ந்தடங்கிய அறிவாற்றலின் காரணமாகும் என்று எனக்குள் நினைத்துக் கொண்டேன்.

தாலுகாவில் உருவாகியிருக்கும் விவசாயிகள் எழுச்சி பற்றிய சுருக்கத்தை தெளிவாகக் கூறினார். எப்பகுதி மக்கள் எத்தகைய நிலப் பிரபுக்களை எதிர்த்து நிற்கிறார்கள்? சமூக, சாதிக் கொடுமை களின் வரலாறு, அரிசன மக்களின் தலைவர்களாகவும், இப்புதிய இயக்கத்தின் வழிகாட்டிகளாகவும் விளங்கும் துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் எல்.டி. பால் வாத்தியார், டி.டி.சி. துரை, சண்முக வாத்தியார், பால்ராஜ் மற்றும் செட்டிமேடு ஆசிரியர் வெங்கிட்டு ஆகியோர்களைப் பற்றியும் எடுத்துக் கூறினார்கள். ஒவ்வொருவரைப் பற்றியும் என்.வி. அவர்கள் கூறிய

மொழிகள் அத்தனையும் அத் தோழர்களைப் புரிந்துகொள்ளவும், பழகவும், அணுகவும் பேருதவியாக இருந்தது. மடாதிபதிகளின் தாக்குதல்களை எதிர்த்துக் கடுமையாக நடந்த போராட்டத்திலும், மேல் சாதிக் கொடுமைகளை எதிர்த்து அரிசன மக்களைப் பாதுகாக்கவும் பல்வேறு சோதனைகளுக்கிடையே உறுதியாக நிற்பதற்கும் தோழர்களிடையே உணர்வு பூர்வமான உறவுநிலை இருப்பது அவசியமாக இருந்தது. தோழர் என்.வி. அவர்கள் முதலில் எனக்குக் கொடுத்த அறிமுக அறிவுரை மிகவும் பயன் பட்டது.

### விவசாயிகள் இயக்கத்தின் துணைவன்

வாரத்துக்கு ஒரு தடவை நான்குநேரி சென்று தோழர் வானமாமலை அவர்களைச் சந்திப்பேன். அவ்வப்போது ஏற்படும் சந்தேகங்களைக் கேட்பேன். நீண்ட விளக்கவுரை கிடைக்கும்; தெளிவு பெறு வேன்; இதன் மூலம் என்னை அறியாமலே ஒரு தெம்பு ஏற்படும்.

மாதம் இரு துண்டுப் பிரசுரங்களாவது கொண்டு வருவோம். ஏன் இந்தப் போராட்டம்? என்பதை விளக்கி துண்டுப் பிரசுரம் போடவேண்டி யிருக்கும். நேரடி இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர் களுக்கு ஆத்திரம் வருவது இயற்கை. என்னுடன் பணியாற்றி வந்த தோழர்களும், துண்டுப் பிரசுரம் கடினமான வார்த்தைகளில் இருக்க வேண்டு மென்று நினைப்பார்கள். தோழர் வானமாமலை அவர்களிடம் கலந்து துண்டுப் பிரசுரம் எழுதி அச்சுக்குக் கொடுத்துவிடுவேன். சிறுசிறு வாக்கியங்களாக இருக்கும். பிரச்சினைகளைத் தெளிவாக விளக்கக்கூடியதாக இருக்கும். கூடுமான வரை ஆட்களை எதிரிகள் பக்கம் சேர்க்க விடாமல் தடுப்பதே துண்டுப் பிரசுரத்தின் நோக்கமாக அமைந்திருக்கும். அதிலும் குறிப்பாக, பரம் பரையாகப் பல்லாண்டுகளாக பழக்கப்பட்டு வந்த சமூகக் கட்டுகளை அறுத்தெறியும் முயற்சியில் நிதானம் இல்லாமலிருந்தால், நாம் தனிமைப்பட்டு நிற்க வேண்டியிருக்கும்; பழமைக்கு புதுபலம் ஏற்பட்டுவிடும். தோழர் என்.வி. அவர்களிடம் இதுபற்றியும் பேசித் தெளிவு பெறுவது வழக்கம்.

1947 மே தினம் நாங்குநேரியில் விவசாயிகள் ஊர்வலம் நடத்தினோம். மறைந்த வில்லிசை வேந்தர் பிச்சைக்குட்டி அவர்கள் பேசுவதாக அறிவித்திருந்தோம். தோழர் வி.எஸ். காந்தி கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். ஊர் வலத்தில் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்டவர்கள். ஊர்வலத்தின் முன்பு தோழர்கள் என்.வி.யும் நானும் சென்றோம். தெற்கு மாடவீதி கடந்து கோவில் கல்மண்டபத்தில் காலெடுத்து வைத் தோம். கோவிலுக்குள் நுழைவதற்கு உத்தேசம் கிடையாது. இருந்தாலும் ஜீயர் மடத்துக் காவல் காரர்கள் கம்பு ஆயுதங்களுடன் வந்து தடுத்தார்கள். "கல்மண்டபத்து வழியாக வடக்குமாட வீதி செல்லு கிறோம். இதையும் தடுக்காதீர்கள். சாமியார் பேச்சைக் கேட்டு கெட்டுப் போகாதீர்கள். சட்டம் புதிசா வந்திருக்கு" என்று தோழர் என்வி. கண்டிப்பான குரலில் எடுத்துச்சொன்னார்.

"கிராம முன்சீப் தாதர் மகனே இப்படிச் சொன்னா, ஊரு விளங்குமா? எங்க சாதிக்காரனும் ஒருவன் உங்களோடு சேர்ந்திருக்கான்! விளங்க மாட்டாய்" என்று கோபத்தோடு பேசியும் முனகிக் கொண்டும் போனார்கள்.

'செல்லாக் கோபம் பொறுமைக்கு அழகு.' அப்போது எங்கள் பக்கம் கூட்டம் அதிகம். ஊர்வலத்தின் முடிவில் கூட்டம் நடந்தது. கூட்டம் முடிந்து எல்லோரும் சென்ற பின்னர் மடத்துச் சாமியாரின் தூண்டுதலில் நூற்றுக்கணக்கான அடியாட்கள் வந்தனர். இரவு கூட்டத்தை நடத்த விடாமல் கலகம் செய்து தடுத்துவிட்டார்கள்.

### ஆசிரியர் பணி

தோழர் என்.வி. ஜில்லா போர்டு உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி வந்தார். சுதந்திரமாகச் செயல்படுவதற்கு அரசு நிர்வாகத்துக்குட்பட்ட இடத்தில் வேலை செய்வது தடையாக இருந்தது.

ஜில்லா கல்வி அதிகாரிகளில் பலர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளாக இருந்தனர். 'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டிக்குரங்கு பத்தடி பாயும்' என்பார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின் அந்திம காலமாக இருந்தாலும், இந்திய அதிகாரிகள் அந்நிய ஆட்சிக்கு அடிமையாக இருந்தார்கள். தேசியத் தலைவர்களைப் பற்றி அவதூறாகப் பேசுவார்கள். தேசியத்தை ஆதரித்துப் பேசும் ஆசிரியர்கள் மீது விசாரணைகள், துவங்குவது வழக்கமாக இருந்தது. இதெல்லாம் தோழர் என்.வி.க்கு அறவே பிடிக்கவில்லை.

தேசிய உணர்வுக்குத் தடையில்லாமலும், முற்போக்குக் கருத்துக்களைக் கூற வாய்ப்பாகவும் சாத்தான்குளத்தில் துவக்க இருந்த தேசிய உயர் நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் பொறுப் பேற்கத் தயாராக இருந்தார். ஜில்லா போர்டு ஆசிரியர் பணியை ராஜினாமா செய்தார். எதிர் பார்த்தபடி, சாத்தான்குளத்தில் உயர்நிலைப் பள்ளி துவங்கப்படவில்லை. இதன் பின்னரே,

பாளையங்கோட்டையில் மாணவர் டியூட்டோரியல் கல்லூரியைத் துவக்கினார்கள்.

தோழர் என்.வி. பாளையங்கோட்டைக்கு வந்தது எல்லோருக்கும் பல வகையில் உதவியாக இருந்தது. புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டிருப் போரின் சந்திப்பு இடமாக இருந்தது. இதற்கேற்ப நெல்லை வட்டாரத்தில் பீடித் தொழிலாளர் போராட்டம், டி.எம்.பி.எஸ். மோட்டார் தொழி லாளர் போராட்டம், ரெயில்வே தொழிலாளர் போராட்டம், தச்சநல்லூர் கணபதி மில் தொழி லாளர் போராட்டம் - இவ்வாறு பல போராட்டங்கள் நடந்துவந்த காலம், இப்போராட்டங்களுடனும், சங்கங்களுடனும் தோழர் என்.வி. நேரடித் தொடர்பு கொண்டிருந்தார்.

1948-இல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. தோழர் என்.வியும் கைது செய்யப் பட்டார். விடுதலையடைந்த பிறகும் கட்சியோடிருந்த இணைப்பை விட்டுவிட வில்லை.

மார்க்சிய அறிவில் தேர்ச்சி பெற்றார். மேலும் மேலும் பல்வேறு ஆய்வு நூல்களை எழுதினார். இருப்பினும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியோடு இருக்கிற தொடர்பு வலுப்பட்டு வந்திருக்கிறது.

1970-இல் நடைபெற்ற நிலமீட்சிப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டார். சிறையில் ஒரு மாதத்துக்கு மேல் இருந்தோம். சிறையிலும் மார்க்சிய அறிவைப் புகட்டுவதில் சளைக்கவில்லை. உற்சாகம் குன்றாமல் உறுதியோடு சிறைவாசத்தைக் கழித்தார்.

திவான் ஜர்மன்தாஸ் என்பவர் மகராஜ் என்ற நூலை எழுதியிருந்தார். இந்திய சமஸ்தான மன்னர் களின் வாழ்க்கை நெறிகள், ஆடம்பரம், தேசத் துரோகம் பற்றியெல்லாம் நேரடி அனுபவத்தில் எழுதியிருந்தார். இதைச் சுருக்கி தோழர் என்.வி. கட்டுரைகளாக சாந்தியில் வெளியிட்டார்.

1971-இல் நடைபெற்ற தேர்தலில் மன்னர் மான்யம் ஒரு பிரச்சினையாக இருந்தது. அப் போது இக்கட்டுரைகள் பலனளித்தன.

பேராசிரியர் வானமாமலை அவர்களுடன் நெருங்கிப் பழகுவதில் அலாதியான அனுபவம் கிடைக்கும். வாரம் ஒருமுறை பேராசிரியரிடம் உரையாடச் சென்றால் எத்தனையோ நூல்களைப் படிப்பதனால் ஏற்படும் தெளிவும் பலனும் ஏற்படுவதுண்டு.

பேராசிரியர் எழுதிய நாடோடிப் பாடல் தொகுப்புகளும் கதைப் பாடல்களும் தமிழ் நாட்டில் கிராமப்புற மக்களின் பண்பாட்டையும், பழக்கவழக்கங்களையும் போர்க்குணத்தையும் புரிந்துகொள்ள உதவுகின்றன.

சோழ மன்னர்கள் காலத்திய நில உறவு முறை களைப் பற்றி பேராசிரியர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் புதிய வரலாற்றுக் கண்ணோட்டத்தைக் கொடுக்கின்றன.

'பூம்புகார்' திரைப்படம் வெளிவந்த நேரத்தில் அப்படத்தின் கதாசிரியர் திரு. கருணாநிதி செய் திருந்த கதை மாற்றத்தையும் கருத்துச் சிதைவையும் சுட்டிக்காட்டி ஒரு சிறுநூலை எழுதினார். அது சாதாரண மறுப்பு நூலாக இல்லாமல், ஒரு ஆய்வு நூலாக அமைந்தது.

சோவியத் எதிர்ப்பு 1974-75-வது ஆண்டுகளில் இந்தியாவில் புது உருவம் எடுத்தது. வளர்முக நாடுகளின் முன்னேற்றத்துக்காக சோவியத் ரஷ்யா செய்துவரும் உதவிகளினால் - இந்தியாவில் நட்புணர்வு வளர்ந்து வந்தது. இதைத் தடுக்க, முதலாளித்துவ அறிவாளிகளில் வக்கிரபுத்தி படைத்த சிலர் முனைந்தனர். 'துக்ளக்' பத்திரிக் கையில் ஆசிரியர் சோ எழுதி வந்த "இந்தியாவின் தலைநகர் மாஸ்கோ/டில்லி" என்ற தொடர் கட்டுரை மிகவும் நுணுக்கமானது. நடுநிலையாக இருக்கும் யாவரையும் சோவியத் உதவி பற்றி சிறிது சந்தேகத்தைக் கிளப்பிவிடும். இக்கட்டுரைகளுக்குப் பதில் எழுத வேண்டுவது அவசியமெனப் பலர் பேசிக் கொண்டோம். பாளையங்கோட்டையி லிருந்து பேராசிரியர் என்.வி. அவர்களும் தன்னிடம் பயிற்சி பெற்று வந்த மாணவன் மோகனும் சேர்ந்து 'துக்ளக்'குக்கு ஆணித்தரமான பதில் கொடுக்கும் தொடர் கட்டுரைகளை எழுதினார்கள். அவை ஜனசக்தியிலும், சாந்தியிலும் வெளிவந்தன.

தோழர் வானமாமலை-பேராசிரியர் என்.வி. ஆராய்ச்சியாளர் நா. வா. அவர்களைப் பற்றி ஏராளமாக எழுதலாம். முற்போக்குக் கருத்துள்ள அரசியல்வாதிகளுக்குச் சிறந்த கருத்துக் கருவூல மாகத் திகழ்கிறார். தமிழ் ஆய்வாளர்களுக்கு வழிகாட்டியாகத் துணை நிற்கிறார். தனிமனிதனாக இருந்தாலும், தமிழகத்தில் தனிச் சிறப்பு வாய்ந்த முறையில் 'ஆராய்ச்சி' இதழை வெளியிட்டு வருகிறார். ஆய்வும் அறிவும் தன்னோடு மட்டும் நின்றுவிடாமல், இத்துறையில் ஆர்வமுள்ளவர் களை ஒன்றாக இணைத்துப் பயிற்சி கொடுத்து, ஆய்வுரைகள் எழுதத் தூண்டும் முயற்சியிலும் வெற்றி கண்டு வருகிறார்.

பேராசிரியர் என்.வி. அவர்களின் முயற்சி மேலும் மேலும் வெற்றி பெற உறுதுணையாக நிற்போம்!

**- (நா.வா. மணிவிழா மலரிலிருந்து, 1978)**


KAAVYA TAMIL (QUARTERLY) APRIL - JUNE 2017
Regd No : TN TAM 8012 / 43610
பேரா.சு.சண்முகசுந்தரத்தின்
திரை ஆய்வு நூல்கள்
வைரமுத்து வரை - ரூ. 125/-
பாரதிராஜா மண்ணும் மக்களும்- ரூ. 300/-
அண்ணா திரை- ரூ. 100/-
கலைஞர் கலை இலக்கியத்தடம்- ரூ. 125/-
உடுமலை நாராயணகவி பாடல்கள்- ரூ. 350/-
பி.யு.சின்னப்பா- ரூ. 200/-
16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024
பேச : 044 - 23726882 , 9840480232
மின்னஞ்சல் : kaavyabooks@gmail.com
இணையம் : www.kaavyaa.com
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
22 சித்திரை
ஏப்ரல் - ஜூன் 2017
மலர் 6 இதழ் 2
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 100
காவ்யா தமிழ்
கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்
சுந்தரபாண்டியனின்
தீப்பாஞ்ச அம்மன்கள் நாடகம்
லலிதாம்பிகை அந்தர்ஜனத்தின்
பழிவாங்கும் தேவதை சிறுகதை (மலையாளம்)
தமிழில்: ஏ.எம்.சாலன்
பா.விசாலம் தொடர் கட்டுரை
தந்தைவழிக் குடும்பம் எனும் சாபக்கேடு
கழனியூரனின்
ஃப்ராயிலர் மனிதர்கள்
25 ஆய்வுக்கட்டுரைகள் மற்றும்
4 கவிதைகள்
பேரா.சு.சண்முகசுந்தரத்தின்
ஜல்லிக்கட்டு: தமிழ் சினிமாவும் அரசியலும்

# அசோகமித்திரன்: என்றென்றும் வாழும் கலைஞன்

பாவண்ணன்



கல்லூரியில் பட்டப்படிப்புக்காகச் சேர்ந்திருந்த நேரம். ஒரு ஞாயிறு அன்று காலை நேரத்தில் எங்கள் வீட்டருகே இருந்த நூலகத்தில் செய்தித்தாள் படிப் பதற்காகச் சென்றிருந்தேன். ஒரு மணி நேரத்தில் செய்தித்தாட்களையும் புதிய வார இதழ்களையும் படித்துவிட்டு, என்ன செய்வது என்று புரியாமல் அங்கிருந்த மேசைகள் மீது பார்வையைப் படர விட்டேன். அங்கிருந்த நூலகர் எனக்கு மிகவும் பழக்கமானவர். ஒரு பத்து நிமிடம் தனக்கு எதிரில் போடப்பட்டிருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந் திருக்கும்படி சொல்லிவிட்டு தேநீர் அருந்தச் சென்றார். அந்த நேரத்தில் யாரேனும் வாசகர்கள் வந்துவிட்டால், அவர்களுடைய கேள்விகளுக்குப் பொருத்தமான பதில்களைச் சொல்லி அவர் வரும்வரைக்கும் அப்படியே உரையாடலை இழுக்கவேண்டும். அதுதான் என் வேலை.

ஒரு நடுவயதுக்காரர் நெருங்கிவந்து "நூலகர் இல்லையா?" என்று கேட்டார். "இதோ வந்துடுவார். கடைக்கு போயிருக்காரு. உட்காருங்க" என்று அவருக்கு இருக்கையைக் காட்டினேன். அவர் கையில் இரண்டு புத்தகங்கள் இருந்தன. அதைப் பார்த்துவிட்டு நானாகவே "படிச்சிட்டீங்களா சார்? மாத்தணுமா?" என்று பேச்சை வளர்ப்பதற்காகக் கேட்டேன். அவர் புன்னகையோடு தலையசைத்தார். அவரிடமிருந்த புத்தகங்களை கைநீட்டி வாங்கி புத்தகத்தின் தலைப்பை மனதுக்

குள்ளேயே படித்தேன். 'வாழ்விலே ஒரு முறை'. இரண்டு மூன்று முறை எனக்குள் அதைச் சொல்லிப் பார்த்தேன். தலைப்புக்குக் கீழே அசோகமித்திரன் என்று இருந்ததையும் வாசித்தேன். உரையாடலைத் தொடரும் வகையில் "நல்லா இருக்குதா சார்?" என்று கேட்டேன். "ரொம்ப நல்லா இருக்குது. தெனமும் நம்ம பார்வையில படக்கூடிய விஷயங்கள்தான். ஆனால் அவர் எழுதியிருக்கறதப் பார்க்கும்போதுதான் அடடா இப்படியெல்லாம் நாம கவனிக்கலையேன்னு தோணுது" என்றார். பிறகு அவராகவே "நீ சின்னப் பையனா இருக்கியே, படிச்சா உனக்கு புரியாதுன்னு நெனைக்கறேன்" என்று சிரித்தார். அந்தக் கடைசி வார்த்தை என்னைச் சீண்டுவதுபோல இருந்தது. "அது எப்படி புரியாம போவும், புரியும் சார்" என்று பதில் சொன்னேன். அதற்குள் நூலகர் வந்துவிட்டார். வந்த வேகத்தில் பேரேட்டைத் திருப்பி புத்தகங்கள் வரவைப் பதிவு செய்துகொண்டு "உள்ள போய் புதுசா எடுத்துக்குங்க சார்" என்றார். பிறகு என் பக்கமாகத் திரும்பி "அவருகிட்ட என்னப்பா பேச்சு? கமிஷனர் ஆபீஸ் சூப்பிரன்டண்ட் அவரு, தெரியுமா?" என்று அடங்கிய குரலில் சொன்னார். போன வேகத்தில் கையில் இரு புத்தகங்களோடு அவர் வெளியே வந்தார். அவற்றைப் பதிவு செய்து கொடுத்ததும் வாங்கிக்கொண்டு போய் விட்டார்.

மேசையின் மீதே வைக்கப்பட்டிருந்த அசோகமித்திரனின் புத்தகத்தை உடனே எடுத்து நான் கையில் வைத்துக்கொண்டேன். பக்கங்களை மெதுவாகப் புரட்டினேன். நிறைய சிறுகதைகள் இருந்தன. புரட்டிய வேகத்தில் ரிக்‌ஷா என்னும் தலைப்பைப் பார்த்துவிட்டு படிக்கத் தொடங்கினேன். மிகச்சிறிய கதை. ஒரே மூச்சில் படித்துவிட்டேன். என்னால் நம்பவே முடியவில்லை. இப்படிக்கூட கதை எழுத முடியுமா என்று ஆச்சரியமாக இருந்தது. மகிழ்ச்சியாகவும் இருந்தது. எனது முகம் மலர்ந்ததைப் பார்த்துவிட்டு "என்ன, என்ன?" என்று கேட்டார் நூலகர். நான் அவரிடம் அக்கதையைக் காட்டி படிக்கும்படி சொன்னேன். இரண்டு மூன்று நிமிடங்களில் படிக்கக்கூடிய கதைதான். அவரும் படித்துவிட்டு புன்னகைத்தார். எனக்கு அந்தப் புத்தகத்தை முழுமையாகப் படிக்கவேண்டும் என்று தோன்றியது. ஞாயிறு அன்று அரைநாள்தான் நூலகம் என்பதால் உணவு இடைவேளை சமயத்தில் அவர் எல்லாவற்றையும் எடுத்துவைத்துவிட்டு புறப்படுவதற்கு முன்னால் "நான் அந்தப் புத்தகத்தை எடுத்துப்போயி படிச்சிட்டு தரட்டுமா?" என்று கேட்டேன். அப்போது நான் உறுப்பினர் இல்லை. ஆனால் எங்கள் நட்பின் அடையாளமாக புத்தகம் எடுக்க அவர் என்னை அனுமதித்து வந்தார். சம்மதத்துக்கு அடையாளமாக அவர் தலையசைத்ததும் அதை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றுவிட்டேன்.

சாப்பாட்டுக்குப் பிறகு மறுபடியும் அந்தக் கதையைப் படித்தேன். படிக்கப்படிக்க அந்தக் கதையின் சம்பவம் என் மனத்துக்குள் ஒரு நாடகக்காட்சி போல விரிவடைந்தது. ஒரு சிறுவன். அவன் அப்பா. அம்மா. மூன்று பேர்தான் கதைப்பாத்திரங்கள். சிறுவன் ரிக்‌ஷா என்னும் சொல்லை ரிஷ்கா என்று மாற்றி உச்சரிப்பதை தற்செயலாக அவன் அப்பா கண்டுபிடிக்கிறார். திருத்த முயற்சி செய்த பிறகும் அவன் நாக்கில் அந்தப் பிழையான சொல்லே எழுகிறது. அவன் அப்பா மறுபடியும் திருத்துகிறார். ஒவ்வொரு எழுத்தாகச் சொல்லி ஒன்றிணைத்துச் சொல்லவைக்க முயற்சி செய்கிறார். ஒவ்வொரு முறையும் அவர் முயற்சி தோல்வியிலேயே முடிகிறது. அத்தருணத்தில் காய்கறி வாங்கச் சென்ற மனைவி வீட்டுக்குத் திரும்பி வருகிறாள். வந்த பிறகுதான் அவளுக்குத் தன் குடையை மறந்து வைத்துவிட்டுத் திரும்பியது தெரியவருகிறது. மறுபடியும் கடைவரைக்கும் நடந்து செல்லவேண்டுமே என்னும் அலுப்பு அவளுக்கு. அருகில் நின்றிருந்த கணவன் "ரிஷ்காவில போய் வந்திடேன்" என்று சொல்கிறான். மனைவி குழப்பத்துடன் ஒருமாதிரி அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு "என்ன சொன்னீர்கள்?" என்று கேட்கிறாள். அக்கணத்தில் அவனையறியாமலேயே அவன் மனம் அந்தப் பிசகைத் திருத்திக்கொள்கிறது. "ரிக்‌ஷாவில் போய் வந்திடேன்னு சொன்னேன்" என்கிறான். "என் காதுல என்னமோ ரிஷ்கான்னு சொன்னமாதிரி விழுந்தது" என்றபடி அவள் செல்கிறாள்.

அக்கணத்தில் அந்தக் கதை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. அதை எழுதிய அசோகமித்திரனையும் பிடித்துவிட்டது. அன்று முதல் எனக்குப் பிடித்த எழுத்தாளராக அவரை நினைக்கத் தொடங்கினேன். அப்போது படிமம், உருவகம், உட்பொருள் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் பெரிய அளவில் தெளிவெதுவும் இல்லாத கல்லூரி மாணவன் நான். படிக்கச் சுவையாக இருப்பவை அனைத்தையும் தேடித்தேடிப் படிக்கும் பழக்கம் கொண்டவன். ரிக்‌ஷா சிறுகதையை அப்படியே மனத்தில் பதிய வைத்துக்கொண்டேன். இன்றும் என் பிரியத்துக்குரிய சிறுகதை இது. படிமங்களும் உருவகங்களும் கூடுதலான விளக்கங்களோடு கடந்து சென்று தொடும் புள்ளியை, ரிக்‌ஷா மிக எளிமையாகச் சென்று தொடுவதை இப்போது என்னால் கண்டடைய முடிகிறது. சிறுவனுக்கு மட்டுமா வாய்ப் பிசகு வருகிறது, பெரியவர்களுக்கும் வருகிறது. பிசகு ஒன்றும் பெரிய விஷயமேயில்லை. அதுவும் இயற்கை

யானதுதான். வாழ்க்கையில் சொல்லில் மட்டுமா பிசகு நேர்கிறது? பேச்சு, குணம், பணவிவகாரம், நடத்தை என எல்லாக் களங்களிலும் பிசகுகள் கொட்டிக் கிடக்கின்றன. எல்லாப் பிசகுகளையும் உள்ளடக்கியது தானே வாழ்க்கை. இப்படி யோசிக்க யோசிக்க ஒரு புகாருமில்லாத அனுபவமாக வாழ்க்கை அமைந் திருப்பதை உணர்ந்துகொள்ள முடிகிறது.

ஒரு கோணத்தில் அசோகமித்திரன் பிற்காலத்தில் எழுதிய இருநூற்றி ஐம்பது சொச்ச கதைகளுக்குமான ஒரு பொது அடித்தளம் அவர் எழுதத் தொடங்கிய ஆரம்பக் கட்டத்திலேயே உருவாகிவிட்டதை இப்போது உணர முடிகிறது. எவ்விதமான புகாரு மில்லாமலேயே இந்த வாழ்க்கையை வாழ்ந்து முடிக்க முடியும் என்பதுதான் அவர் குரல். அதன் பொருள், இந்த வாழ்வு புகார் சொல்ல முடியாத அளவு கண்ணிய மாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கிறது என்பதல்ல. முட்களால் நிறைந்த பாதைதான் அது. ஆனால் ஒரு சாமானிய மனிதனுக்கு நினைப்பதற்கும் ஆற்றுவதற்கும் ஏராளமான பொறுப்புகளும் கடமை களும் எல்லாத் தருணங்களிலும் காத்திருக்கின்றன. முட்களைப் பற்றி யோசிக்கக்கூட பொழுதில்லாமல் தாவித்தாவி ஓடிக்கொண்டே இருப்பவன். புகார் எனச் சொல்வதற்கு கோடிக்கணக்கான விஷயங்கள் இந்த உலகத்தில் இருந்தாலும் அவனுடைய சொந்த வாழ்க்கை அவற்றைவிட பொருட்படுத்தத்தக்க சுமை களோடு அழுத்திக்கொண்டிருப்பதால் அந்தச் சாமானியன் குரலெழுப்பாமல் தன்னைத் தானே அமைதிப்படுத்தியபடி ஓடிக்கொண்டே இருக்கிறான்.

அந்த வாரம் முழுக்க அசோகமித்திரனுடைய சிறுகதைகளை மீண்டும் மீண்டும் படித்தபடி இருந்தேன். பல சிறுகதைகள் பால்ய காலச் சம்பவங்களின் விவரிப்பைக் கொண்டிருந்ததால், அவற்றுடன் மிக எளிதாக ஒன்றி விட்டேன். அதற்குப் பிறகு அவருடைய படைப்பை எந்தப் பத்திரிகையில் பார்க்க நேர்ந்தாலும், அதைப் படிக்காமல் கடந்துபோனது கிடையாது.

தீபம் இதழில் என்னுடைய முதல் சிறுகதை வெளி வந்தது. அடுத்த சிறுகதை அதே ஆண்டில் கணை யாழியில் வெளிவந்தது. அந்தச் சிறுகதை பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் விவரத்தைத் தாங்கி வந்த அஞ்சலட்டையை அசோகமித்திரன் எழுதியிருந்தார். அன்று முழுக்க அவர் எழுதிய நான்கு வரிகளை பித்துப் பிடித்ததுபோல மீண்டும் மீண்டும் படித்தபடி இருந்தேன். என் இளமையில் நான் விரும்பிப் படித்த எழுத்தாளர் எனக்கு எழுதிய முதல் கடிதம். இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கணையாழியில் நான் எழுதிய ‘முள்’ என்னும் சிறுகதைக்கு இலக்கியச் சிந்தனை விருது கிடைத்தது. அதையொட்டி அவர் எனக்கு வாழ்த்துத் தெரிவித்திருந்த அஞ்சலட்டையையும் ஒரு பாராட்டுப்பத்திரம் போல வெகுகாலம் பாதுகாப்பாக வைத்திருந்தேன். வீடு மாற்றும் சமயத்தில் ஏராளமான கடிதங்களைக் கொண்ட ஒரு பெரிய கோப்பே காணாமல் போய்விட்டது. ‘வேர்கள் தொலைவில் இருக்கின்றன’ என்னும் தலைப்பில் என்னுடைய முதல் சிறுகதைத்தொகுதி *1987* ஆம் ஆண்டில் வெளிவந்தது. நான் அத்தொகுதியை அசோகமித்திரனுக்கு அனுப்பி வைத்திருந்தேன். அடுத்த மாதத்தில் கணையாழியில் நாலைந்து வரிகள் கொண்ட ஒரு சிறிய குறிப்பை அசோகமித்திரன் எழுதியிருந்தார். அந்தத் தொகுதிக்குக் கிடைத்த முதல் அங்கீகாரம் அது.

எப்போதோ ஒருமுறை சென்னைக்குச் சென்றிருந்த சமயத்தில் இலக்கியக்கூட்டமொன்றில் அவரைச்

**“ எவ்விதமான புகாருமில்லாமலேயே இந்த வாழ்க்கையை வாழ்ந்து முடிக்கமுடியும் என்பதுதான் அவர் குரல். அதன் பொருள், இந்த வாழ்வு புகார் சொல்ல முடியாத அளவு கண்ணியமாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கிறது என்பதல்ல. ”**

சந்தித்து அறிமுகப்படுத்திக்கொண்டேன். “ரொம்ப சின்ன வயசா இருக்கிறியேப்பா” என்று தோளை அழுத்திக் கொண்டார். மெலிந்து உயர்ந்த அவருடைய உடல்வாகு எங்கள் பெரியப்பாவின் உடல்வாகைப் போல இருந்தது. ஆனால் அதை அவரிடம் சொல்ல வில்லை. அந்த முதல் முறைக்குப் பிறகு ஏராளமான முறைகள் அவரைப் பார்த்ததுண்டு. ஒவ்வொரு முறையும் அந்த முதல் கணத்தில் எங்கள் பெரியப்பாவின் முகம் நினைவில் படர்ந்து கலையும்.

“உங்க பேர கேட்கும்போதெல்லாம் முத்து கோர்த்த மாதிரி இருக்கிற உங்க அழகான கையெழுத்துதான் ஞாபகத்துக்கு வருது. கொஞ்சம் கூட

வளைவு நெளிவு இல்லாம ஒவ்வொரு வரியும் கோடு போட்ட மாதிரி இருக்கும். படிக்கும்போதே எனக்கு ஆச்சரியமா இருக்கும், இந்தப் பையன் எப்படி இவ்வளவு கச்சிதமா எழுதறான்னு..."

பாராட்டுணர்வோடு அவர் சொன்ன அந்தச் சொற்கள் இன்னும் நினைவில் உள்ளன. தொடர்ந்து அவர் என்னிடம் "கார்பன் வச்சி எழுதுவிங்களா?" என்று கேட்டார். "ஆமாம் சார்" என்று தலையசைத்தேன். "அப்படித்தான் வச்சிக்கணும். பத்திரிகை ஆபீஸ்லேருந்து திரும்பி வரும்ன்னு எதிர்பார்க்கக்கூடாது. நாள பின்ன தொகுப்பு போடணும்னா ரொம்ப உதவியா இருக்கும்" என்றார். பிறகு அன்றைய பேச்சு எப்படியோ படிக்கத் தக்க எழுத்தாளர்களுடைய பட்டியலின் திசையில் போய்விட்டது. நான் ராதுகா பப்ளிகேஷனும், சாகித்ய அகாதெமியும், நேஷனல் புக் டிரஸ்டும் வெளியிட்டிருக்கும் புத்தகங்களையும் ஆசிரியர்களையும் பற்றி சொல்லத் தொடங்கினேன். எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்ட பிறகு அவர் மெதுவான குரலில் "வில்லியம் சரோயன்னு ஒரு எழுத்தாளர். நீங்க அவசியம் படியுங்க. உங்களுக்கு ரொம்ப புடிக்கும்" என்றார். தொடர்ந்து 'தமிழ்லயே கெடைக்குது. க.நா.சு. மொழிபெயர்த்திருக்காரு. நீங்கதான் தேடிக் கண்டுபிடிக்கணும்" என்றார். அடுத்த ஒரு வருடத்தில் நான் அந்தப் புத்தகத்தைக் கண்டு பிடித்து விட்டேன். பெங்களூர்த் தமிழ்ச்சங்க நூலகத்தில் கிடைத்தது. ஒரு வாரத்தில் அத்தொகுதியின் எல்லாக் கதைகளையும் படித்துவிட்டு அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அவர் ஓர் அஞ்சலட்டையில் தன் மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தி உற்சாகமூட்டி எழுதியிருந்தார். அதற்கடுத்த மாதத்திலேயே பெங்களூரில் பிரீமியர் புக் ஸ்டால் என்னும் பெயரில் புத்தகக்கடை நடத்தி வந்த நண்பரிடம் சொல்லி 'த ஹம்மிங் பேர்ட் தட் லிவ்விட் த்ரூ விண்டர்' என்னும் தலைப்பில் வந்திருக்கும் சரோயனின் சிறுகதைத் தொகுதியை வாங்கிப் படித்துவிட்டேன். உடனே அவருக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டேன். தன் இளமைக்காலத்தில் அத்தொகுதியை அவர் விரும்பிப் படித்ததாகக் குறிப்பிட்டு பதில் எழுதியிருந்தார்.

1990ஆம் ஆண்டில் ஐந்து நாட்கள் தொடர்ச்சியாக அவரோடு உரையாடியபடி இருக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது. இளம் எழுத்தாளர்களுக்கான ஒரு சிறுகதைப்பட்டறையை சாகித்திய அகாதெமி தில்லியில் ஏற்பாடு செய்திருந்தது. அமெரிக்காவிலிருந்து சில எழுத்தாளர்கள் வந்திருந்தார்கள். இந்திய மொழிகளிலிருந்தும் சில முக்கியமான எழுத்தாளர்கள் வந்திருந்தார்கள். ஒவ்வொரு மொழி சார்பாகவும் ஐந்து இளம் எழுத்தாளர்கள். அவர்களோடு உரையாடுபவர்களாக ஒரு இந்திய எழுத்தாளர். ஒரு அமெரிக்க எழுத்தாளர். எங்கள் குழுவில் திலீப்குமார், கார்த்திகா ராஜ்குமார், லதா ராமகிருஷ்ணன், காவேரி ஆகியோரோடு நானும் இருந்தேன். எங்களுடைய ஒருங்கிணைப்பாளர்கள் அசோகமித்திரன் மற்றும் லெஸ்லி எப்ஸ்டீன். அந்த அனுபவம் மறக்க முடியாத ஒன்று. அசோகமித்திரன் பல சிறுகதைகளை முன்வைத்து அதில் பிரிந்து செல்லும் அல்லது ஒன்றிணையும் தளங்களையும் கோடுகளையும் தமக்கே உரிய எளிய நகைச்சுவை உணர்வோடு சொல்லிக்கொண்டே இருந்தார். அவரோடு திலீப்குமாரும் இணைந்து பல படைப்புகளை முன்வைத்து உரையாடல் வளர்ந்து செல்ல உதவியாக இருந்தார்.

அசோகமித்திரனுடைய எல்லாப் படைப்புகளையும் நான் அந்த நேரத்தில் படித்து முடித்திருந்தேன். தமிழில் அழகிரிசாமியை அடுத்து நான் விரும்பும் எழுத்தாளராக அவர் இருந்தார். ஒருமுறை அதை நான் அவரிடமே தயங்கித்தயங்கி நேரிடையாகச் சொன்னேன். அவர் ஒரு மெலிதான புன்னகையோடு கைவிரல்களை உயர்த்தி மூடிய உதடுகள் மீது ஒருமுறை வைத்து எடுத்துவிட்டு "அப்படிலாம் தடால்புடால்னு ஸ்டேட்மெண்டா சொல்லக்கூடாது. தப்பு தப்பு" என்றார். ஒரு கணம் கழித்து "நாளபின்ன யாராச்சும் மடக்கி கேள்வி கேக்கும்போது பதில் சொல்லமுடியாம போயிட்டா சங்கடமா இருக்கும்" என்று சிரித்தார். வாய்விட்டு புன்னகைக்கும்படி இருந்தது அவர் சொன்ன தோரணை.

மழை, அம்மாவுக்காக ஒரு நாள், ஐந்நூறு கோப்பைத் தட்டுகள், விமோசனம், பார்வை, பிரயாணம், எலி, புலிக்கலைஞன், நானும் ஜே.ராமகிருஷ்ணராஜுவும் சேர்ந்து எடுத்த படம், பூனை, தந்தைக்காக, விடிவதற்குள், உண்மை வேட்கை, முறைப்பெண், அப்பாவின் சிநேகிதர், குகை ஓவியங்கள் என எப்போதும் அவர் கதைகளைக்கொண்ட ஒரு பட்டியல் நினைவிலேயே இருக்கும். நண்பர்களிடையே உரையாடும்போது அவருடைய படைப்புகளைப்பற்றி பேசவேண்டிய வாய்ப்பு அமையும்போது, ஏதேனும் ஒரு கதையிலிருந்து என்னால் எளிதில் தொடங்கிவிட முடியும். அந்த அளவுக்கு அவருடைய படைப்புகள் எனக்குள் கரைந்துபோயிருந்தன.

எண்பதுகளில் கலை இலக்கியம் என்னும் தலைப்பை முன்வைத்து மூன்று நாள் கருத்தரங்கம் ஒன்றை கோ.ராஜாராம், தமிழவன், ஜி.கே.ராமசாமி. ஜி.எஸ்.ஆர்.கிருஷ்ணன் போன்ற நண்பர்களைக் கொண்ட பெங்களூர் வாசகர் வட்டமும், மதுரை

தமிழ்ப்பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தியது. அதில் ஒரு அமர்வில் தொடக்க உரை நிகழ்த்துவதற்காக அசோகமித்திரன் அழைக்கப்பட்டிருந்தார். அவருக்கு அடுத்த அறையில் நான் தங்கியிருந்தேன். அந்தக் கருத் தரங்கத்துக்கு ஒரு சில வாரங்களுக்கு முன்னால்தான் அவர் குங்குமம் இதழில் ‘விடுவிப்பு’ என்னும் சிறு கதையை எழுதியிருந்தார். மனநிலைகளில் உருவாகும் மாற்றங்களை மிகவும் துல்லியமாகப் பதிவு செய்திருக்கும் படைப்பு அது. எனக்கு அது மிகவும் பிடித்திருந்தது. அன்று இரவு வெகுநேரம் அந்தக் கதையைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தேன். அந்தச் சிறை அனுபவத்தி லிருந்து அவருடைய உரையாடல் எப்படியோ சிறையி லிருந்து தப்பிப்பவர்களின் கதைகளை நோக்கி நகர்ந்து விட்டது. முதலில் அவர் ஹென்றி ஷாரியரின் பாபி லோன் (ரா.கி.ரங்கராஜன் மொழிபெயர்ப்பில் தொடராக வந்த ‘பட்டாம்பூச்சி’ நாவல்) கதையைப் பற்றிச் சொன்னார். பிறகு அலெக்ஸாண்டர் டூமாஸின் பிரபலமான கதையொன்றைப் பற்றி விவரித்தார்.

வேறொரு தருணத்தில் திருச்சூரில் நடைபெற்ற கலைவிழாவில் அவரும் நானும் அடுத்தடுத்த அறை களில் தங்கியிருந்தோம். கூட்டுக்குடும்பங்களின் சிதைவையும் தனிக்குடும்பங்களின் தோற்றத்தையும் இந்திய நாவல்கள் வழியாகக் கிடைக்கும் சித்திரங்களை முன்வைத்து ஆய்வு செய்யும் நோக்கில் ஒரு பெரிய கருத்தரங்கம் ஏற்பாடாகியிருந்தது. தகழி, மகாஸ்வேதா தேவி, அசோகமித்திரன், எம்.டி.வாசு தேவன் நாயர் போன்ற ஆளுமைகள் அமர்ந்திருந்த வரிசையில் நானும் அமர்ந்திருந்த அக்கணங்களை என்னால் ஒருபோதும் மறக்கவே முடியாது. அசோக மித்திரன் அன்று பிரேம்சந்த், சரத்சந்திரர் ஆகியோரின் படைப்புகளில் தொடங்கி ஆர்.ஷண்முகசுந்தரத்தின் ‘நாகம்மாள்’ வரைக்கும் தொட்டு அழகாக புள்ளி வைத்து ஒரு கோடு இழுத்ததுபோல குடும்ப அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி இருபது நிமிட நேரம் உரை நிகழ்த்தினார். கிட்டத்தட்ட அதே சாயலில்தான் நானும் என் உரையைத் தயார் செய்திருந் தேன். மண்பொம்மை என்னும் பெயரில் வந்திருந்த ஒரு ஒரிய நாவலில் தொடங்கி, சிவராம காரந்தின் நாவல்கள், எம்.டி.வாசுதேவன் நாயரின் அசுரவித்து வழியாக நிலைகுலைந்து விலகும் குடும்பங்களின் சித்திரங்களைத் தொகுத்து அன்று நான் உரையாடினேன். அந்த ஆங்கில உரையை அவர் மிகவும் விரும்பிக் கேட்டார். அன்று இரவும் நாங்கள் வெகுநேரம் உரை யாடினோம். தனக்குத் தெரிந்து சிதறிப் போன பல கூட்டுக் குடும்பங்களின் கதைகளை அவர் தன் நினைவி லிருந்து சொல்லிக்கொண்டே இருந்தார். பெரிய கதைச்சுரங்கம் அவர் என்பது அக்கணத்தில் எனக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது. “ஞாபகம் இருக்கும்போதே இதயெல்லாம் எழுதி வைக்கணும். எப்போ எழுதப் போறேன்னுதான் தெரியலை” என்றார்.

அடுத்தடுத்து அவர் நாவல்கள் வரும் போதெல்லாம் நான் ஆவலோடு அவற்றை வாங்கிப் படிப்பேன். அவர் ஒருமுறை கூட அந்தக் கருவை மையமாக்கி எழுதவே இல்லை. மறந்திருக்கக்கூடும் என்று நானும் நினைத்துக் கொண்டேன். ஆனால் இருபதாண்டுகளுக்குப் பிறகு அவருடைய ‘யுத்தங்களுக்கிடையில்’ நாவலைப் படித்தபிறகு என் எண்ணம் பொய்த்துவிட்டது. முதல் உலகப்போர் நடைபெற்ற காலத்துக்கும் இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற காலத்துக்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் ஒரு பெரிய குடும்பம் அல்லது சில குடும்பங்களின் தொகுதிகளிடையே நிகழ்ந்த உறவு மோதல்கள்தான் நாவலின் களம். முப்பதுகள் மற்றும் நாற்பதுகளின் வாழ்க்கை சிறிதுகூட மிகையில்லாமல் எழுத்தில் கட்டியெழுப்பியிருந்தார்.

அதற்கு அடுத்த ஆண்டில் ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக அவர் பெங்களூருக்கு வந்திருந்தார். சுசித்ரா ஃபிலிம் சொசைட்டி கருத்தரங்க வளாகத்தில் அந்தக் கருத்தரங்கம் நடைபெற்றது. தொடக்கக் காலத்தில் அவர் ஆங்கிலத்தில் சிறுகதை எழுத முயற்சி செய்ததையும், அச்சிறுகதை பெங்களூரி லிருந்து வந்த டெக்கன் ஹெரால்ட் ஆங்கில இதழில் பிரசுரமானதையும் நினைவுக்குக் கொண்டு வந்து பார்வையாளர்களிடம் அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். திடீரென நிகழ்ந்த ஒரு மனமாற்றத்தின் காரணமாக ஆங்கிலத்தில் எழுதுவதை நிறுத்திவிட்டு முழுக்க முழுக்க தமிழில் எழுதும் எழுத்தாளராகவே வாழ்ந்துவிட்டதாக சொன்னார். தன் இளமையில் அவர் படித்த புத்தகங்கள், அவருடைய அப்பாவுக்கும் அவருக்கும் இடையிலிருந்த நெருக்கமான உறவு, குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் தமிழ் வாசிப்பில் பழக்குவதற்காக அவர் எடுத்த முயற்சிகள், அவர் பார்த்த திரைப்படங்கள் என ஒரு அரைமணி நேரம் நன்றாக உரையாடினார். கையோடு எடுத்துச் சென்றிருந்த ‘யுத்தங்களுக்கிடையில்’ நாவலில் அவரிடம் கை யெழுத்தை வாங்கி வைத்துக்கொண்டேன். அந்தப் புத்தகத்தை அவர் ஏதோ புதியதொரு புத்தகத்தைப் புரட்டுவது போல ஒருகணம் கையிலேயே வைத்துக் கொண்டு திருப்பித்திருப்பிப் பார்த்தார். பிறகு மெதுவாக, “இத எழுதனது ரொம்ப நல்லதா போச்சி. இத எழுதி முடிச்சதுக்கப்புறம்தான் ஞாபக சக்தியில ஏதோ கோளாறு. எல்லாமே மறந்தமாதிரி போயிட்டது. அன்னைக்கு இத நான் எழுதலைன்னா, எழுத

முடியாமயே போயிருக்கும். இப்ப இந்த நாவல்ல இருக்கிற சம்பவங்கள் எதுவுமே எனக்கு ஞாபகத்துல இல்லை" என்றார். சில கணங்களுக்குப் பிறகு, "வயசாயிட்டுதில்லையா? இது எல்லாமே சகஜம்தான்" என்று சிரித்தபடியே புத்தகத்தை என்னிடம் திருப்பித் தந்தார். என்னோடு வந்திருந்த நண்பர்கள் சம்பந்தம், விஜயன் ஆகியோருக்கும் அவர்களுடைய புத்தகங்களில் அசோகமித்திரனிடம் கையெழுத்து வாங்கி அளித்தேன்.

1956 ஆம் ஆண்டில் அசோகமித்திரனுடைய முதல் சிறுகதை வெளிவந்தது. 2017 இல் போன மாதம் கூட அவருடைய சிறுகதை வெளிவந்தது. ஏறத்தாழ அறுபது ஆண்டு காலம் அவருடைய தொடர் இயக்கம் மிக முக்கியமானது. வற்றாத ஊக்கத்தோடு செயல்படும் வகையில் அவர் மனம் கலைநுட்பங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தது. அவருடைய சிறுகதைகளில் வெளிப்படும் மனிதர்கள் மிகமிக எளியவர்கள். பெரும்பாலும் நடுத்தட்டு மனிதர்கள். சின்னச்சின்ன வேலைகளைச் செய்து வாழ்க்கையை ஓட்டுகிறவர்கள். அவர்கள் தம் தினசரி வாழ்க்கையில் சந்திக்க நேரும் கூர்மையான சம்பவங்களையே அவர்தம் படைப்பு களுக்கான மையங்களாக அமைத்துக்கொள்கிறார். ஆயிரம் பிரச்சினைகளுக்கு நடுவில் அந்த மனிதர்கள் வாழ்கிறார்கள். ஆனால் எந்த இடத்திலும் அவர்கள் ஒடுங்கி நின்றுவிடுவதில்லை. வலிகளையும் வேதனை களையும் புறந்தள்ளிவிட்டு போய்க்கொண்டே இருக் கிறார்கள். தன்னிரக்கத்துக்கு இரையாகாத அந்த மனிதர்கள் வாழ்க்கையை அசோகமித்திரனின் சிறுகதைகள் ஒரு வரலாற்று ஆல்பம் போலத் தொகுத்து வைத்திருக்கின்றன. அவருடைய சிறுகதைகளில் வெளிப் படும் எளிமை ஒரு சாதாரண பத்திரிகை எழுத்தின் எளிமை அல்ல, ஆழ்ந்த நுட்பத்தின் துணையோடு வெளிப்படும் எளிமை. உத்தி சார்ந்த எந்த நாட்டமும் அவரிடம் தென்பட்டதில்லை. ஆனால் உத்திகள் வழியாகச் சென்றடையத்தக்க தொலைவைவிட அதிக தொலைவை அவருடைய கதைகள் எட்டித் தொடும் ஆற்றல் கொண்டவை. அவருடைய அனைத்துக் கதை களுமே இரண்டாவது வாசிப்பையும் மூன்றாவது வாசிப்பையும் கோருபவை. அசோகமித்திரனுடைய கதையின் இறுதி வாக்கியத்தைப் படிக்கும் வாசகர்கள் மிக இயல்பாகவே கதையின் முதல் பத்தியைத் திருப்பி மீண்டும் படிக்கத் தொடங்குவதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன்.

உலக இலக்கிய அடையாளத்தை நவீன தமிழ் இலக்கியம் பெறும் வகையில் ஆழமும் நுட்பமும் பொருந்திய படைப்புகளை தொடர்ச்சியாக எழுதி வழங்கியவர் அசோகமித்திரன். அந்த அனைத்துப் பெருமைகளையும் ஒருபோதும் சுமக்காமல் ஒதுக்கி வைத்துவிட்டு மிக எளிமையாக அனைவரோடும் பழகியவர். அவருடைய எளிமையைப்பற்றிய பேச்சு வரும்போதெல்லாம் புதுவையில் வசிக்கும் என்னுடைய நெருங்கிய நண்பர் சிவக்குமார் தன்னுடைய அனுபவத்தை மீண்டும் மீண்டும் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். தொண்ணூறுகளின் தொடக்க ஆண்டில் அவர் ஒரு கருத்தரங்கை புதுச்சேரியில் ஏற்பாடு செய்திருந்தார். கருத்தரங்கம் எளியதொரு சத்திரத்தின் கூடத்தில் நடைபெற்றது. அசோகமித்திரன் மீது அவருக்கு மிகுந்த மதிப்பு உண்டு. ஓர் ஆர்வத்தில் அவருக்குக் கடிதம் எழுதினார். அவரும் ஒப்புதல் கொடுத்துவிட்டார். கருத்தரங்கம் நிகழவிருந்த அன்று காலையில் அவர் அந்தச் சத்திரத்தைத் தேடிக்கொண்டு வந்துவிட்டார். நண்பருக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. எப்படி எங்கே தங்கவைப்பது என்று தடுமாறிவிட்டார். அசோகமித்திரன் அவரை அமைதிப்படுத்தி அந்தக் கூடத்திலேயே அமர்ந்துகொண்டார். மாலையில் தன் உரையை முடித்துக்கொண்டதும் அவரை அழைத்துச் சென்ற சிவக்குமார் உணவு விடுதியொன்றில் சிற்றுண்டி அருந்தச் செய்த பிறகு பேருந்து நிலையத்துக்கு அழைத்துச் சென்றார். மிகுந்த தயக்கத்தோடு ஓர் உறையில் இருநூறு ரூபாயை வைத்து அசோக மித்திரனிடம் கொடுத்திருக்கிறார். அவரோ புன்னகை மாறாத முகத்துடன் அதை அவரிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார். "எனக்கும் உங்க கூட்டத்துல பேசணும்னு ஆசையா இருந்தது. அதான் வந்தேன். பணம்லாம் தேவையில்லை. வேற யாருக்காவது கொடுக்க தேவைப்படலாம். வச்சிக்குங்க" என்று சொல்லிவிட்டு வண்டியேறிப் போய்விட்டார். கருத்தரங்கத்துக்கு வந்திருந்த அனைவரும் பணத்தைப் பெற்றுக்கொள்ள, அதை மறுத்துச் சென்ற ஒரே எழுத்தாளர் அசோக மித்திரன் மட்டுமே. சிவக்குமார் அந்தச் சம்பவத்தை நேற்று நடைபெற்றதுபோல ஒவ்வொரு முறையும் சொல்லும்போது உணர்ச்சிவசப்படுவதைப் பார்த்திருக் கிறேன்.

அசோகமித்திரன் எளிய உள்ளம் கொண்டவர். பழகுவதற்கு இனியவர். அவர் நம்மைவிட்டு மறைந்தார் என்பதை மனம் நம்ப மறுத்தபடியே இருக்கிறது. 24.03.2017 அன்று நிகழ்ந்த மரணம் அவருடைய பௌதிக இருப்பை மட்டுமே இல்லாமலாக்கிவிட்டது. நம் மொழியிலும் நம் மனத்திலும் உறையும் அவருடைய இருப்புக்கு ஒருபோதும் அழிவே இல்லை. அவருடைய ஒரு சிறுகதையின் தலைப்பைப்போலவே அது அழிவற்றது. என்றென்றும் நம்மிடையே வாழ்ந்தபடி இருக்கும். அசோகமித்திரனுக்கு நம் அஞ்சலிகள். ●

# தஞ்சை மராட்டிய மன்னர்களின் மருத்துவக் கொடை

டாக்டர் சு.நரேந்திரன்

இந்திய துணைக் கண்டத்தில் மிகவும் செழிப்பான காவிரி பாயும் பிரதேசமாகிய தஞ்சாவூர் நாட்டை 1676-1855-ஆம் ஆண்டு வரை 12 அரசர்கள் ஆண்டு வந்துள்ளார்கள், இதில் 6 அரசர்கள் கலைகளைப் போற்றி வளர்த்தவர்கள். இந்த அறுவரில் மூன்று அரசர்கள் தாங்களே பெரும் அறிஞர்களாகவும் இருந்து கலைகளை வளர்த்தவர்கள்.

மராத்திய மன்னர்கள் - நாயக்கர்களைப் பின்பற்றி சமஸ்கிருதத்திற்கும், தெலுங்கிற்கும் முதலிடம் கொடுத்து, கற்று தேர்ந்து. தமிழைப் புறந்தள்ளியதால். சைவ மதத்தினரைக் காப்பாற்றும் நிலையில் தமிழக திருமடங்கள், குறிப்பாக திருவாடுதுறை ஆதீனம் தமிழை வளர்க்கும் நிலையில் இருந்தது. மாறாக தமிழ் மருத்துவத்தை வளர்ப்பதை எந்த மதமும், திருமடங்களும் கவனம் செலுத்தவில்லை என்றாலும், அதன் வளர்ச்சிக்குத் தடை செய்ய வில்லை. தஞ்சாவூரைச் சுற்றி மராட்டியர் ஆண்ட காலத்தில் 5783 கிராமங்களில் பரம்பரை மருத்துவர்கள் 1½ ஏக்கர் நிலத்தை இறையிலியாகப் பெற்று மருத்துவம் புரிந்து வந்தனர். இது தவிர மற்ற சித்த மருத்துவர்களும், கிராமங்களில் தம் தொழிலை நடத்தி வந்தனர். ஆனால் இவர்களுக்குப் போட்டியாக ஆயுர்வேத மருத்துவர்களும் அவ்வூரில் மருத்துவம் புரிந்து வந்தனர். இவர்களுக்கு அக்கிராம மக்கள் காய், கனி, பால் மற்றும் தம்மிடமுள்ள மிகையாக விளைந்த விளைப்பொருட்களையும், நன்றிக் கடனாக அளித்து, தங்களை அறுவை சிகிச்சையிலிருந்து காப்பாற்றி கொள்வதாக நம்பினர். மருத்துவர்கள் தம்மிடமுள்ள ரகசிய மருத்துவ முறைகளைக் கொண்ட சுவடி நூல்களில் உள்ளவற்றை, தங்களை நம்பும் பொருட்டு படித்துக் காண்பித்து, தங்களுக்கான மருத்துவத்திற்கு பணத்தை பெற்றுக் கொண்டனர். கவலை அளிக்கும் எந்த அளவிலும் உள்ள பலதரப்பட்ட நோய்களையும் நாடி பிடித்துப் பார்த்து, நோயை அறிந்து மருந்து வழங்கினர். இவர்களில் சிலர் மிகப் புகழ்பெற்று நாடு முழுவதுமுள்ள செல்வந்தர்களுக்கும் மருத்துவம் அளித்தனர். இக்காலகட்டத்தில் நாட்டு மருத்துவர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்தியப் படையிலும் பணியமர்த்தப்பட்டனர்.

நோயாளிகளுக்குத் தனியாக மருத்துவமனைகள் அக்காலகட்டத்தில் இல்லாத நேரம். ஆகவே அவர்கள் வீட்டிலேயே மருத்துவம் செய்யப் பெற்றனர். ஒரு விடியலாக மராத்திய மன்னர் சஹாஜி (shahji -- 1684 - 1712) மருத்துவமனைகளைக் கட்டி, ஹைதராபாத் மற்றும் அரேபியாவிலிருந்து மருத்துவர்களை வரவழைத்தார். இந்த மருத்துவ மனைகளில் நோயாளிகள் சோதனை செய்யப் பட்டு, அரசர் செலவில் மருந்தளிக்கப்பட்டது. இத்துடன் கட்டணமற்ற தங்கும் விடுதிகள் (சத்திரங்கள்) இராமேஸ்வரம் போகும் சாலையோரங்களில் கட்டப்பட்டு, நடந்து செல்லும் பயணிகளுக்கு நோய் ஏற்பட்டால், அங்குத் தங்கி மருத்துவமும் பெற்றனர். இச்சத்திரங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் சாதாரண நோய்களைத் தீர்க்க வல்லதாக எட்டு மருந்தகங்களுடன் அமைக்கப்பட்டு இருந்தன. சஹாஜி வெளி ஊரிலிருந்து மருத்துவர்களை அழைத்த செயல் பீஜப்பூர் சுல்தானைப் பார்த்துச் செய்த செயலை ஒத்தது ஆகும். மேலும் சஹாஜி மன்னர் மராட்டிய அரசர்களில் இரண்டாமவன் என்பதால் உள்நாட்டின் மருத்துவர்களின் திறமையை அறியாமல் இருந்ததே காரணமாகும். இத்துடன் துளாஜாஜிக்கு முன்பிருந்தவர்களும் சித்த மருத்துவர்களின் பெருமையை மன்னர்களிடம் கொண்டிருந்த உறவை அறிந்தவர்களாக இல்லை. அரண்மனையிலிருந்த மருத்துவம் பற்றிய பதிவு குறிப்புகள் (1773-1776) எரிக்கப்பட்டதினாலும் ஆகும். மராட்டிய அரசர்கள் தங்கள் பதிவுகளை மோடி எழுத்தில் சுவடியில் பதிவுசெய்து வைத்தார்கள். இதில் 1000 சுவடிக்கட்டுகள் இன்னும் சரஸ்வதி மஹால் நூலகத்தில் உள்ளது. இதில் பெரும் பகுதி இன்றுவரை மொழிபெயர்த்து வெளியிடப்படாமலே உள்ளது. இவைகள் வெளியிடப்பட்டால் பல அரிய மராத்தியச் சரித்திரக் குறிப்புகள் கிடைக்கக்கூடும்.

மன்னர் துளாஜாஜி இரண்டு மருத்துவ நூல்கள் சமஸ்கிருதத்தில் எழுதியுள்ளார் என்றாலும், அதில்

மருத்துவத்திற்கு ஆற்றிய பணிகளை, சேவையை அறிய முடிவதில்லை. இவரால் சுவீகாரம் எடுக்கப் பட்ட அரசர் சரபோஜி - II, உள்நாட்டு மருத்துவத் திற்கு முதன்மை கொடுத்து, இதற்கான மருத்துவக் குறிப்புகளைச் சேகரித்து பத்திரப்படுத்தினார். இம்மருத்துவ முறைகள் செயல்பாட்டில் இருக்க துப்புரவு காரணமாக பல உத்திகள் கையாண்டார். (எ.கா.) மக்களின் துப்புரவு மற்றும் உடல்நலத்தைப் பேண, சரபோஜி தஞ்சையிலுள்ள கோட்டைக்குள் இருந்த சேப்பாண நாயக்கன் ஏரி, சிவகங்கை குளம் ஆகியவைகளை ஊரில் உள்ள பல நல்ல தண்ணீர் கிணறுகளுடன் இணைத்து போதுமான தண்ணீரைப் பொது மக்களுக்குக் கிடைக்க வழியமைத்தார். இது தவிர தஞ்சையில் 6 மைல்கள் சுற்றளவிலுள்ள பெண்கள் கருவுற்ற 9 மாதத்திலிருந்து குழந்தை பிறந்த பின் மூன்று மாதங்கள் வரை தாய்க்கும், சேய்க்கும் பாலை இலவசமாக அளித்தார். இதை அவர் மகன் சிவாஜியும், தான் இறக்கும் வரை, அதாவது பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி தஞ்சையை முழுவதுமாக ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றும் வரை இச்சலுகைகள் வழங்கப்பட்டன. தஞ்சையில் அன்றைய காலகட்டத்தில் குருகுல முறைப்படி போதிக்கப்பட்ட மருத்துவம், மறை பொருளாக எழுதி வைக்கப்பட்டு, பலநூறு ஆண்டுகள் இச்செயலே நீடித்ததால் பலருக்கு, பல தரப்பட்ட மருத்துவ முறைகளுடன் மிகவும் சக்தி வாய்ந்த மருத்துவமும், சிலருக்கு சக்தியற்றதாகவும், மந்திரத்தன்மையுற்றதாகவும், பல மருந்துகளைக் கொண்டு குறுக்கு வழியில் குணப்படுத்தக்கூடிய தாகவும் மருத்துவம் அமைந்தது. மருத்துவம் பொதுமைப்படுத்தப்படாது மருத்துவப் பள்ளிகள் இன்றி முறைப்படி மருத்துவம் போதிக்காததே இதற்குக் காரணம். மேலும் அன்றைய மருத்து வர்கள் தன்னிடம் உள்ள ஓலைச்சுவடிகளை, மருத்துவச் சுவடி நூல்களை வழிவழியாக வழிபட்டு வந்தனர். இந்நூல்கள் மற்றவர்கட்கு கொடுத்து வாங்கல் என்பதும் இல்லாது இருந்தது. இந்நூல்களில் மருத்துவத்தைக் கண்டறிதல், குணப்பாடு, அதனால் ஏற்படும் முன்னேற்றம் ஆகியவைகள் முறையாக வகைப்படுத்தப்பட்டு எழுதப்படாது இருந்ததும் ஒரு குறையாகவே காணப்பட்டது. பெரும்பாலான மருத்துவச் சுவடிகளில் நோயின் அறிகுறி, மருத்துவம், குணப்பாடு ஆகியவை அங்கு மிங்குமாக இருந்தது. ஒருவேளை மருத்துவத்தை அறிந்து எழுதியவருக்குப் பிறகு அதைப் பின் பற்றும் சீடர்கள் தனக்கு ஆர்வம் உள்ளதை அல்லது தனக்கு வேண்டியதை மட்டும் ஓலைச் சுவடியில் படி எடுத்திருக்கலாம்.

மேலும், அக்காலகட்டம் மருத்துவர்களுக்கு எந்தத் தேர்வு எழுதி சான்றிதழ்கள் பெறவோ அல்லது மருத்துவம் புரிய உரிமையோ பெறத் தேவையின்றி இருந்தது. இதன் காரணமாகப் பல மருத்துவர்கள் மிகக் குறைந்த அளவு மருத்துவ அறிவுடன் இருந்ததால் பண்டைய முடிவுகளைப் பற்றி தனக்குத் தெரிந்த வரை கையாண்டு மருத்துவம் புரிந்தனர். இதனால் சித்த மருத்துவத்தில் பல போலி மருத்துவர்கள் உருவாகக் காரணமாகி, யார் உண்மையான மருத்துவர், யார் போலியானவர் என்று பிரித்துப் பார்க்க இயலாது போய்விட்டது.

சித்த மருத்துவர்களுக்குப் போட்டியாக மருத்துவம் புரியும் ஆயுர்வேத மருத்துவர்கள் அரசர்களுக்குப் பெரும்பாலும் மருத்துவர்களாக இருந்துள்ளனர். இவர்கள் சிறந்த பண்டிதர் களைக் கொண்டு மருத்துவம் கற்றுக்கொண்டனர். இவர்கள் பெரும்பாலும் பிராமணர்களே. ஆகவே இவர்கள் உயர்ந்த நிலையில் அரசர்களாலும், மற்றவர்களாலும் போற்றப்பட்டிருக்கின்றனர். ஆனால் இரண்டு மருத்துவங்களின் கொள்கை மற்றும் மருத்துவம் ஒன்றே என்றாலும், சித்த மருத்துவத்தின் உபயோகம் 10-ஆம் நூற்றாண்டி லிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. யுனானி மருத்துவம் முகமதிய மன்னர்களால் போற்றப் பட்டு வளர்ந்தாலும், இதில் சிலர் சிறந்து விளங்கினாலும் தஞ்சையில் தமிழ் மருத்துவர் களுக்குப் போட்டியாளர்களாக இருக்கவில்லை.

ஐரோப்பிய மருத்துவர்கள் பெரும்பாலும் இராணுவத்தில் பணியாற்றினாலும், அவர்கள் தொழிற்சாலைகளிலும் மற்றும் நகரங்களிலும் மக்களுக்காகப் பணிபுரிந்தனர். இது 1780-க்குப் பிறகு சற்று கூடுதலாக இருந்தது. ஆகையால் அவர்களுக்கு உள்நாட்டு மருத்துவத்தில் நாட்டம் ஏற்பட்டு, தகுந்த மருத்துவர்களிடம் தமிழ் மருத்துவ செயல்பாடுகளைக் குறித்து அறிந்து கொண்டனர். ஆனால் மக்களுடன் மொழி காரணமாக நேரடித் தொடர்பு கொண்டு, மருத்துவ சேவை செய்ய இயலாது தடுமாறினர். ஆனால், மன்னர்கள் இம் மருத்துவர்கள் சேவை தேவை இல்லாவிடினும் ஒரு பெருமைக்காக இம்மருத்துவர்களை தங்களுக்குச் சேவை செய்ய பணியில் அமர்த்திக் கொண்டனர். இதன்படி மன்னர் சரபோஜி - II தங்கள் அரண் மனை ராயல் மருத்துவர்களாக டாக்டர் செல் மற்றும் க்ரியை நியமித்துக் கொண்டார். ஆனால் இக்காலக் கட்டத்தில் மருத்துவம் தெரிந்த மிஷனரிகள் இங்குப் பணியாற்றவில்லை. ஆனாலும் ஐரோப்பிய மருத்துவர்கள் மராத்திய மன்னர்களிடம் சித்த மருத்துவத்திற்கு புத்துயிர்வூட்ட உதவினர்.

**மராட்டியர் – மருத்துவம்:**

உள்நாட்டு மருத்துவத்தை ஒட்டியே அக்கால கட்டத்தில் ஐரோப்பிய மருத்துவமும் இருந்தது.

அவர்கள் இரத்தம், பித்தம், சளி, எரிப்பாற்றல் ஆகியவைகளே உடல் கேட்டிற்கான காரணம் என்று கூறினர். இதற்கு வாந்தி எடுப்பது, இரத்தத்தை வெளியேற்றுவது, அட்டை (Leech) மருத்துவம், பேதி கொடுப்பது மருத்துவமாகக் கடைப்பிடிக்கப் பட்டது. இங்குள்ளவைகளைப் போலவே இயற் கையில் கிடைக்கும் மூலிகை, உலோகம் ஆகியவை களே மருந்தாகப் பயன்படுத்தப்பட்டன. இரும்பு - இரத்த சோகைக்கும், சிங்கோனா மலேரியா விற்குமே அந்நிலையில் மருந்தாக இருந்தது. அறுவை சிகிச்சை கூட கை, கால்களுக்கானதாக இருந்தது. உடல், உள்உறுப்புகள் கேடு அணுகத் தகாததாகக் கருதப்பட்டது. அறுவை மருத்துவர்கள் 1745-ஆம் ஆண்டு வரை நாவிதர்களுக்கு இணை யாகவே கருதப்பட்டனர். தொடக்க நிலையைக் கடந்து உடல் கூறு, உடல் இயங்கியல், வேதியல், பௌதீகம் இருப்பினும், அவை மருத்துவம் புரிய துணை செய்யவில்லை. நோய் அறிதல் என்பது அறிகுறிகளை மட்டும் குறிப்பிடுவதாக இருந்தது. மருத்துவமும் அனுபவத்தை ஒட்டியே அமைந்தது.

1753-இல் கல்வியைக் குறித்த ஜேம்ஸ் லின்ட் (Jameslind) நூலும், எட்வர்ட்ஜென்னரின் (Edward Jenner) அம்மை குத்தல் குறித்த நூல்கள் மட்டுமே மருத்துவம் குறித்த நூல்கள். மற்றைய ஏதும் குறிப்பிடத்தக்கதாக இல்லை என்று கூறலாம். அடிசன் (Addison), பிரைட் (Bright) மற்றும் குல் (Gull) போன்றோரின் நூல்கள் பிந்தையதே. 1848 வரை மருந்துபோடும் துளையுடைய ஊசிகள் கூட கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் ஐரோப்பிய மருத்துவர்கள் தாங்கள் நோயாளிகளிடம் கண்ட அறிகுறி குணப்பாடுகளை பதிவு செய்து ஆராய்ந்தனர். அவைகளைச் சான்றுகள் மூலம் மெய்ப்பித்துக் கொண்டார்களேயன்றி நம்பிக்கையினால் அறி வியலை வளர்த்துக் கொள்ளவில்லை. ஹெக்னி மேன் போன்றோர் அந்நிலையில் பரிசோதனை மூலம் மருந்துகளை ஆராய முற்பட்டு, பல மருந்து களைக் கண்டுபிடித்தனர். ஃபிரடரிக் வில்கிம் (Frederick Wilheim), சர்டுனர் (sertuerner) (1805) மூலிகையிலிருந்து நோய்களைக் குணமாக்கும் பொருள்களைத் தனித்து, பிரித்து எடுத்து ஆய்ந்து மருந்து தயாரிப்புக்கு வித்திட்டனர்.

**சரபோஜியின் சித்த மருத்துவத்திற்கான கொடை:**

மேற்கூறப்பட்ட நிலையிலேயே மருத்துவச் சேவை சரபோஜி ராஜ்யத்திலும் ஐரோப்பாவிலும், நடைமுறையில் இருந்தது. தந்தை இறக்கும் பொழுது சரபோஜி சிறுவனாக இருந்ததால், வளர்க்கும் பொறுப்பை சீர்திருத்த கிருத்தவ மிஷனரியான ஸ்வாட்ஜ் பாதிரியிடம் ஒப்படைத்தார். இவர் வழிகாட்டலில் சரபோஜி சென்னையில் ஐரோப்பிய அறிவுஜீவிகளுடன் படித்து, மேலும், மேலும் புதியவைகளை அறிந்துகொள்ள ஆர்வம் கொண்டார். பிறகு பல இந்திய ஐரோப்பிய மொழிகளைக் கற்றுணர்ந்தார். இதன் மூலம் பல மொழி மருத்துவ நூல்களைக் கற்க முனைந்தார். இந்நிலையில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி வளம் கொழிக்கும் தஞ்சை ஆட்சி முழுவதும் அரசரிடமிருந்து, தன் வசம் ஆக்கிக் கொண்டது. இருப்பினும் கம்பெனி அரசருக்குத் தன் அறிவு சார்ந்த வேலைகட்கு, செய்கைகளுக்குத் தேவையான பொருளுதவி அளித்தது.

**மூலிகைத் தோட்டம்:**

ஐரோப்பிய கல்வி பெற்ற அரசர் சரபோஜி பல நோய்களுக்கான மருத்துவக் குறிப்புகளை அறிந்து சோதனை செய்ய முனைந்தார். இதற்காகத் தன்வந்திரி மஹாலின் ஒரு பகுதியில் மருத்துவ சோதனைக்கான மையத்தைத் திறந்து, அதில் 12 இந்திய மருத்துவர்களை நியமித்தார். அவர்கள் நோய்களுக்கான தகுந்த சிகிச்சையை அளித்தனர். இதனை ஐரோப்பிய மருத்துவர்கள் நோயாளி களின் குறிப்பேட்டில், நோயின் தன்மைகளைக் குறித்து வைத்தனர். இதன்படி மன்னர் மருத்துவக் குறிப்பேட்டிலுள்ள மருந்துகளில் சிறந்தவை களில் 5000 மருத்துவக் குறிப்புகளைச் சேகரித்தார். இதைத் தமிழ் மருத்துவர்களும் சரிபார்த்தனர். இக்குறிப்புகள் பல வகையாகப் பிரிக்கப்பட்டு 18 நூலாக ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டன. நோயாளிகளிடம் சரியான மருந்து கொடுத்து சோதனை செய்ய மூலிகைத் தோட்டம் பராமரிக்கப் பட்டு, மருந்தும் தயாரிக்கப்பட்டது. மூலிகைகள் சுத்தம் செய்யப்பட்டு, அவைகள் தரப்படுத்தப் பட்டு, மிகச் சிறந்த முறையில் அத்துறையில் சிறந்த மருத்துவ வல்லுநர்களின் ஒப்புதலுக்குப்பின் மருந்துகள் தயாரிக்கப்பட்டன. இன்றைக்கு ஈடாக மாத்திரைகளில் அம்மருந்துகளின் பெயரும் தயாரிக்கப்பட்ட தேதியும் குறிப்பிடப்பட்டன.

இவைகளில் சில மருந்துகள் எந்நிலையிலும் கெடாதவாறு தயாரிக்கப்பட்டு, மன்னரின் வாரிசு களால் அம்மருந்துகள் அண்மைக்காலம் வரை கொடுக்கப்பட்டு வந்துள்ளன. சரபோஜி மருத்துவர் களுக்குச் சரியான மூலிகைகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த, சிறந்த ஓவியங்களைக் கொண்டு அரிய மூலிகைகளின் படத்தை அதன் நிறத்தை ஒட்டி வண்ணத்தில் தத்ரூபமாக வரைந்து, அதனடியில் அதன் பயன்களையும், பெயரையும் குறித்து வைத்துள்ளார். அப்படங்கள் அடங்கிய புத்தகம் இன்றும் சரஸ்வதி மஹால் நூலகத்தில் புதிய படங்களைப் போல காட்சியளிக்கின்றன. இதே போல உடற்கூறுகளைக் குறித்த படங்களும்

நூல் வடிவத்தில் நிறத்திலும் கருப்பு வெள்ளையு மாகவும், சில வண்ணத்திலும் இருக்கின்றன. நோயாளிகளைப் பற்றிய குறிப்புகள் படத்துடன் குணப்பாடுகள் எழுதப்பட்டு, அவைகள் பிற்கால சந்ததியினருக்கு ஆய்வுக்கு உதவும் விதமாக உள்ளது. கண்நோய்களைப் பற்றியது இவை களில் குறிப்பிடத்தக்கது.

**சரபோஜி யாத்திரை:**

இந்தியாவில் கல்வி கற்பிப்பதில் சிறந்து விளங்கிய காசிக்கு 1820-இல் பரிவாரம், எழுத்தர் மற்றும் அறிஞர்களுடன் யாத்திரை சென்றார். அப்படிச் சென்று வருகையில் பழைமை வாய்ந்த அகஸ்தியர், தேரையர், பிரம்மமுனி, மச்சமுனி, தன்வந்திரி, சட்டைமுனி, யூகிமுனி, திருமூல முனி, கெங்கணவர் ஆகியோரின் மருத்துவ சுவடிகள் திரட்டிக் கொண்டுவரப்பட்டன. சரபோஜி சரஸ்வதி மஹால் நூலகத்திற்கு மருத்துவம், அறுவை சிகிச்சை, தாவர இயல், உடல்கூறு, மிருக மருத்துவம் ஆகியவைகள் குறித்த நூல்களை வாங்கியதோடு அவைகளை அவரே படித்து முக்கிய மான கருத்துக் களைக் கோடிட்டு வைத்துள்ளார். இத்துடன் மன்னர் பழைய ஓலைச்சுவடி நூல்களையும் வாங்கி நூலகத்தின் பயன்பாட்டிற்கு உதவியுள்ளார்.

**மருத்துவக் குறிப்பு சரிபார்க்கப்பட்டது:**

சுவடிக் குறிப்புகள் மூலம் நோயாளிகளுக்கு ஆய்வு செய்யப்பட்டு சரியான மருந்து தேர்ந் தெடுக்கப்பட்டது. இம்மருத்துவக் குறிப்புகளைக் கீழ்க்கண்ட அறிஞர்கள் சரிபார்க்க தன்வந்திரி மஹாலில் பணிபுரிந்தனர்.

வேலாயுத வைத்தியர் (1827), திருவேங்கடம் பிள்ளை, கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், சுப்பராய கவிராயர், தாமோதரம் பிள்ளை, ரெங்கையா நாயக்கர், அய்யாக்கண்ணு பிள்ளை, பஞ்சநாதம் பிள்ளை, வேலாயுத வைத்தியர் (1827) மற்றும் சித்த மருத்துவர்களான அப்பண்ண வைத்தியர், அனுச்சாமி வைத்தியர், முத்துசாமி அய்யர், கஷிதர கோவிந்த ராவ், சுப்பையா வஸ்தாது, வைத்தியர் வாசுதேவபிள்ளை, அபிராம மேஸ்திரி, பரங்கிப் பேட்டை அப்பு வைத்தியர், தௌளதுராவ், வைத்தியர் முத்துசாமி தீட்சிதர் மற்றும் வஸ்தாது ஞானி ஆவர்.

மன்னர் சரபோஜி இவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட 5000 மருத்துவக் குறிப்புகளின் குணப் பாட்டை அறிந்து தான் முழுவதும் அதை ஏற்றுக் கொண்டு, அதிலிருந்து 900 குறிப்புகளை தன் இனத்தாருக்குப் பயன்தரும் வகையில் மராத்தி மொழியில் உரைநடையில் மொழிபெயர்த்தார். ஆனால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது, பாடலாக சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தின் வழியாக "சரபேந்திர வைத்திய ரத்னாவளி" என்ற நூலாக 1957-இல் வெளியிடப்பட்டது. பாடலாக்க உதவியவர்களில் முக்கியமானவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்.

இவ்வளவு மருத்துவம் தொடர்பான தன் வந்திரி மஹால் எங்கிருந்தது என்பதை எஸ்.கணபதி ராவ் மோடி ஆவணங்களை ஆராய்ந்த பிறகு இன்றைய சரஸ்வதி மஹால் உள்ள இடத்திலேயே நடைபெற்று வந்தது என்று கூறுகிறார். இதுவே கிராமங்களில் நடைபெற்ற ஆரோக்கிய சாலை களுக்குத் தலைமைப் பீடமாகத் திகழ்ந்தது. இந்த ஆரோக்கிய சாலையில் மருத்துவர், டிரஸ்சர், மருந்தாளுநர், கணக்கர், உதவி புரிபவர் ஆகியோர் பணிபுரிந்தனர்.

**ஊதியம்:**

இதில் பணிபுரிந்தவர்களுக்கான ஊதியம் மோடி ஆவணங்களின் மூலம் அறியப்படுகிறது. மருந்து தயாரிக்கும் பரங்கிப்பேட்டை வைத்தி யருக்கு மாதம் 50 ரூபாய் கொடுக்கப்பட்டது. மாறாக சாதாரண மருத்துவருக்கு இவரை விட குறைவாகவே ஊதியம் வழங்கப்பட்டது. ஆனால் ஐரோப்பிய மருத்துவர்களுக்கு மிக அதிகமாக ஊதியம் கொடுக்கப்பட்டது. இவர்கள் டாக்டர் மெக்பின் மற்றும் டாக்டர் பிரோக்கிலின். இதில் டாக்டர் மெக்பின் ஒரு கண் மருத்துவர். இவரைப் போல கண் மருத்துவராக அப்பு சாஸ்திரிகளும் பணிபுரிந்துள்ளார்.

**பல்கலைக்கழகம்:**

கணபதிராவின் மோடி ஆவண ஆய்வின்படி சித்த மருத்துவ ஆய்வுகளுடன் சரபோஜி மன்னர் நவ வைத்திய கலாநிதிசாலை என்ற சிறு பல்கலைக் கழகத்தை ஆரம்பித்து மருத்துவக் கல்வியைப் போதித்ததாகக் கூறுகிறார்.

மன்னர் தன்வந்திரி மஹால் குறித்த செயல் பாடுகளை சுவாமி வைத்தியர் ஆலோசனையுடன் நடத்தியுள்ளார். மன்னர் இறந்த பிறகும் கூட தன்வந்திரி மஹால் மருத்துவமனை செயல் பாட்டில் இருந்துள்ளது என்பதை உடற்கூறு குறித்த நூல்கள், அறுவை சிகிச்சைக்கான உப கரணங்கள் மற்றும் நூல்கள் வாங்கப்பட்டுள்ளதை மோடி ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது.

மன்னர் ஆய்வுக்குட்பட்ட அன்றைய மருந்துக் குறிப்புகள் 18 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, "சரபேந்திர வைத்திய ரத்னாவளி" எனும் நூலாக தற்பொழுது காணக்கிடைக்கிறது.

# சங்க இலக்கியச் சூழலியல் விழுமியங்களும் இன்றைய தமிழகத்து நிலவெளியும்

## ந.முருகேசபாண்டியன்

சங்க இலக்கியப் பிரதிகளை நுட்பமாக வாசிக்கும் போது பண்டைத் தமிழர், இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்ததை அவதானிக்க இயலும். கடவுளையும் இயற்கையாகக் கருதிய தமிழர், இயற்கையைச் சூழல் என அறிந்திருந்தனர். இயற்கையில் இருந்து பிரித்து அறிந்திட இயலாதவாறு, சங்கப் பாடல்கள், இயற்கைப் பின்புலத்தில் தோய்ந்து எழுதப் பட்டுள்ளன. சூழலைப் போற்றுவதன்மூலம் தங்களுடைய இருப்பினை அறிந்திட முயன்றது, சங்ககாலத் தமிழரின் தனித்துவம். சுற்றுச்சூழல் பற்றிய பல்வேறு விழுமியங்கள் இயற்கையை முன்வைத்துச் சங்கப் பாடல்களில் வெளிப் பட்டுள்ளன. அவை பண்டைத் தமிழர் வாழ்க்கை பற்றிய பல்வேறு போக்குகளைப் பதிவாக்கியுள்ளன. இன்று தமிழகத்து நிலவெளியானது, கார்ப்பரேட்டுகளின் வேட்டைக்களமாகியுள்ள சூழலில், நுகர்பொருள் பண்பாட்டில் எல்லாம் சந்தைக்கானதாக மாறியுள்ளது. வளமான குறிஞ்சி நிலம் அழிக்கப்பட்டு, வணிகப் பயிர்கள் விளைகிற எஸ்டேட்களாகி விட்டன. முல்லைக் காடுகள் என எதுவும் இல்லை. வண்டல் படிந்த மருத நிலமானது, வீட்டடி மனைகளாக உருமாறிக் கொண்டிருக்கிறது. நெய்தல் நிலமானது பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தில் சிக்கியுள்ளது. இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தில், சங்ககாலச் சூழலியல் சார்ந்த விழுமியங்கள் பற்றியும், அவற்றின் எச்சங்கள் நவீன வாழ்வியலில் தொடர்வது பற்றியும் ஆராய்ந்திட வேண்டியுள்ளது. சமூகமாகக் கூடி வாழ்கின்ற நிலையில், பன்னெடுங்காலமாக மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் தொடர்ந்து பின்பற்றிய ஒழுங்குகள் அல்லது நெறிகளை விழுமியம் என வரையறுக்கலாம். தனிமனித உறவு, குடும்பம், சமூகம், சூழல் எனப் பல்வேறு நிலைகளில் காலந்தோறும் தொடர்ந்து உருவாக்கப்படும் விழுமியங்கள், பூமியில் மனிதர்கள் இயங்கிட வேண்டிய நெறிமுறைகளை வலியுறுத்துகின்றன. குறிப்பாகச் சூழல் குறித்த விழுமியங்கள், அடிப்படையில் மனிதர்கள் இயற்கையின் அங்கம் என்ற கருத்தியலை முன்வைக்கின்றன.

பண்டைத் தமிழரின் சூழல் பற்றிய விழுமியத்தை அறிந்திடச் சங்க இலக்கியப் படைப்புகளும், தொல்காப்பியமும் அடிப்படையானவை. சூழலின் பருப்பொருட்கள் அனைத்தும் ஐம்பெரும் பூதங்களால் உருவானவை என்ற கருத்தியல், சங்கத் தமிழரிடம் ஆழமாக ஊடுருவியிருந்தது. பூதவியல் என்ற சொல் உலகினை ஆராய்வதாகத் தமிழர் மரபில் இடம் பெற்றுள்ளது. சங்க இலக்கியத்திலும், தொல்காப்பியத்திலும் உலகம் எவற்றால் உருவானது என்ற பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

> நீரு நிலனுந்தீயும் வளியு
> மாக விசும்போடு ஐந்தும் உடனியற்ற
> (மதுரைக்காஞ்சி:453-454)

> மண்டிணிந்த நிலனும்
> நிலனேந்திய விசும்பும்
> விசும்புவதைவரு வளியும்
> தீமுரணிய நீருமென்றாங்கு
> ஐம்பெரும் பூதத்தியற்கை (புறநானூறு:12)

> நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
> கலந்த மயக்கம் உலகம்
> (தொல்.பொருள். மரபியல்:644)

உலகமானது நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்னும் ஐந்து பூதங்களும் கலந்தது என்பது என்ற பார்வையின் மூலம், பண்டைத்தமிழரின் இயற்கை பற்றிய புரிதல் தொடங்கியுள்ளது. விசும்பு என்பது வெற்றிடம் என்று கருதப்பட்டது. மலையில் பொழிந்த மழைநீர், காட்டில் அருவியாகிச் சமவெளியில் ஆறாகப் பரந்து பாய்ந்து, கடலில் கலக்கிற இயற்கைச் செயல்பாடுதான், நிலப் பாகுபாட்டிற்கான ஆதாரம். மலை, காடு, வயல், கடலோரம் என்ற நான்கு வகையான நிலங்களே உலகம் எனக் கண்டறிந்த சங்கத் தமிழர் நானிலம் என வகைப் படுத்தினர். திணைக் கோட்பாடு உருவாவதற்கு நானிலம் தான் அடிப்படை. நான்கு நிலங்களுடன் தொடர்புடைய தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் ஆகிய வற்றுடன் இயைந்த சூழல் தொகுப்புகள்

(Eco system) இன்றளவும் முக்கியமானவை. காடுறை உலகம், மைவரை உலகம், தீம்புனல் உலகம், பெருமணல் உலகம் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவது நிலங்களை உள்ளடக்கிய சூழல் தொகுப்புகள்தான். நான்கு திணை நிலங்களும், அந்நிலத்தில் சிறந்து விளங்கிய பூக்களின் பெயர்களால் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என அழைக்கப்பட்டன. சூழல் சிதை

வடையும்போது உருவான நிலம் பாலை என்று குறிப்பிடப்பட்டது. நிலத்தின் அடிப்படையில் ஐந்து வகையான சூழல் தொகுதிகளை உருவாக்கியதுடன், குறிப்பிட்ட நிலத்திற்கென முதல் பொருள், கருப் பொருள், உரிப்பொருள் ஆகியவற்றை வரையறை செய்தது பண்பாட்டுச் சூழலியல் (Cultural Ecology) சார்ந்தது. உயிரின வளத்தின் (Biodiversity) சிறப்புகளாக அறிவியலாளர் குறிப்பிடுகிற அம்சங்கள், சங்ககாலத் தமிழகத்தில் நிலவியுள்ளதைத் தொல்காப்பியம் மூலம் அறிய முடிகிறது.

மலையும் மலை சார்ந்த நிலமானது குறிஞ்சிச் சூழல் தொகுப்பு எனவும், காடும் காடு சார்ந்த நிலப்பரப்பானது முல்லை சூழல் தொகுப்பு எனவும், வயலும் வயல் சார்ந்த நிலவெளியானது மருதம் சூழல் தொகுப்பு எனவும், கடலோரம் சார்ந்த பெருமணல் நிலப் பரப்பானது நெய்தல் சூழல் தொகுப்பு எனவும், முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து உருவான வன்மையான நிலப்பரப்பு பாலைச் சூழல் தொகுப்பு எனவும் குறிக்கப்பட்டது, பண்டைத்தமிழரின் சூழல் பற்றிய புரிதலின் வெளிப்பாடாகும். அன்றைய கால கட்டத்தில் தமிழக நிலப்பரப்பில் நான்கில் மூன்று பங்களவில் தாவரங்களும், விலங்குகளும் நிறைந் திருந்தன. குறிப்பாக இயற்கையான தாவரங்களின் வளரிடங்கள் வளமுடன் செழித்திருந்தன. சங்கத் தமிழர் அன்றாட வாழ்வியலில் பயன்பாட்டு நிலையிலும் குறியீட்டு நிலையிலும் தாவரங்கள் பற்றி நன்கு அறிந்திருந்தனர். தாவரங்கள் பற்றிய பல்வேறு தகவல்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் அடையாகவும் உவமையாகவும் சங்கப் புலவர்கள், பாடல்களில் பதிவாக்கியுள்ளனர். சங்கப் பாடல்களில் இடம் பெறுள்ள தாவரங்களின் வருணனைகள், இன்றைய பயிர்நூல் வல்லுநர்களின் கருத்துகளுடன் ஒத்துப் போகின்றன. தமிழர்கள் தாவரங்களையும், அவற்றின் பூக்களையும் இன்றளவும் பயன்படுத்துகிற முறையானது, பெரிதும் உணர்ச்சிப்பெருக்கானது. தாவரங்களுடன் இயைந்த வாழ்க்கை வாழ்ந்த காரணத்தினால்தான், சங்கத் தமிழர்கள், தங்களுடைய வாழ்வியலில் ஒவ்வொரு நிலையிலும் தாவரத்துடன் தங்களை இணைத்து நினைத்தனர்.

விதை - நல்ல பண்பு, முளை - தொடக்கம், தளிர் - மழலை, மலர் - பெண் குழந்தை, பிஞ்சு - குழந்தை, பூத்தல் - பெண் வயதுக்கு வருதல், கொடி - இளம் பெண், முள் - வேண்டாதது, கனி - பலன், அரும்புதல் - மனதில் உணர்வு தோன்றுதல், கிளை - சுற்றம், சினை - கருவுறுதல், பட்டுப்போதல் - அழிவு போன்ற சொற்கள் தமிழரின் வாழ்க்கையில் தாவரங்கள் பெற்றுள்ள முதன்மையிடத்திற்குச் சான்றுகள். குழந்தைப் பிறப்பு முதல் இறப்பு வரையிலும் தமிழர்களின் வாழ்க் கையில் ஒவ்வொரு நிலைகளிலும் பூக்கள் பெற்றுள்ள இடம் வலுவானது. சோலை எனப்படும் காடு வழிபாடு, மர வழிபாடு, குன்று வழிபாடு, நீர்நிலை வழிபாடு, மழை வழிபாடு, பாம்பு வழிபாடு என இயற்கையை வழிபட்ட சங்கத் தமிழரின் பாரம்பரியம் இன்றளவும் தொடர்கிறது.

திணை மரபு அறிந்த சங்கப் புலவர்களின் இயற்கை பற்றிய சித்தரிப்புகள் உருவகம், உவமை, இறைச்சி எனக் கவித்துவச் செழுமையுடன் பாடல்களில் வெளிப்பட்டு உள்ளன. இளம் பெண்ணின் மனதில் அரும்பியுள்ள காதலின் ஆழத்தைக் குறிப்பிடச் 'சிறுகோட்டுப் பெரும் பழம்" என்ற உவமை பயன்பட்டுள்ளது. சின்னப் பெண்ணின் காதல் உணர்வு, மரத்தின் சிறிய கிளையில் தொங்குகிற பெரிய பழம் போன்றது என்ற உவமையில் புலவரின் இயற்கை சார்ந்த மனம் தோய்ந்துள்ளது. சங்கத் திணைச் சூழல் சார்ந்த வாழ்க்கையுடன், தமிழர்கள் தங்களைப் பொருத்திக் காண்பது இயல்பாக நடந்தேறி யுள்ளது. தான் சிறுமியாக இருந்தபோது செடியாக இருந்து, இன்று பெரிய மரமாக வளர்ந்துவிட்ட புன்னை மரத்தைத் தனது உடன்பிறந்தவளாகக் கருதி, அம் மரத்தின் அருகில் தனது காதலனைச் சந்திக்க மறுக்கிறாள் இளம்பெண் (நற்றிணை:172). தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற காதலனை நினைந்து வருந்துகிற இளம்பெண், 'இரவு நேரத்தில், தோட்டத்தில் இனிய துணையாக விளங்கிய வேங்கை மரத்திடம்கூடவா தூது சொல்லக் காதலன் மறந்துவிட்டான்' என ஆதங்கப்படுகிறாள் (குறுந்தொகை:266). இயற்கையுடன் தன்னை அடையாளப்படுத்துவதன் மூலம் பிரிவினால் வாடுகிற மனதைத் தேற்றுவது இவ்விரு பாடல்களிலும் பதிவாகி யுள்ளது. பொதுவாகச் சங்கப் பாடல்கள் மரம், செடி, கொடி, விலங்குகள் என இயற்கைப் பின்புலத்தில் படைக்கப்பட்டுள்ளன. காதல் விழைவு, துக்கம், பிரிவு, இழப்பு, கொண்டாட்டம் போன்ற அடிப்படையான உணர்வுகளைச் சித்திரித்திடப் புலவர்கள், பெரிதும் இயற்கை சார்ந்த சூழலுக்கு முக்கியத்துவம் தந்துள்ளனர். இன்றைய தமிழகத்தில் சூழல் தொகுப்புகள் சிதிலமாகி யுள்ள நிலையில், கவிதையாக்கத்தில் இயற்கைக்கான முக்கியத்துவம் மிகக்குறைவு. இயற்கையை நேசித்தல், கொண்டாடுதல், புரிந்துகொள்ளுதல் போன்ற விழுமியங்கள் நவீன கவிதையில் பழமலய், வெய்யில், தமிழச்சி, ஃபஹீமா ஜஹான் போன்றோரிடம் தொடர்கின்றன.

சங்க காலத்தில் பல்வேறு இனக்குழுக்களின் தனித்துவமான சமூக அமைப்புகள் சிதைக்கப்பட்டு உருவான மருத நிலம் சார்ந்த வாழ்க்கைமுறையில், மனிதர்கள், இயற்கைமீது ஆளுகை செலுத்த முயன்றனர். இயற்கையின் அதியற்புத ஆற்றல்கள், மனிதர்களால் விளங்கிட இயலாத சவால்களாக விளங்கின. இயற்கையின் பேராற்றல் ஒருபுறம், பேரழிவுகள், மரணம் இன்னொரு புறம் எனத் திண்டாடிய சூழலில் ஏதாவது செய்து, அதியற்புத ஆற்றல்களை அமைதிப்படுத்த முயன்ற போது, கடவுள் பற்றிய புரிதல் ஏற்பட்டிருக்க வேண்டும்.

இயற்கைக்கும் தங்களுக்குமான உறவினைப் புரிந்து கொள்ள விழைந்த தமிழர்கள், ஏதோவொரு மாய ஆற்றல் எல்லாவற்றையும் இயக்குவதாகக் கண்டறிந்தனர். சங்க காலத்தில் மனிதர்கள் பெரும் வெள்ளம், புயல், மழை, நிலநடுக்கம் போன்றவற்றில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கான முயற்சிகள் ஒருபுறமும், கொடிய வேட்டை விலங்குகளிடமிருந்து உயிரைத் தக்க வைத்துக்கொள்வதற்கான போராட்டம் இன்னொரு புறமும் தொடர்ந்தன. இயற்கையில் இருந்து தன்னை அந்நியப்படுத்தி அறிந்திடும் அறிவு வளர்ச்சியடைந்த போது, இயற்கையையே கடவுளாகக் கருதி வழிபட வேண்டிய சூழல் ஏற்பட்டது. எனவேதான் ஐந்திணை நிலப்பரப்பில் மலை, கடல், காடு, நீர்நிலைகள் சார்ந்து வாழ்ந்து வந்த சங்க காலத்து மக்கள் மரங்கள், மலைமுகடுகள், சுனைகள், கடற்கரை, ஆள் புழக்கமற்ற காடுகள், இரவு நேரம் போன்றவற்றில் கட்புலன்களுக்குத் தென்படாத சக்திகள் உறைந்திருப்பதாக நம்பினர். அவற்றை வழிபடுவதன் மூலம் தீய சக்திகளின் ஆதிக்கத்தில் இருந்து விடுபடலாம் என நம்பினர்.

கடவுள் என்ற கருத்தியல், தொடக்கத்தில் உருவமற்ற பேராற்றலையே குறித்தது. சூர், அணங்கு, சூலி, முருகு போன்ற கடவுள்கள் இயற்கை சார்ந்த இடங்களில் தங்கியிருப்பதான நம்பிக்கை, சங்க காலத்தில் வலுவாக நிலவியது. அணங்கு, வரையர மகளிர், சூர் போன்ற பேராற்றல்கள், குறிப்பாகப் பெண்களைப் பிடித்துக்கொண்டு அவர்களுடைய உடலினை மெலிவித்துக் கேடு செய்கின்றனவாகக் கருதப்பட்டன. அச்சம், வருத்தம் என்று பொருள் தருகின்ற வகையில் அணங்கு, பேய், சூர் போன்ற பெயர்களால் கடவுள்கள் குறிக்கப்பட்டாலும், அவற்றின் பேராற்றல் காரணமாக வணங்கப்பட்டன. புராதன சமய நெறிப்படி அச்சம்தான் கடவுள் பற்றிய கருத்தியலுக்கு மூலமாக விளங்குவதைச் சங்கப் பாடல்கள் புலப்படுத்துகின்றன. மனிதனுக்கு நன்மை செய்யும் பேராற்றலைவிடக் கெடுதல் செய்யும் பேராற்றல் பற்றிய சிந்தனைதான் முதன்முதலாகச் சடங்குகள் செய்யத் தூண்டின. ஏதோவொரு மாய சக்தியினால் ஏதாவது கேடுகள் விளையும் என்ற நம்பிக்கைதான், சங்கத்தமிழரின் சமயம் உருவாவதற்கான அடிப்படை. தாக்கு அணங்கு என்னும் கடவுள் தம்மை எதிரில் வருகின்றவர்களைத் தாக்கும்; அதிலும் இளம் பெண்களைப் பற்றித் துன்புறுத்தும். அணங்கைப் போலவே அச்சம் தருகின்ற இன்னொரு கடவுளான சூர், பொதுவாக மலைப்பகுதியில் செல்கிறவர்களுக்கு வருத்தம் அளித்தது. சூர் என்பது சூர்மகள் எனப்பட்டது. சூரானது மலைச்சுனை, மலைத்தொடர், மலை ஆகிய மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில் உறைந் திருந்தது. சூர் குடியிருக்கும் மலையில் முளைத்துள்ள தழையினைத் தீண்டினாலும், வாடச் செய்தாலும், அது வருத்தும். அதனால் வரையாடுகள்கூட சூர் உறைந்திடும் மலையிலுள்ள தழையினை உண்ணாமல் ஒதுங்கு கின்றன (நற்றிணை:359).


நீர்நிலைகளான ஆறு, சுனை, குளம், கடல், கழிமுகம், ஆற்றின் நடுவில் அமைந்திருக்கும் திட்டு போன்றவற்றில் கடவுள் உறைவதாகக் கருதி வழிப்பட்ட நிலை, சங்க காலத்தில் நிலவியது. துறை எவன் அணங்கும் (ஐங்குறுநூறு:53), அருந்திறற் கடவுள் அல்லன் பெருந் துறைக் கண்டு இவள் அணங்கியோளே (ஐங்குறுநூறு: 182) என்ற வரிகள், பெண்களைத் துன்புறுத்தும் நீர்க் கடவுள்களைச் சுட்டுகின்றன. சூர்ச்சுனை (அகம்:91) என்ற வரி சுனையில் இருக்கும் சூர் கடவுளைக் குறிக்கிறது. அணங்குடை முந்நீர் (அகம்:220), பெருந் துறைப்பரப்பின் அமர்ந்து உறை அணங்கோ (நற்றிணை: 155), கடல்கெழு செல்வி(அகம்:370) போன்ற வரிகள் கடல் சார்ந்த கடவுளைக் குறிக்கின்றன. பிரமாண்டமான கடல் ஏற்படுத்திய அச்சம் காரணமாக அது வழிபடும் கடவுளானது.

சங்கத் தமிழர்களின் கடவுள் பற்றிய நம்பிக்கை யானது, தொல் பழம் சமயக்கூறுகள் அடிப்படையி லானது. மனித இருப்பு குறித்த மிகைப்படுத்தப்பட்ட தத்துவம், அதியற்புதப் புராணக்கதைகள், சொர்க்கம்/ நரகம் பற்றிய புனைவுகள், உருவத்தை முன்னிறுத்திய தெய்வங்கள் போன்றனவற்றுக்குப் பழங்குடியினர் முக்கியத்துவம் தருவதில்லை. இத்தகைய போக்கானது சங்ககாலத் தமிழரின் கடவுள் பற்றிய கருத்தாக்கத்தில் முன்னிலை வகித்தது. இன்று வைதிக சமயம் முன்னிறுத்தும் நால் வருணப் பாகுபாடு உள்ளிட்ட பிறப்பு, பால் அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிக்கிற போக்கு தமிழர்களிடையே வலுவடைந்துள்ளது. தமிழர்கள் எல்லோரும் சாதி, மத அடிப்படையில் பிளவுண்டு, ஏற்றத்தாழ்வான மனதுடன் வாழ்கின்றனர். யாகத் தீ வளர்த்து, வேதம் ஓதுகிற பார்ப்பனியச் செயல் பாடு, விளிம்புநிலையினரின் வீடுகளுக்குள்ளும் நுழைந்து விட்டது. தீண்டாமையின் ஆதிக்கம் எல்லா மட்டங் களிலும் ஆழமாக ஊடுவியுள்ளது. பால் அடிப்படையில் பெண்களை இரண்டாம் நிலையினராகக் கருதுகிற கருத்து வலுவடைந்துள்ளது. சங்கத் திணைச் சூழல் உருவாக்கிய சமயம் பற்றிய விழுமியங்கள், தனிமனித உருவாக்கத்தில் சிதிலமாகியுள்ளன. குறிப்பாகச் சமயத்தின் மூலம் இயற்கையுடன் எப்படி ஒத்திசைந்து வாழ்வது என்ற விழுமியம், இன்றைய வாழ்க்கையில் அறுபட்ட நிலையில் உள்ளது. சூழல் குறித்த அக்கறை இன்மையினால், தமிழர்களின் இன்றைய வாழ்க்கை, அரசியல் ரீதியாகப் புதிய பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளது.

சங்க காலத்தில் நிலத்தை முன்வைத்து உருவாக்கப் பட்ட சூழல் தொகுப்பில் வாழ்ந்த மக்கள், குறிப்பிட்ட மண்ணிற்குரிய தாவரங்களையும், விலங்குகளின் இறைச்சியையும் உண்டு வாழ்ந்தனர். கடலோரம்

வாழ்கின்ற மக்களின் உணவில் மீன் இறைச்சியும், மலை சார்ந்த மக்களின் உணவில் வேட்டை விலங்கின் இறைச்சியும் தினமும் இடம்பெறுவது தவிர்க்க வியலாதது. பெரும்பாணாற்றுப்படை நிலவெளிக் காட்சிகளின் தொகுப்பினை நுணுக்கமாகப் பதிவாக்கி யுள்ளது. புரவலரான திரையனைக் காண்பதற்காகச் செல்கிற வழியில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை நிலவெளியின் இயல்பு, அங்கு வாழ்கிற மக்களின் உணவு, குடியிருப்பு, பழக்கவழக்கம், உயிரினங்கள், தாவரங்கள் பற்றிய விவரிப்புகள் சூழலியல் நோக்கில் முக்கியமானவை. ஒருவகையில் மக்களின் வாழ்க்கைமுறையை மண் தீர்மானித்தது. அந்தப் போக்கின் நீட்சியாக மலை சார்ந்த குறிஞ்சி நிலமெனில் காதல் எனப் புலவர்கள் வரையறுத்தனர். சூழல் சார்ந்து உருவாக்கப்படும் விழுமியங்கள் நிலந் தோறும் வேறுபடும் இயல்புடையன, ஆநிரை கவர்தல் என்பது பாலை நிலத்தில் வாழ்கின்ற மக்களின் தொழில் என்ற நிலை, சூழல் சார்ந்து உருவாக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் இயற்கையுடன் அங்கமாகி வாழ்கிற போக்கு, சங்க இலக்கியத்தில் சூழல் பற்றிய விவரிப்பில் வெளிப் பட்டுள்ளது. இன்றைய தமிழகத்தில் சூழல் என்பது முழுக்க நசிந்து விட்டது. ஒவ்வொரு நிலத்திற்குரிய தாவரம் என்பது புறக்கணிக்கப்பட்டு, மரபணு மாற்றம் செய்யப்பட்ட மேலைநாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களின் விதைகள் நிலத்தில் விதைக்கப்படுகின்றன. வேதியியல் உரங்களும் பூச்சிக்கொல்லியான நஞ்சுகளும் தூவப்பட்டு வளர்கின்ற செடிகளில் விளைகிற தானியங்களையும் காய்கறிகளையும் உண்ணுகிற மக்கள் நீரிழிவு, ரத்தப் புற்றுநோய், அல்சர் போன்ற தீராத நோய்களால் அவதிப்படுகின்றனர். ஹார்மோன் மருந்தினால் ஊட்டம் பெற்ற பிராய்லர் கோழி இறைச்சியைச் சாப்பிடுகிற வர்கள் கொலஸ்ட்ரால், உயர் ரத்த அழுத்தம் போன்ற நோய்களின் பாதிப்பிற்குள்ளாகின்றனர். இளைஞர்கள் அஜினோமோட்டா கலந்த சீன உணவுகள், பீட்சா, பர்கர் போன்ற உணவுகளை விருப்பத்துடன் உண்ணு கின்றனர். இந்நிலையில் குதிரைவாலி, வரகு, தினை போன்ற சிறுதானியங்களை உண்ண வேண்டும் என்ற கருத்து, பரவலாகியுள்ளதற்குக் காரணம், பண்டைய உணவு விழுமியம் மீண்டும் செல்வாக்குப் பெற்றிருப்பது தான். இயற்கை வேளாண்மைக்குத் திரும்ப வேண்டும் என்ற குரல் இன்று தமிழகத்தில் ஒலிப்பது, சூழலியல் சார்ந்த விழுமியங்கள் புத்துயிர் பெற்றிருப்பதன் அடையாளம்.

ஆண்-பெண் உறவின் அடிப்படையாக விளங்குகிற காதலையும் சுழலுடன் பொருத்திக் காண்பது, சங்கப் பாடல்களில் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. சங்கக் காதல் பாடல்களில் பெண் மொழியில் அமைந்த அள்ளூர் நன்முல்லையாரின் பாடல் தனித்துவமானது; சிறிய காட்சி மூலம் காதல் வயப்பட்ட பெண்ணின் மனநிலை உயிரோட்டமாக வெளிப்படுகிறது.



குக்கூ என்றது கோழி; அதன் எதிரே
துட்கென் றன்று என்தூஊ நெஞ்சம்
தோள் தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள் போல் வைகறை வந்தன்றால் எனவே
(குறுந்தொகை : 157)

கோழி கூவிய ஒலி கேட்டு, என் தோளுடன் பொருந்தியுள்ள காதலரைப் பிரிக்கவிருக்கும் வைகறைப் பொழுது வரப்போகிறதே எனப் பதற்றமடையும் பெண்ணின் மனத்துடிப்பு, நுட்பமான கவிதை வரிகளாகியுள்ளன. இங்கு பெண், உறவு கொண்டுள்ள காதலனுடனான தொடர்பு ஒருவேளை அவள் சார்ந்துள்ள சமூகமும் சுற்றமும் அறியாதது அல்லது அவளுடைய தோளுடன் பொருந்தியவன் நேசத்திற் குரிய கணவனாக இருக்கலாம். எவ்வாறாயினும் பொழுது விடியப் போவதானால், இருவரும் ஒன்றாக இருந்த சூழல் மாறிப் பிரிய வேண்டிய நிலையேற் படுகிறது. காதலனாக இருந்தால் மீண்டும் எப்பொழுது எங்கே கூடல் என்பது அறிய இயலாதது. கணவனாயின் அடுத்த நாள் இரவு வரும்வரை காத்திருக்க வேண்டும். ஆண் பெண் உறவினைக் காதல் இழையோட்டத்தில் ஏக்கமாகச் சொல்லியுள்ள வரிகள், காதலின் ஆழத்தைச் சித்தரிக்கின்றன. கோழி கூவுதல், வைகறை என அதிகாலைப் பொழுதினில் பின்புலத்தில் முல்லை நிலத்தின் ஒழுக்கமான பிரிவு விவரிக்கப்பட்டுள்ளது. சூழல் உருவாக்கும் பெண் மனப்பதிவுகள், திணைசார் வாழ்க்கையைப் பதிவாக்கியுள்ளன.

ஐவகை நிலப்பாகுபாட்டில் காதலை மையமிட்ட குறிஞ்சிப் பாடல்கள்தான் எண்ணிக்கை அடிப்படையில் அதிகமானவை. அதனையடுத்துக் காடும் காடு சார்ந்த முல்லை நிலம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. அன்றைய காலகட்டத்தில் தரைப்பகுதியில் காடு செழிப்புடன் விளங்கியது. காட்டில் வளர்ந்திருந்த தாவரங்கள் பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு ஆதாரமானவை. இயற்கை வளமான சூழலில் ஆநிரை வளர்த்தல் மூலம் மனித வாழ்க்கை வளர்ச்சியடைந்தது. முல்லை நிலத்தின் உரிப் பொருளான ‘காத்திருத்தல்’ முழுக்கப் பெண்ணுக்கானது. போர் அல்லது பொருள் தேடிப் பிரிந்துபோன தலைவனை நினைத்துப் பெண் காத்திருத்தல், பெண்ணுக்கான அடையாளம் என்பது குடும்ப நிறுவனம் பற்றிய விழுமியமாகும். வினையின் காரணமாக ஆணின் உலகம் வெளியெங்கும் விரிந்து கொண்டிருக்கிறது. ஆண் எங்கு சென்றான்? எப் பொழுது வருவான்? என எதுவும் அறிந்திராத சூழலில் கார்காலத்தில் நிச்சயம் அவன் திரும்பி வருவான் எனப் பெண் காத்திருத்தல், ஒருவகையில் பெண்ணுக்கு மன அழுத்தமும் சோகமும் தரக்கூடியன.

ஒக்கூர் மாசாத்தியாரின் முல்லைப் பாடல், இயற்கைப் பின்புலத்தில் பெண் மனதின் நுட்பங்களைப் பதிவாக்கியுள்ளது.

இளமை பாரார் வளம் நசைஇச் சென்றோர்
இவணும் வாரார் எவணரோ என
பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கு எயிறுஆக
நகுமே தோழி நறுந்தண் காரே (குறுந்தொகை.126)

இன்பமளிக்கும் கொண்டாட்டத்தினைக் கருதாமல் பொருள் தேடிப் பிரிந்து சென்றவர் எங்கு சென்றாரோ? இன்னும் அவர் இங்கு வரவில்லை. குளிர்ச்சியான கார்காலத்தில் மழை பொழிகிறது. முல்லைப் பூங் கொடியில் ஒளிர்கின்ற முல்லை அரும்புகள், அக் கொடியின் பற்களாக என்னைக் கண்டு நகைக்கின்றன. என்ன செய்வேன் தோழி எனத் தலைவி புலம்புகிறாள். முல்லைப் பூக்கள் பூக்கின்ற இயற்கையான நிகழ்வைக் கூடத் தன் நிலையைப் பார்த்து அவை சிரிப்பதாகக் கற்பிதம் செய்கிறாள். இயற்கையுடன் சார்ந்த பெண்ணின் மனநிலை கவிதை வரிகளாகியுள்ளன. ஒருக்கால் கார்காலம் வருவதற்கு முன் வந்துவிடுவேன் எனத் தலைவன் அவளுக்கு வாக்குக் கொடுத்திருக்கலாம். திணை சார்ந்த வாழ்க்கையில் பெண்ணின் உலகமானது, வீடு, குழந்தைகள் எனக் காத்திருத்தல் ஒழுக்கமாக வலியுறுத்தப்பட்டது, குடும்பம் பற்றிய விழுமியத்தில் முதன்மையானது. இன்று வரையிலும் ஆணின் உலக மானது வீட்டிற்கு வெளியே விரிந்து கொண்டிருக் கையில் பெண் வீட்டில் காத்திருத்தல் தொடர்கிறது. சூழல் சார்ந்த ஒழுக்கமாகச் சங்கக் கவிதை சித்தரித்த குடும்ப உறவானது, இன்றும் தொடர்கிறது.

வளமான வாழ்க்கைக்குக் குறியீடான பறம்பு மலையானது மூவேந்தரால் கைப்பற்றப்பட்ட நிலையில், பாரி மன்னரின் இழப்பு ஏற்படுத்தும் வலியைக் கண்ணீருடன் பாடியுள்ள ஔவையாரின் பாடல் வரிகளில் துயரம் கசிகிறது.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர்: ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே (புறநானூறு:187)

ஆடவர் நல்லவராக விளங்குமிடத்தில் நிலமும் நன்முறையில் விளங்கும் என்ற ஔவையாரின் கருத்து, ஆண் பற்றிய மதிப்பீட்டை உருவாக்குகிறது. வன்முறையும் ஆதிக்கமும் மிக்க அரசியலை முன்னெடுத்துச் செல்லும் ஆண்களில் உலகம் பற்றிய ஔவையாரின் விழுமியம், இன்றைய காலகட்டத்துக்கும் பொருத்தமாக உள்ளது. திணைசார் மரபிலான தமிழக நிலப்பரப்பையும் நீர் வளத்தையும் திட்டமிட்டுக் கொள்ளையடிக்கிற கார்ப்பரேட்டுகளின் பின்னால் இருக்கிற அரசியல் வாதிகள் தான் சூழலின் நசிவினுக்குக் காரணம் என ஔவையின் வழியில் யோசிக்கலாமா?

இன்று இயற்கை, மனிதர்களுக்கு எதிராகச் செயல் படுகிறதா என்ற கேள்வி முக்கியமானது. மனிதன், தான் ஓர் இயற்கைஜீவி என்ற புரிதல் இல்லாமல் நடத்துகிற அத்துமீறல்களால் ஏற்பட்டுள்ள சேதங்கள் அளவற்றவை. கி.பி.16-ஆம் நூற்றாண்டு முதலாக ஐரோப்பியரின் காலனிய அதிகாரத்துவ ஆட்சியில், தமிழகத்தின் சூழல் நாசமாகத் தொடங்கியது. ஆண்டு முழுக்க மழை பொழிந்திடும் மழைக்காடுகள் எனப்படும் சோலைகள் நிரம்பிய மேற்குத் தொடர்ச்சி மலைகளை ஐரோப்பிய காலனியாதிக்கவாதிகள், மொட்டையாக்கியது, இன்றளவும் தமிழகத்தின் சூழலியத்திற்குக் கேடு விளைவித்துள்ளது. நீருற்றுகள் வறண்டதால் வருஷம் முழுக்கத் தண்ணீர் பாய்ந்த ஓடைகள் காணாமல் போயின. வான் பொய்ப்பினும் தான் பொய்யாத வையை என்னும் குலக்கொடியானது, எழுபதுகளில்கூட மணல் பரப்புடன் மதுரைக்காரர்களின் பயன்பாட்டில் இருந்தது. இன்று வையை, இன்னொரு கூவம் ஆறு போல மாறி விட்டது. நொய்யல் ஆறு சாக்கடையாகி விட்டது. மக்களுக்கு உணவளித்த அருமையான நஞ்சை நிலத்தைக் கடந்த முப்பதாண்டுகளில் தமிழகமெங்கும் பிளாட்டுகளாகப் பார்க்கத் தொடங்கியுள்ளனர். பரந்த நிலப்பரப்பின் வழியே காலங்காலமாகப் பாய்ந்து கொண்டிருந்த வாய்க்கால்களை மறைத்துக் கட்டடங்கள் எழுப்பத் தொடங்கியது, இயற்கையைக் குறைத்து மதிப்பிட்ட செயலாகும். அண்மையில் சென்னை மாநகரம் எதிர்கொண்ட பேரவலத்திற்கான முதன்மைக் காரணம், இயற்கையின் பேராற்றலை மறந்ததுதான். கெடுப்பதும், கெட்டவர்க்குச் சார்பாகப் பொழியும் மழையின் இயல்பை திருவள்ளுவர் சொல்லியிருப்பது, இன்றைக்கும் பொருந்தும், நடுத்தர வர்க்கத்தினரின் கனவான சென்னையில் வீடு என்பது, ஓரிறவில் பெருக் கெடுத்த வெள்ளத்தினால் சிதைந்து போனது. வீடு முழுக்கச் சேமித்து வைத்திருந்த பொருள்கள் அழிந்தன. குடிநீர், மின்சாரம், உணவு, அலைபேசி இல்லாமல் இருப்பதா இறப்பதா எனப் போராடிய சென்னை வாசிகளின் அனுபவங்கள் கொடுங்கனவாகப் பல்லாண்டு களுக்குத் துரத்திக் கொண்டிருக்கும். பெரும் மழை யினால் கடலூர் நகரம் உள்ளிட்ட கடலோரக் கிராமங்கள் எதிர்கொண்ட பேரழிவுகளினால் மக்களின் வாழ்வதாரம் சிதிலமானது. விவசாயம் முழுக்க அழிவுக் குள்ளானதால் விவசாயிகள் பட்ட துயரம் தீராதது.

சங்கச் சூழலியல் சார்ந்த இயற்கையான வாழ்க் கைக்கும் இன்றைய தமிழகத்தின் நிலவெளிக்கும் இடையில் பெரிய இடைவெளி உள்ளது. இயற்கைக்கும் தமிழர்களுக்குமான உறவு பெரிதும் சிதிலமாகியுள்ளது. மழைக்காடுகள், சோலைகள் அழிக்கப்பட்டது, கானகத்தில் வாழும் உயிரினங்கள் வேட்டையின்மூலம் கொல்லப்பட்டது எனச் சூழலின் பல்லுயிர்ப் பெருக்கம் நாசமாகி விட்டது. தமிழகத்தில் இன்று செயல்படுத்தப் படுகிற கூடங்குளம் அணு உலைகள், மீத்தேன் திட்டம், நியூட்ரினோ, கார்பன் ஹைட்ரோ திட்டம் போன்ற பிரமாண்டமான அறிவியல் திட்டங்கள், கார்ப்பரேட்டு களின் ஆதாயத்திற்காக அமல்படுத்தப்படுகின்றன. இன்னொருபுறம் சூழலியலின் சீர்கேட்டினால் நீருற்றுகள் அற்றுப்போய், ஆறுகள் வறண்டு போய் விட்டன. பூச்சிக்கொல்லி நஞ்சு, வேதியியல் உரங்கள் காரணமாக வளமான மருத நிலங்கள் மலடாகிவிட்டன. பாலிதீன் பைகள், சாயக் கழிவுகள், ஆலைகளின் புகைகள், தோல் தொழிற்சாலைச் சுத்திகரிப்புக் கழிவுகள், வேதியியல் தொழிற்சாலைகளின் மாசுகள் எனத் தமிழகத்து நிலமும் காற்றும் சீரழிந்து விட்டன. இன்னொருபுறம் பெரிய நகரங்களில் அடிப்படை வசதிகள் இல்லாமல் பிதுங்கி வழியும் மக்கள் கூட்டம் என மனித வாழ்க்கையே இயற்கையிலிருந்து முழுக்க அந்நியமாகியுள்ளது. சூழலியல் சார்ந்து வாழ்ந்த சங்கத் தமிழர்களின் ஐந்திணை நிலமானது, இன்று கனவாக மாறியுள்ளது. என்றாலும் சூழல் உருவாக்கிய சக உயிரினங்களை நேசித்தல், இயற்கையுடன் இயைந்து செயல்படல், குடும்ப உறவில் காதல் போன்ற விழுமி யங்கள், இன்றளவும் தமிழர் வாழ்வில் எச்சங்களாகத் தொடர்கின்றன. அவை குறித்த புரிதலை இளந்தலைமுறை யினருக்கு உருவாக்கிட வேண்டியது அவசியமாகும்.

'நீர் இன்றி அமையாது உலகம்' எனப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கண்டறிந்திட்ட பாரம் பரியத்தில் வந்த தமிழர்கள், இன்று கடந்த காலத்தைப் பின்னோக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. பண்டைத் தமிழர் சூழலைப் போற்றி வாழ்ந்திட்ட முறையை மீண்டும் நடைமுறைப்படுத்த முயலுவது அவசியமாகும். தொழில்நுட்பரீதியில் பல்வேறு வசதிகள் வந்துவிட்டன என்றபோதிலும், இயற்கையின் சீற்றத்தை எப்படி எதிர்கொள்வது என்பது இன்று தமிழர்கள் எதிர் கொண்டிருக்கும் காத்திரமான சவால். சங்க காலத் தமிழர்கள் தகவல்தொடர்பு, போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையிலும், தங்களைச் சுற்றிலும் காட்சி யளிக்கும் சூழலைப் புரிந்துகொள்ள முயன்றனர்; சூழலுடன் ஒத்திசைந்து வாழ்வது அடிப்படையானது என்ற நிலையில் வாழ்க்கை பற்றிய விழுமியங்களை உருவாக்கினர். அறிவியல்ரீதியில் வளமாக வாழ்வதாக நம்பிக் கொண்டிருக்கும் இன்றைய தலைமுறையினர், சூழலில் இருந்து விலகுதல் துரிதமாக நடைபெறுகிறது. இந்நிலையில் இயற்கையோடு இயைந்து வளமான வாழ்க்கை வாழ்ந்திட சங்கத் தமிழர்களிடமிருந்து கற்றுக் கொள்ள விழுமியங்கள் இருப்பதுதான் உண்மை.

**உதவிய நூல்கள்**

1. கிருஷ்ணமூர்த்தி,கு.வெ. தமிழரும் தாவரமும். திருச்சி: பாரதிதாசன் பல்கலைக் கழகம், 2011.

2. முருகேசபாண்டியன்,ந. மறுவாசிப்பில் செவ்வியல் இலக்கியப் படைப்புகள். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2016. ●

# தஞ்சாவூரில் பெரியார் தொகுப்பு நூல் முன் வெளியீட்டுப் பரப்புரை




நியூசெஞ்சுரி புத்தக நிறுவனமும் தஞ்சை இலக்கிய வட்டமும் இணைந்து கடந்த *01-04-2017* அன்று மாலை 5 மணிக்கு தஞ்சாவூர் பெசண்ட் அரங்கத்தில், "நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்?" நூலின் முன்வெளியீட்டு விழா பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு நியூசெஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சண்முகம் சரவணன் அவர்கள் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் தஞ்சை இலக்கிய வட்ட எழுத்தாளர் செ.சண்முகசுந்தரம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தோழர்கள் எஸ்.எஸ். இராஜ்குமார், களப்பிரன், வெ.ஜீவக்குமார், திருஞானம், இரா.காமராசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

*1925* முதல் *1973* வரை மொழி, இலக்கியம், பண்பாடு, கலை, தத்துவம் குறித்த பெரியார் எழுத்துகளின் தொகுப்புகளான "நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்?" என்ற நூலின் ஐந்து தொகுதிகள் குறித்த பரப்புரையைத் தோழர்கள் பசு. கவுதமன் அவர்கள், பெரியார் விடுதலைக் கழகத்தின் தலைவர் தோழர் கொளத்தூர் தா.செ. மணி அவர்களும் மேற்கொண்டார்கள். நூல் பரப்புரையின் போது தோழர் பசு. கவுதமன், இந்நூல் தொகுப்பின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறி, நூல் முன்பதிவுக்கு ஏப்ரல் 15 வரை கால நீட்டிப்பு செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். தோழர் கொளத்தூர் மணி அவர்கள், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் பெரியார் எழுத்துகளைச் சிறப்பாகத் தொகுத்து வெளியிட முன்வந்திருப்பது மிகுந்த பாராட்டுதற்குரியது என்றும், இந்த நூலைத் தோழர்கள் அனைவரும் கட்டாயம் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், தமிழகத்தில் பொதுவுடைமைச் சமூகம் அமைக்கப் பெரியார்தான் வழிகாட்டி என்றும் பேசினார்.

தோழர் ஆர். நல்லகண்ணு அவர்கள் தலைமையேற்று சிறப்புரை ஆற்றினார். அச்சிறப்புரையில், "இந்தியாவின் மிகச்சிறந்த இரண்டு தலைவர்கள், சுய சிந்தனையாளர்கள் தந்தை பெரியாரும் சிங்காரவேலரும் ஆவார்கள். அவர்களின் சிந்தனைகள் இன்றைய இந்துப் பாசிச சக்திகள் ஆதிக்கம் பெறத் துடிக்கும் இன்றைய சூழலில், மீண்டும் படிக்கத் தகுந்தவை. ஆதலால்தான் பெரியார் எழுத்துகளை இதுவரை யாரும் வெளியிடாத வகையில், தொகுத்து வகைப்படுத்தியுள்ள தோழர் பசு.கவுதமனின் நூலை வெயிடுகின்றோம். பசு.கவுதமனின் வேண்டுகோள்படி மேலும் முன்பதிவுக்கு ஏப்ரல் 15 வரை கால நீடிப்பு செய்யப்படும்" என்று பேசினார். நியூ செஞ்சுரி புத்தக நிறுவன தஞ்சை மண்டல மேலாளர் எஸ். குமார் நன்றி நவில, பரப்புரை விழா இனிதே நிறைவுற்றது.

# பொறுப்புமிக்க மனிதர்கள்

மனு ஜோசப்

தமிழில்: க. பூரணச்சந்திரன்

**2016ஆம் ஆண்டின் சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்ற நாவல்!**




இதோ கடைசியாக, மிக எச்சரிக்கையாகவும் நிதானமாகவும் எழுதப்பட்ட ஒரு நாவல், தனது அறிவார்த்தமான மனத்தை நயமிக்க மிக வேகமான உரைநடையில் சொல்கிறது.
– டெஹல்கா

---

ஒரு மிக நேர்த்தியான தளத்தில், இந்த நூலிலுள்ள எல்லா மனிதர்களுமே கோமாளித்தனமான உருவங்களாகப் பார்க்கப்படலாம், நாம் எல்லோருமே இறுதியாக அப்படித்தானே இருக்கிறோம்.
– பிஸினஸ் ஸ்டாண்டர்ட

---

வெஞ்சினமும் காதலும்.
– தி நேஷனல்

---

விசித்திரமாகத் திரித்தமைக்கப்பட்டது.
–டெக்கான் ஹெரால்டு

**எமது வெளியீடுகள் தமிழகத்தின் அனைத்து முன்னணி புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்**

## எதிர் வெளியீடு

96, நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி–642 002, ✆ 04259–226012, 99425 11302

Email : ethirveliyedu@gmail.com ▪ www.ethirveliyedu.in

இணையம் வழி வாங்க :

**www.ethirveliyedu.in www.amazon.in**

# லெனினும் இந்திய விடுதலையும்

## எஸ்.ஜி.சர்தேசாய்

### தமிழில்: கே.ராமநாதன்



**தே**சிய சுய நிர்ணய உரிமை என்ற கோட்பாட்டில் லெனின் உறுதி மாறாது நின்றார். அடிமைப்பட்ட நாடுகளின் தேசிய விடுதலைக்கான போராட்டங்களை - காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக நடந்த இயக்கங்களை எப்போதும் ஆதரித்து வந்தார்.

இதற்குக் காரணம் அவரது ஆழ்ந்த ஜனநாயகக் கண்ணோட்டமும் உணர்ச்சியும் மட்டுமல்ல, ஏகாதிபத்தியத்தின் இயல்பு பாத்திரம் இவை குறித்து லெனின் நடத்திய சரியான புரட்சிகரமான ஆய்வின் அடிப்படையில் - ஏகாதிபத்திய நாடுகளின் பாட்டாளி வர்க்க சோஷலிஸ்ட் புரட்சிகளுக்கும், காலனி சார்பு நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியப் புரட்சிகளுக்கும் இடையில் பிரிக்க முடியாத இணைப்பு இருத்தலை எடுத்துக் காட்டினார்.

லெனினைப் பொருத்தவரையில் காலனி நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் முதலாளித்துவத்தை எதிர்த்து சோஷலிஸத்திற்காகப் போராடும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தில் ஒரு பகுதியேயாகும். மேலை நாடுகளின் சோஷலிஸ்ட் தொழிலாளி வர்க்க இயக்கங்களும் - கீழ்த்திசை தேசிய விடுதலை இயக்கங்களும் பரஸ்பரம் இணைந்தவை என்றும் எனவே ஆசிய - ஆப்பிரிக்க தேசிய விடுதலை இயக்கங்களுக்குப் பரிபூரணமான தங்குதடையற்ற ஆதரவினை அளிக்க வேண்டியது ஐரோப்பாவிலுள்ள தொழிலாளி வர்க்கக் கட்சிகளின் தலையாய கடப்பாடு என்றும் அவர் எப்போதும் வற்புறுத்தி வந்திருக்கிறார்.

வாஸ்தவத்தில் இதற்கு மேலும் பணியாற்றியுள்ளார். குறிப்பிட்ட ஒரு சாம்ராஜ்ய நாட்டிலுள்ள தொழிலாளி வர்க்கக் கட்சி அந்த சாம்ராஜ்ய நாட்டின் ஆட்சியின் கீழ் இருக்கும் நாடு அல்லது நாடுகளின் விடுதலை இயக்கத்தினை முழுமையாக ஆதரிக்க வேண்டியது அதன் கடமை என்று வற்புறுத்தியுள்ளார். அதன் பொருள் - இந்திய விடுதலை இயக்கத்தினை ஆதரிப்பது

பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் குறிப்பிட்ட கடமை, பிரெஞ்சு காலனிகளின் விடுதலைப் போர் களை ஆதரிப்பது பிரெஞ்சு கட்சியின் கடமை என்பதாகும்.

காலனி விடுதலை இயக்கம், தேசிய சுயநிர்ணய உரிமை என்ற உயிர் நாடியான பிரச்சினைமீது லெனின் சோஷல் டொமாகிரட் (சீர்திருத்தவாத) இரண்டாம் அகிலத்துடன் கருத்து மாறுபட்டுப் பிரிந்தார். காலனிகளில் ஏகாதிபத்திய ஆட்சிகள் நடப்பது பற்றி வெறும் பூச்சுப்பூசி அடிமைப்பட்ட நாடுகளுக்குச் சுயநிர்ணய உரிமை வழங்காதிருப் பதற்காகச் சாக்குப் போக்குகளை தேடித் திரிந்த சோஷல் டொமா கிரடிக் தலைவர்களை (உ-ம். ராம்ஸே மக்டொனால்ட் போன்றாரை) லெனின் ஆத்திரத்துடன் கண்டனம் செய்தார்.

துவக்க ஆண்டுகளிலேயே இந்தியா - சீனா முதலிய நாடுகளில் பிரிட்டனும் இதர ஏகாதி பத்திய வல்லரசுகளும் வகித்துவந்த பொருளாதார அரசியல் பாத்திரம் பற்றியும், அவற்றின் கொடூர மான பைசாச ஆட்சி முறைகளையும், அதோடு சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகளையும் குறித்து லெனின் மிகவும் விரிவாக எழுதியிருந்தார். மேலும் இந்தப் பிரச்சினைகள் குறித்து ஏராள மான குறிப்புக்களை அவர் வைத்திருந்தார். உதாரண மாக பிரிட்டிஷார் சிப்பாய்க் கலகம் என்று அழைக்கும் 1857ஆம் ஆண்டின் எழுச்சியின் வெகுஜனப் புரட்சித் தன்மை பற்றிய குறிப்புகளை வைத்திருந்தார். 1905ஆம் ஆண்டில் வங்காளம் பிரிக்கப்பட்டது குறித்து அவர் தமது ஏகாதி பத்தியம் பற்றிய குறிப்பேடு (பக் 448) களில் சுட்டிக் காட்டுவதாவது:

பிரிட்டிஷார் தமது பிரித்தாளும் சூழ்ச்சியை வைத்தே ஆதிக்கம் செலுத்துகிறார்கள்... 1905இல் பிரிட்டிஷார் (தேசிய இயக்கத்தைப் பலவீனப் படுத்தவே) வங்காளத்தைப் பிரித்தார்கள்.

அவரது பல்வேறு நூல்களில் இது போன்ற எண்ணற்ற குறிப்புகள் வருகின்றன.

இந்தியா-சீனா தேசிய விடுதலை இயக்கங்கள் குறித்து லெனின் பலமுறை எழுதியுள்ளார்- பேசி யிருக்கிறார். உலக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடைபெறும் போராட்டத்தில் இவை நிர்ணய மான முக்கியத்துவமுள்ளவை என்று அவர் கருதினார். ஏகாதிபத்தியத்தின் தடித்தனம், அச் சுறுத்தல் ஆதிக்கம் இவற்றுக்கு எதிராக இந்தியாவிலும் சீனாவிலும் எழுந்த வெகுஜனப் போராட்டத்தின் சிறுசிறு செயல்களையும் அவர் அடிக்கடி புகழ்ந்து பெருமைப்படுத்தினார்.

பண்பாடுள்ள ஐரோப்பியரும் காட்டுமிராண்டி ஆசிரியர்களும் என்ற கடும் நையாண்டிக் கட்டுரை 1913 ஏப்ரல் 13ந் தேதி பிராவ்தாவில் வெளிவந்தது. இதில் அயினா என்னும் 11 வயது பணிப்பெண் பர்மாவில் ஒரு பிரிட்டிஷ் ராணுவ அதிகாரியால் பலவந்தம் செய்யப்பெற்று அறைக்குள் பூட்டி வைக்கப்பெற்ற சம்பவம் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. அவளது தந்தை சாகும் தருவாயி லிருந்தார். மகளைப் பார்க்க விரும்பினார். சம்பவம் பற்றித் தெரிந்து கொண்ட கிராம மக்கள் கோபாவேசமுற்று போலீசாரைக் கொண்டு அந்த பிரிட்டிஷ் அதிகாரியைக் கைது செய்ய நிர்ப்பந்தித் தார்கள். அந்த அதிகாரிக்கு எதிராக எல்லாச் சாட்சியங்களும் இருந்தும் நீதிபதி (அவரும் வெள்ளைக்காரர்) அயினா ஒரு வேசை! என்று கூறி அந்த பிரிட்டிஷ் அதிகாரியை விடுதலை செய்து விட்டார்.

லெனின் இந்த நிகழ்ச்சி முழுவதையும் தனது கட்டுரையில் விவரித்து "இந்தியாவில் இதைப் போல லட்சோப லட்சம் சம்பவங்கள் நடக் கின்றன" என்று குறிப்பிடுகிறார். காட்டுமிராண்டி தர்பார் நடத்தும் பிரிட்டிஷ் மிதவாதிகளை வன்மையாகக் கண்டிக்கிறார். "இந்த நிகழ்ச்சி 30 கோடி மக்களுக்கு மேல் உள்ள இந்திய நாட்டில் புரட்சி தீவிரமாக வளர்ந்து வருவதை - நீண்ட தோர் ஆய்வுரையைவிடத் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது" என்று குறிப்பிடுகிறார்.

மேலும் 1908ஆம் ஆண்டிலேயே லெனின் எழுதினார்:

இந்தியாவில் "நாகரிகம் படைத்த" பிரிட்டிஷ் முதலாளிகளின் கீழ் இருக்கும் சுதேசி அடிமைகள் அண்மைக் காலகட்டத்தில் தமது "எஜமானர் களுக்கு" விரும்பத்தகாத கவலையைக் கொடுத்து வருகிறார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி அமைப்பு என்ற பேரில் நடக்கும் வன்முறைக்கும் கொள்ளைக்கும் எல்லையே இல்லை (உலக அரசியலில் தீப்பற்றத்தக்க தகவல்கள்).

இந்தக் கட்டுரையில் தான் லெனின் திலகரைப் பற்றியும், 1908இல் திலகர் மீது விதிக்கப் பெற்ற காட்டுமிராண்டித் தண்டனையை எதிர்த்து பம்பாய் பஞ்சாலைத் தொழிலாளர் நடத்திய கண்டன வேலை நிறுத்தம் பற்றியும் குறிப்பிடும் சிறந்த பகுதி வருகிறது.

அது கூறுவதாவது:

இந்திய மக்கள் தமது எழுத்தாளர்கள் அரசியல் தலைவர்களை ஆதரித்து நிற்கத் தொடங்கி விட்டார்கள். பிரிட்டிஷ் குள்ளநரிகள் இந்திய ஜனநாயகவாதி திலகருக்கு எதிராக விதித்த நெறிகெட்ட தண்டனை - நீண்ட கால நாடு கடத்தும் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் எழுந்த கேள்வியி

விருந்து இந்திய நீதிபதிகள் அவரை விடுதலை செய்யத் தீர்ப்பளித்ததும் பிரிட்டிஷ் நீதிபதிகள் தீர்ப்பால் தண்டனை விதிக்கப் பெற்றதும் வெளி வந்தது - பணமூட்டைகளின் கையாட்கள் ஒரு ஜனநாயகவாதி மீது இவ்வாறு பழி வாங்கியது சம்பந்தமாக பம்பாய் தெருக்களில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. வேலை நிறுத்தம் வெடித்தது. இந்தியா விலும் தொழிலாளி வர்க்கம் போதபூர்வமான அரசியல் வெகுஜனப் போராட்ட முறையினை வகுத்துக் கொண்டு விட்டது. எனவே இந்தியாவி லுள்ள ரஷ்யன்- வடிவ பிரிட்டிஷ் ஆட்சிக்கு அதோகதிதான்.

யுத்தப் பிற்கால இந்தியாவின் தேசிய எழுச்சி பற்றியும், காந்திஜி பற்றியும் காங்கிரஸ் தலை மையில் நடைபெற்ற இயக்கம் குறித்தும் லெனின் எவ்வாறு அணுகினார் என்ற குறிப்பிட்ட விஷயத்தை இங்கு விவரிக்க விரும்புகிறோம். இந்த விஷயம் மிக மிக வரலாற்று முக்கியத்துவம் படைத்ததாகும். இ.ன்றைய இந்திய ஜனநாயகவாதிகளுக்கும் சோஷலிஸ்டுகளுக்கும் இது கருத்தைக் கவர்வ தாகும். 1930-ஐ ஒட்டிய துவக்க நாட்களில் இந்தியக் கம்யூனிஸ்டுகள் இந்தப் பிரச்சினை குறித்து லெனின் வெளியிட்ட கருத்துக்களைப் படித்துப் புரிந்து கொண்டிருப்பார்களாயின் 1930-34 சட்ட மறுப்பு இயக்கத்தின்போது தாம் செய்த பெருந் தவறுகளிலிருந்து தப்பியிருக்க முடியும், அப் போராட்டத்தினூடே பலம் பொருந்திய தேசிய சக்தியாக முகிழ்ந்திருக்கக்கூடும்.

இதைப் பற்றி விரிவான ஒரே கட்டுரை லெனினால் எழுதப்படவில்லை. ஆனால் அவரது கருத்துக்களை எடுத்து விளக்கத்தக்க போதிய அத்தாட்சிகள் இருந்தன. லெனின் கிராடிலும் மாஸ்கோவிலும் 1920 ஜூலை 17 முதல் - ஆகஸ்ட் 7-ந் தேதி வரையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது மாநாட்டில் தேசிய காலனியாதிக்கப் பிரச்சினைகள் பற்றிய கமிஷனில் இந்தப் பிரச்சினை சாங்கோபாங்கமாக விவாதிக்கப் பெற்றது. லெனின் பங்கு பற்றிய இந்தக் கமிஷனின் விவாத விவரங்களைப் படித்துப் பார்த்தால் இந்தப் பிரச்சினை மீது மேலும் தெளிவு கிடைக்கும்.

இரண்டாவது மாநாட்டிற்கு அவர் சமர்ப் பித்த தேசிய காலனியாதிக்கம் பற்றிய பிரச்சினை ஆய்வுரையின் பூர்வாங்க நகலில் அடிமைப்பட்டுக் கிடக்கும் காலனி நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகள், சுதந்திரமாக தொழிலாளி வர்க்க விவசாயி ஸ்தாபனங் களைக் கட்டி வெகுஜனப் போராட்டங்களைக் கட்டவிழ்த்து விட வேண்டும் என்று தாமே வலியுறுத்தியுள்ளார் லெனின். இத்தகைய நாடு களிலுள்ள கம்யூனிஸ்டுகள் தேசிய பூர்ஷ்வாக் களின் சமரசப் போக்கினை எதிர்த்துப் போராட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தி யுள்ளார். இந்த விஷயங்களில் கருத்து வேற்று மைக்கே இடமில்லை.

தேசிய பூர்ஷ்வாத் தலைவர்களால் நடத்தப் பெறும் தேசிய விடுதலை இயக்கங்கள் இத் தலைவர்கள் விஷயத்தில் கம்யூனிஸ்டுகள் எத்தகைய அணுகுமுறையினை அனுஷ்டிக்க வேண்டும் என்ற உண்மையான, உயிர்நாடியான விஷயந்தான் விவாதிக்கப் பெற்றது. பெரும்பாலான காலனி நாடுகளில் குழந்தைப் பருவத்திலிருந்த கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இது சோதனையான பிரச்சினை.

இரண்டாவது காங்கிரஸிற்குப் பல ஆண்டுகள் முன்பே காலனி நாடுகளில் இருக்கும் பூர்ஷ்வா வர்க்கம் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தி, அது பிற்போக்குக்கு எதிராக நிற்கிறது என்ற கருத்தை லெனின் கொண்டிருந்தார்.

உதாரணமாக 1913 - மே மாதத்தில் அவர் எழுதிய பிற்போக்கு ஐரோப்பாவும், முன்னேறும் ஆசியாவும் என்ற புகழ்பெற்ற கட்டுரையில் லெனின் பிற்போக்கு முகாமுக்குள் புகுந்துவிட்ட ஐரோப்பிய பூர்ஷ்வாக்களையும், பிற்போக்குக்கு எதிராக அன்றும் நின்றிருந்த ஆசிய பூர்ஷ்வாக்களையும் ஒப்புநோக்கி வேற்றுமையினைக் காட்டினார். அக்கட்டுரையின் வாசகம் பின்வருமாறு:

ஆசியாவில் எங்கணும் வலிமைமிக்க ஜனநாயக இயக்கம் வளர்ந்து வருகிறது, பரவி வருகிறது, வலுப்பெற்று வருகிறது. அங்கு இப்போதும்கூட பூர்ஷ்வாக்கள் பிற்போக்குக்கு எதிராக மக்கள் பக்கம் சார்ந்து நிற்கிறார்கள். லட்சோப லட்சம் மக்கள் ஒளிமிகுந்த வாழ்க்கை பெற விடுதலை காண விழிப்படைந்து வருகிறார்கள்.

தேசிய விடுதலைக்காக காலனி நாடுகளில் நடைபெறும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டங் களில் தேசிய பூர்ஷ்வாக்களுக்குரிய இடத்தை லெனின் எங்கே நிர்ணயித்து வைத்தார் என்பது பற்றி எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை. பூர்ஷ்வாக் களைப் பற்றிப் பொய்யான பிரமைகளை வைத் திராமல் அவர்களை மக்கள் முகாமில் அவர் வைத்தார்- விரோதிகள் முகாமிலல்ல.

திலகரைக் குறித்து லெனின் பாராட்டியுள்ள பகுதியினை மேலே குறிப்பிட்டுள்ளோம்.

இதே கண்ணோட்டத்தினை, மதிப்பீட்டை முறையாகத் தொடர்ந்து லெனின் தனது தேசிய காலனிப் பிரச்சினைகள் பற்றிய பூர்வாங்க நகல் ஆய்வுரையில் கூறியதாவது:

நிலப்பிரபுத்துவ தந்தை வழி - தந்தை வழி விவசாய உறவுகள் ஆதிக்கம் செலுத்தி வரும் மிகவும் பின்தங்கிய அரசுகள் தேசங்களில் பின்

வருவனவற்றை முக்கியமாகக் கருத்தில் வைக்க வேண்டும்.

முதலாவதாக: இந்த நாடுகளின் பூர்ஷ்வா ஜனநாயக விடுதலை இயக்கத்திற்கு எல்லாக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் உதவி செய்தல் வேண்டும். இதில் மிகவும் தீவிரமான உதவிகள் செய்ய வேண்டிய பிரதான கடமை - காலனி என்ற முறையிலோ நிதி விஷயத்திலோ பிற்பட்ட நாடு சார்ந்து நிற்கிற நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்களுடையதாகும். (கீழ்த்திசை தேசிய விடுதலை இயக்கம் மாஸ்கோ 1962, பக். 254)

எனினும் கமிஷனில் தேசிய காலனிகள் ஆய்வுரை விவாதிக்கப்பட்டு வெளிவந்த போது இறுதியாக இரண்டாவது காங்கிரஸ் அங்கீகரித்த சமயம் "பூர்ஷ்வா ஜனநாயக விடுதலை இயக்கம்" என்ற சொற்களுக்குப் பதிலாக "தேசியப் புரட்சி இயக்கம்" என்ற சொற்கள் போடப்பட்டன, இது எவ்வாறு நிகழ்ந்தது இதன் பொருள் என்ன?

அந்தக் காலத்தில் - பிறகு சில ஆண்டு களுக்கும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தலைமைப் பதவியில் இருந்த வளர்ச்சியுற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் எம்.என். ராய் என்பது தெரிந்ததே. ராயின் மதிப்பீடுகளுக்கும் கருத்துக் களுக்கும் லெனின் முக்கியத்துவம் கொடுத்தார். ராய் கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது மாநாட்டிற்குப் (மெக்சிகோவிலிருந்து) பிரதி நிதியாக வந்திருந்தார். தேசிய காலனிப் பிரச்சினைகள் பற்றி விவாதித்த கமிஷனில் தீவிரமாகப் பங்கு பற்றிய கமிஷனுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் அவர். வாஸ்தவத்தில் லெனினது ஆய்வுரைக்கு மாற்றாக தனது சொந்த ஆய்வுரை ஒன்றை ராய் கமிஷனுக்குச் சமர்ப்பித்தார்.

அந்தக் காலகட்டத்தில் ராய் எடுத்த நிலை மிக மிகத் தீவிர "இடதுசாரி"த் தனமானது. 1928க்குப் பிறகு கம்யூனிஸ்ட் அகிலத்தால் வெளி யேற்றப்பட்ட பிறகு அவர் படிப்படியாக வலது சாரிப் பக்கம் சாய்ந்து இறுதியாக மார்க்சிஸத் தையே மறுத்து விட்டார்.

கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாம் காங்கிரஸின் போது ராய், லெனினுக்கும் "இடதுசாரி"யாக இருந்தார் என்ற உண்மை எல்லோராலும் அங்கீ கரிக்கப்பட்டுள்ளது. அவர் சமர்ப்பித்த மாற்று ஆய்விலும், பிற்பாடு வெளியிடப்பட்ட நினைவுக் குறிப்புகளிலும் இத்தகவல் தெளிவாக்கப்பட்டுள்ளது.

ஆனால் மிக நெருக்கமாக விவரம் தெரிந்த தாக ஜம்பமடித்த ராய் வெறும் கனவுலகில் சஞ்சரித்தார். தனது மனதில் கற்பனைகளைப் படைத்துக் கொண்டிருந்தார்.

ராயின் மாற்று ஆய்வுரையிலிருந்து பொருத்த மான பகுதிகளைத் தருகிறோம்:

சார்பு நாடுகளில் முற்றிலும் வேறுபட்ட இரு இயக்கங்கள் காணப்படுகின்றன. நாளுக்கு நாள் இவை மேலும் மேலும் பிரிந்து செல்கின்றன. ஒன்று: பூர்ஷ்வா ஜனநாயக தேசிய இயக்கம். பூர்ஷ்வா அமைப்புக்குள் அரசியல் சுதந்திரம் விழைகிறது. மற்றது எல்லாவிதமான சுரண்டல் களையும் எதிர்த்து ஏழைகளும் பாமரர்களுமான விவசாயிகளும் தொழிலாளர்களும் நடத்தி வரும் வெகுஜனப் போராட்டம். (கோடிட்டது ஆசிரியர்.)

1920ஆம் வருடத்திய இந்தியாவில் இவ்வாறு இருவேறான இயக்கங்கள் பூர்ஷ்வா அமைப்புக்குள் அரசியல் சுதந்திரம் கோரும் வேலைத் திட்டமும், எல்லாவிதமான சுரண்டல்களிலிருந்தும் விடுதலை பெற விழையும் தொழிலாளர் விவசாயிகள் திட்டமும் இருந்தனவா? அவை ராயின் கனவில் இருந்திருக் கலாம். ஆனால் கனவுகள் நனவுகளல்லவே, மேலும் பார்ப்போம்.

பெரும்பாலான காலனிகளில் ஸ்தாபன ரீதியான புரட்சிக் கட்சிகள் ஏற்கெனவே உள்ளன. அவை உழைக்கும் பொது மக்களுடன் நெருங்கிய உறவுகள் கொள்ள முனைகின்றன.

1920ஆம் ஆண்டு மத்தியில் இந்தியாவில் மருந்துக்கும் ஒரு கம்யூனிஸ்ட் இருக்கவில்லை. அப்படி இருக்க ஸ்தாபன ரீதியான புரட்சிக் கட்சிகளையும் உழைக்கும் மக்களுடன் நெருங்கிய தொடர்பையும் பற்றிப் பேசுவானேன். இந்தச் சொற்றொடரின் பொருள் கம்யூனிஸ்ட் கட்சி இருந்தது என்பதேயாகும். கீழே தத்தம் நாட்டில் இந்தக் கட்சிகள் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படைகளாக விளங்கின என்று ராய் குறிப்பிடு கிறார். அவர் சாட்சாத் கம்யூனிஸ்ட் கட்சியையே குறிப்பிடுகிறார் என்று கொள்ளலாம்.

ராயின் ஆய்வுரையில் மிகவும் அதிசயமான வரையறுப்பு பின்னால் தரப்படுகிறது.

துவக்கத்திலிருந்தே காலனி நாடுகளின் தலைமை கம்யூனிஸ்ட் முன்னணி படையினர் கைகளில் இருந்திருக்குமானால் புரட்சிகரமான பொது மக்கள் திக்குத் தெரியாது சென்றிருக்க மாட்டார்கள். (கோடிட்டது ஆசிரியர்.)

ஓர் அடிமைப்பட்ட நாட்டில் எவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சி துவக்க முதலே விடுதலை இயக்கத்தின் தலைமையைப் பெற முடியும்? சரியான கொள்கையும் நடைமுறைத் தந்திரமும் இருந்தால் கூட மிகப் பெரும் உழைப்புக்கும் பொறுமைக்கும் பிறகு உருவாக வேண்டிய ஒரு

கடமையினைக் கண்ணிமைக்கும் நேரத்தில் பெறத் துடிக்கிறார் ராய்.

தமது நினைவுக் குறிப்புகளில் (1964 பதிப்பு) ராய் லெனினுடன் இரண்டாம் காங்கிரசின் போது தமக்கு எழுந்த வேறுபாடுகளை விரிவாக வெளியிட்டிருக்கிறார். தனது நிலையினை நியாயப் படுத்துவதற்கான முயற்சியில் காலனிகளிலுள்ள (அடிமை - சார்பு நாடுகளில்) தேசிய பூர்ஷ்வாக் களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாத்திரம் பற்றிய லெனினுடைய நிர்ணயிப்பினை மிகைப்படுத்திக் கூறுகிறார். எப்படியிருப்பினும் லெனின் தேசிய பூர்ஷ்வா தலைமையுடன் விமர்சன ரீதியான ஆக்க ரீதியான ஒத்துழைப்பு மனப்பான்மையினை அந்த நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் மேற் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். அதே பொழுதில் ராய் முற்றிலும் எதிர்மறையான- எதிர்ப்பு மனப்பான்மையினைக் கோரினார். அவரே தனது நினைவுக் குறிப்புகளில் கூறுவதைப் பாருங்கள்.

அவர்(லெனின்) ஏகாதிபத்தியம் காலனி நாடுகளை நிலப்பிரபுத்துவ, சமூகச் சூழ்நிலையில் அழுத்தி வைத்து முதலாளித்துவ வளர்ச்சியைத் தடுத்து, சுதேசி பூர்ஷ்வாக்களின் ஆசைத் திட்டங் களுக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளது என்று வாதம் செய்தார். வரலாற்று ரீதியாக, தேசிய விடுதலை இயக்கத்திற்கு பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியின் முக்கியத்துவமுண்டு... எனவே கம்யூனிஸ்டுகள் தேசிய பூர்ஷ்வாத் தலைமையின் கீழுள்ள காலனி விடுதலைப் போருக்கு- அன்ன வர்கள் புறநிலையில் புரட்சிகர சக்தி என்று கருதி உதவி புரியவேண்டும்...

...காந்தியின் பாத்திரம் குறித்து தீவிரமான வேற்றுமைகள் இருந்தது. ஒரு வெகுஜன இயக்கத் திற்கு உத்வேகமூட்டி தலைமை தாங்கியவர் என்ற முறையில் (காந்தி) புரட்சியாளர் என்று லெனின் நம்பினார். சமய கலாச்சார மறுமலர்ச்சிவாதி என்ற முறையில் அவர் அரசியல் துறையில் புரட்சி யாளராகத் தோற்றமளித்த போதிலும் சமூக ரீதியாக நிச்சயமாயும் பிற்போக்கானவராகவே இருக்க வேண்டும் என்று வாதிட்டேன்.

வேற்றுமையின் முக்கிய அம்சம் ராய் சற்று கோணமான ரீதியில் விளக்கம் தந்த போதிலும்- தெட்டத் தெளிவாகத் தெரிந்ததே.

இந்தப் பிரச்சினை மீது வெளிச்சம் தரும் இன்னோர் ஆதாரமும் உள்ளது. கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் பிரதி நிதியாக பிரெஞ்சு நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் ஆல்பிரட் ரோஸமர் கலந்து கொண்டார். லெனின் நாட்களில் மாஸ்கோ 1920-21 என்ற மகுடத்தில் வந்த தமது நினைவுக் குறிப்புகளில் அவர் கூறியதாவது:

லெனின் மிகவும் பொறுமையாக ராய்க்கு விளக்கம் தந்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பல காலம் அல்லது சிலகாலம் சிறிய கட்சியாகத்தான் இருக்கும். கொஞ்சம் உறுப்பினர்களே இருப் பார்கள், பலவீனமான வசதிகள் தான் இருக்கும். தனது வேலைத் திட்டம் தனது செயல்கள் மூலம் கணிசமான விவசாயிகள் தொழிலாளர்களை அணுகும் ஆற்றல் பெற்றிருக்காது. மறுபுறத்தில் தேசிய சுதந்திரக் கோரிக்கையின் அடிப்படையில் பெருவாரியான மக்களைத் திரட்டுவது சாத்திய மாகலாம் - அனுபவம் இது சரி என்பதை பெரியளவுக்கு எடுத்துக் காட்டி விட்டது. இந்தப் போராட்டத்தின் மூலம் தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது ஸ்தாபனத்தை உருவாக்கி வளர்த்து, பின்னர் தேசிய கோரிக்கைகளை திருப்திகர மாகப் பெற்ற பிறகு இந்திய பூர்ஷ்வாக்களைத் தாக்குவதற்குரிய ஆற்றலைப் பெறமுடியும் (இந்தி யாவில் கம்யூனிசம் என்ற நூலிலிருந்து மேற்கோள் ஓவர்ஸ்ட்ரீட் ¬ விஸ்ட் மில்லர்.).

இந்தக் கருத்துக்களையும் எழுத்துக்கெழுத்து எடுத்துக் கொள்ள வேண்டுவதில்லை. ஆனால் இவை வழங்கும் விஷயம் ஒன்றே.

இதை எளிதாகச் சொல்லப்போனால் - இந்திய கம்யூனிஸ்டுகள் காந்தியையும் அவர் தலைமையில் நடந்த வெகுஜனப் போராட்டங்களையும் ஆதரிக்க வேண்டும். அவற்றோடு ஒத்துழைக்க வேண்டும். அதே பொழுதில் அந்த இயக்கம் மேலும் தீவிர மானதாகவும் போர்க்குணம் படைத்ததாயும் இருக்கத் தகுந்த நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்பதே லெனின் விருப்பம்.

தேசிய காலனிப் பிரச்சினைகள் பற்றிய கமிஷனில் நடைபெற்ற விவாதத்தினடிப்படையில் முந்திய வாசகங்களை மாற்றுவதற்கு லெனின் ஒப்புக்கொண்டார் என்பது உண்மை. இதை மறுக்க முடியாது. இந்த வாசக மாற்றம் வருமாறு: "எல்லாக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் இந்த (சார்பு- ஆர்) நாடுகளின் பூர்ஷ்வா ஜனநாயக விடுதலைப் போராட்டங்களை ஆதரிக்க வேண்டும். அதோடு பூர்ஷ்வா ஜனநாயக விடுதலை இயக்கம் என்ற வாசகத்திற்குப் பதில் தேசிய புரட்சி இயக்கம் என்பதைச் சேர்க்க வேண்டும் (கீழ்த்திசையில் தேசிய விடுதலை இயக்கம் பக் 265-66).

அந்த நாட்களில் லெனின் மிகவும் அடக்கத் துடன் நடந்து வந்தார். விவாதிக்கப்படும் விஷயத்தில் தன்னைவிட அதிகமாக ஞானமுடையவர்கள் என்று தாம் கருதியவர்கள் கருத்துக்கு மிகவும் மதிப்புக் கொடுத்து வந்தார். கமிஷனில் ராய்

மாத்திரமல்ல 'இடதுசாரி'. அதே கருத்துடைய வேறு சிலரும் இருந்தனர். லெனின் தனது கருத்துகளை மாற்றிக்கொள்ளும்படி ராய் வற்புறுத்தியதாகச் சொல்லப்படும் கதையின் யதார்த்தம் இதுவே.

இதில் விசேஷம் என்னவென்றால் ராயின் "குறிப்புகளில்" இது இரண்டாந்தடவையாகக் குறிப்பிடப்படுகிறது. ராயின் நிலைமைகள் சிலவற்றை ஏற்றுக்கொண்ட பிறகும்கூட லெனின் "நாம் புதிய விஷயங்களைத் துருவி ஆராய்கிறோம், நடைமுறை அனுபவம் கிடைக்கும்வரை இவை பற்றிய இறுதி முடிவுகளை ஒத்திவைக்க வேண்டும்" என்று சுட்டிக் காட்டியதாகக் கூறப்படுகிறது.

தேசியத்தை ஆபத்தான ஒன்றாகச் சித்தரிக்க வேண்டாம் என்று லெனின் அடிக்கடி எச்சரிக்கை செய்து வந்ததாக ராயும் கூறுகிறார்.

எனவே இந்தத் தகவல்களின் மூலஸ்தானம் எதுவாக இருந்தபோதிலும் எல்லா அத்தாட்சிகளும் அதே முடிவுக்கு இட்டுச் செல்கின்றன - அதாவது - காலனி நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகள் ஒரு பலம் பொருந்திய புரட்சிகர சக்தியாக ஓங்கி வளரவேண்டுமானால் பூர்ஷ்வா தேசிய விடுதலை இயக்கங்களில் கலந்து கொள்ளவேண்டும் என்பதை லெனின் ஆணித்தரமாக வலியுறுத்தினார். அப்படிக் கலந்துகொள்ளாதிருப்பது - அவற்றின் தலைவர்களை "பிற்போக்காளர்கள்" என்று கண்டனம் முழக்கிவிட்டு அவ்வியக்கங்களுக்கு எதிராக நிற்பது, "உண்மையான" தேசியப் புரட்சி இயக்கம் என்ற பேரில் "தனியாக" ஒரு மாற்று இயக்கத்தினை உருவாக்க முயல்வது இவை போன்ற செயல்களால் புரட்சி வராது. மாறாக உயர்ந்துவரும் தேசிய விடுதலை இயக்க வெள்ள ஓட்டத்திலிருந்து கம்யூனிஸ்டுகள் தனிமைப்படுத்தப் படுவார்கள், வலுவற்றவர்களாக ஆக்கப் படுவார்கள்.

காலனி விடுதலை இயக்கத்தின் மிகவும் சிக்கலான நுட்பமாக உள்ள பிரச்சினைகளையும் கூட பிடிப்புடன் உணர்ந்து செயல்படும் அதிசயமான ஆற்றலை லெனின் பெற்றிருந்தார் என்பதைப் பிரகடனம் செய்யும் ஒரு சம்பவம் உள்ளது.

1920இல் இந்திய புரட்சியாளர் குழு ஒன்று லெனினுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியது. லெனின் மே 20ந் தேதி அனுப்பிய பதிலில் பின்வருமாறு கூறினார்:

தொழிலாளர் விவசாயிகள் குடியரசினால் பிரகடனம் செய்யப்பெற்ற - விதேசி சுதேசி முதலாளிகளின் சுரண்டலிலிருந்து ஒடுக்கப்பட்ட நாடுகளை மீட்பதற்காக சுய நிர்ணய உரிமை விடுதலை என்ற கோட்பாடுகள் தமது சுதந்திரத்திற்காக வீரமாகப் போராடிவரும் முற்போக்கு இந்தியர்களிடை உடனடியான பிரதிபலிப்பினை ஏற்படுத்தியிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ரஷ்யாவிலுள்ள உழைக்கும் மக்கள் இந்திய தொழிலாளி விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியை குன்றாத அக்கறையுடன் கவனித்து வருகிறார்கள். உழைக்கும் மக்களின் ஸ்தாபனச் சிறப்பும், கட்டுப்பாடும், அவர்களது விடாமுயற்சியும் உலகத் தொழிலாளருடன் அவர்கள் காட்டிவரும் ஒருமைப்பாடும் அவர்களது இறுதி வெற்றிக்கு உறுதி செய்வதாகும். முஸ்லிம்- முஸ்லிமல்லாதார் நெருங்கி இணைந்து செயல்படுவதை வரவேற்கிறோம். இத்தகைய இணைப்பு கீழ்த்திசையிலுள்ள உழைப்பாளி மக்கள் அனைவரிடமும் விரிவடைதல் வேண்டும் என்று மனப்பூர்வமாக விரும்புகிறோம். இந்திய - சீன கொரியா - ஜப்பான் பாரசீக துருக்கித் தொழிலாளர்களும் விவசாயிகளும் கரம் கோத்து - விடுதலை என்ற பொது லட்சியத்தை நோக்கி சேர்ந்து அணிவகுத்துச் சென்றால் மட்டுமே - சுரண்டும் சக்திகளை எதிர்த்து நிர்ணயமான வெற்றியை உறுதிப்படுத்த முடியும். சுதந்திர ஆசியா நீடூழி வாழ்க! ('கீழ்த்திசையில் தேசிய விடுதலை இயக்கம்' பக். 248.)

இந்தப் பதிலுரை முழுவதும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் விடுதலை பற்றிய பிரச்சினையில் லெனின் காட்டும் உணர்ச்சி, தெளிவு, கண்ணோட்டம், கொள்கை இவற்றை எடுத்துக் காட்டுகிறது- அதே பொழுதில் இந்தப் பதிலுரையிலுள்ள ஒரு குறிப்பிட்ட முக்கியமான அம்சத்தினைக் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

லெனின் தமது பதிலுரையில் வரவேற்றுள்ள "1920ஆம் ஆண்டின் முஸ்லிம் - முஸ்லிமல்லாதார் நெருங்கி இணைந்து" செயல்படும் சம்பவம் எது? கிலபாத் பிரச்சினையின் அடிப்படையில் இந்தியாவில் ஏற்பட்ட இந்து - முஸ்லிம் ஒற்றுமையினையே அவர் குறிப்பிடுகிறார் என்பதில் சந்தேகமில்லை.

இந்திய சுதந்திர இயக்கத்தின் மிகவும் சிக்கலான கட்டத்தில் அந்த ஒற்றுமையின் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் பாத்திரத்தை லெனினது கழுகுக் கண்கள் குறிப்பாகக் கவனிக்கத் தவறவில்லை. ராயைப் பொறுத்தவரை கிலாபத் ஐக்கியம் வெறும் சமய சம்பந்தமான மறுமலர்ச்சி, பிற்போக்கானது - போலும்.

இந்திய விடுதலை இயக்கம் குறித்து லெனினுக்கிருந்த ஞானப் பிடிப்பு இத்தகையது, இந்தியாவின் உழைக்கும் மக்களின் இறுதி விமோசனத்திற்குரிய முன்னேற்றப்படி என்ற முறையில் அதன் வெற்றிக்கு இத்தகைய மதிப்பிட முடியாத வழிகாட்டுதலை லெனின் அருளினார். ●

# வளர்ச்சியின் ரகசியம்

## பொன்னீலன்

**வி**ருதுநகர் மாவட்டம் பாறைப்பட்டி என்னும் பின்தங்கிய சிற்றூரில், பின்தங்கிய ஒரு சமூகத்தில், சுமாரான ஒரு குடும்பத்தில் பிறந்த மா.பா.குருசாமி தன் வாழ்க்கையை "எப்படி இப்படி" என்னும் தலைப்பில் ஒரு நூலாக வெளியிட்டிருக்கிறார்.

பாறைப்பட்டி மாரியப்ப நாடார் - சொர்ணம் அம்மாள் இணையரின் மகனாகப் பிறந்த மா.குருசாமி அவருக்கானத் தனித்த அடையாளத்துக்காக மா.பா.குருசாமி எனப் பெயர் மாற்றப்பட்டு, ஆறாவது வகுப்பில் சேர்ந்து படிப்பதற்கே பெரும் போராட்டம் நடத்த வேண்டியதாயிற்று. அந்தப் பத்து வயதுச் சிறுவன் தமிழகத்தின் சிறந்த கல்வியாளர்களில் ஒருவராக, எப்படி வளர்ந்தார், மலர்ந்தார் என்பதை விளக்கும் நூல்தான் இந்தத் தன்வரலாறு.

மதுரை காந்திய புத்தக மையத்தின் தலைவராக இருந்து வருபவர் மா.பா.குருசாமி. திண்டுக்கல் மாவட்டத்தின் இன்றைய அரிஜன சேவா சங்கத்தின் செயலாளரும் இவரே. அய்யா பாதமுத்து என்னும் தெளிந்த காந்தியச் சிந்தனையாளர், பேராசிரியர் மார்க்கண்டன், அருட்செல்வர் நா.மகாலிங்கம் இவர்களையெல்லாம் தனக்கு மிக நெருக்கமானவர் களாகப் பெற்றவர் இவர். நூற்றிஐம்பது நூல்களின் ஆசிரியர். எண்பது வயதிலும் நாற்பது வயதுக்குரிய சுறுசுறுப்பு, நினைவாற்றல் பெற்றவர்.

வகுப்பாசிரியர் வெங்கடராம அய்யர், வகுப்பறையில் சொன்ன ஏகலைவன் கதையிலிருந்து, இந்து மதத்தினுள்ளே சாதிய ஏற்றத்தாழ்வு இவ்வளவு பயங்கரமாக இருந்திருக்கிறதே என்பதை உணர்ந்தார். ஆயினும் அதைவிட்டு வெளியேறாமல், அதனுள்ளேயே தன் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடிப் போராடித் தன்னை விசாலப்படுத்திக் கொண்டார் இவர்.

டி.கல்லுப்பட்டி மகாவித்யாலயத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில், பிராமணர்கள் வாழும் தெருவில் இவர் தன் குடும்பத்தோடு வசிக்க நேர்ந்தது. இவர் மனைவி தேமொழி அம்மையார் பிராமணர்கள் நீர் இறைக்கும் கிணற்றில் நீர் அள்ளப் போயிருக்கிறார். கிணறு தீட்டுப்படுகிறது, வராதே என்றார்கள் பிராமணப் பெண்கள். தீண்டாமை ஒரு குற்றம் என்பதை எடுத்துச் சொல்லி, நீங்கள் எது வேண்டு மானாலும் செய்யுங்கள், நான் நீர் இறைக்கத்தான் செய்வேன் என்று அவர்களுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்து, வெற்றி பெற்றவர் மா.பா.குருசாமி.

கிறிஸ்தவத்தில் ஈடுபாடு கொண்ட இவர் "கிறிஸ்தவர் வேதநூல் ஒரு பொக்கிஷம்" என்ற தலைப்பில் பள்ளியில் நடத்தப்பட்ட போட்டிக்காக ஒரு கட்டுரையை எழுதிப் பள்ளித் தலைவரான பாதிரி யாரிடம் கொடுத்தார். கட்டுரை பரிசு பெறவில்லை. பள்ளியின் நிர்வாகியான அந்தக் கத்தோலிக்கச் சாமியாரைக் கேட்டார். கட்டுரையை நீ தரவில்லை என்றார் சாமியார். "இல்லை அய்யா, நான் தந்தேன்" என்று மறுத்தார் இவர். அந்தப் பாதிரியாரோ கோபம் கொண்டு இவரைத் தன் வீட்டின் முன் ஒருமணி நேரம் முட்டிபோட வைத்துக் கொடுமைப்படுத்தினார். காரணம் இல்லாமல் தண்டனை பெற்றதால் நொந்து போன குருசாமி சொல்லுகிறார்: "இந்து மதத்தின் கோளாறுகளுக்காகக் கிறிஸ்தவத்தில் சேரலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தவன் நான், அப்படி சேரவிடாமல் தடுத்தது பாதிரியாரின் இந்த செயல்." இதுமாதிரிச் சம்பவங்கள் இந்த நூலில் ஏராளம்.

புத்தகப் பிரியர் மட்டும் அல்ல குருசாமி, புத்தக வெறியர் என்றும் சொல்லலாம். நத்தம்பட்டியில் ஒரு பெரியவர் வீடு, வடுகப்பட்டி ரங்கூன்செட்டியார் வீடு, விருதுநகர் சுயமரியாதை நூலகம், இங்கெல்லாம் சென்று நல்ல நூல்களைத் தேர்வு செய்து, தீவிரமாக வாசித்துத் தன்னை வளர்த்துக் கொண்டார் இவர்.


பள்ளி இறுதி வகுப்பில் இவருக்கு ஹால் டிக்கட் வழங்க நிர்வாகம் மறுத்தது. காரணம் இவர் பள்ளிக் கட்டணத்தில் பாக்கி வைத்திருந்தார். அந்த நேரம் இவர் எழுதிய கதை ஒன்றுக்குப் பரிசாய் ரு. 100 வந்தது. அந்த நூறு ருபாயைப் பள்ளியில் கொடுத்துக் கணக்கைத் தீர்த்து ஹால் டிக்கட் பெற்றார்.

தன் வழிகாட்டியான பாதமுத்து அண்ணனிடம் காந்திய சிந்தனையைத் தொடர்ந்து கற்றார் குருசாமி. மதுரையில் மார்க்சியப் பெருஞ்சிந்தனையாளர் எஸ்.ஆர்.கே.யின் பொதுவுடைமை வகுப்புகளுக்குச் சென்று மார்க்சியம் கற்றார். அன்று புகழின் உச்சியில் இருந்த டாக்டர் மு.வ.வைத் தேடிச் சென்று அளவளாவி, அவர் வழியைக் கற்றார். தீபம் நா.பார்த்தசாரதியை வலியத் தேடிச் சென்று நண்பராக்கினார். தோழர் ப.ஜீவானந்தத்தோடு உறவை வளர்த்துத் தன்னை

விசாலப்படுத்திக் கொண்டார். அவர் எழுதிய கவிதை ஒன்றைப் பார்த்துவிட்ட ஜீவா, அதை ஜனசக்தியில் வெளியிட்டு, அவருக்கு ஊக்கமளித்தார். பேராசிரியர் நா.வானமாமலையின் நெல்லை ஆய்வுக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டார். அவர் தலைமையில் நடந்த பட்டிமன்றங்களில் கலந்து கொண்டார். துணிந்து ரகுநாதன் கருத்துகளுக்கு மறுப்புத் தெரிவித்தார். எதிர்ப்பு வந்தபோது, ரகுநாதனே எதிர்த்துப் பேசியவர் களை அடக்கி, இவருக்கு நம்பிக்கையூட்டினார். தாமரையில் தொடர்ந்து கதைகள் எழுதினார்.

இவ்வாறு இடதுசாரித் திசையிலே பயணம் செய்த குருசாமி, ஏன் திசை மாறினார்? அவரே சொல்லுகிறார், "டாக்டர் குமரப்பா அய்யாவை நான் வாசிக்கவில்லை என்றால், கம்யூனிஸ்டாகவே மாறியிருப்பேன்." அந்த அளவுக்கு இடதுசாரி சிந்தனையாளர்களோடு அவருக்கு தொடர்பு இருந்தது. இந்த தொடர்புகளாலேயே, இவர் திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில், இன்னொரு பேராசிரியர் இவரைப்பற்றி மேலிடத்துக்குக் கோள் சொல்லி உசுப்பேற்றிக் கசப்பை உருவாக்கினார். அந்தப் பகைமையையும் வெற்றிகரமாகச் சமாளித்தார் குருசாமி.

இரண்டு துணைவேந்தர்கள் இவர் வாழ்வில் குறுக்கிட்டவர்கள். ஒருவர் டாக்டர் மு.வ. மா.பா.கு.வின் நேர்மை, காந்தியச் சிந்தனையில் அவருக்கிருந்த பற்று, கடும் உழைப்பு, ஒழுங்கு, இவை அவரைக் கவர்ந்தன. மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக அவர் பணி செய்தபோது, மா.பா.கு.வை அங்கே அழைத்து, அவருக்கு வேலையும் போட்டுக் கொடுத்தார். அவர் படிக்கவும், ஆய்வு செய்யவும் எல்லா வசதிகளும் செய்து கொடுத்தார். ஆராய்ச்சிகளுக்குத் தேவையான நிதியுதவி ஏற்பாடு செய்து கொடுத்தார். ஒரு மூத்த சகோதரர் போல இவர் வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாக இருந்தார். ஆனால் அவருக்குப் பின்வந்த துணைவேந்தர் சிட்டிபாபு இவரை அப்படிப் பார்க்கவில்லை.




**எப்படி இப்படி**
**ஆசிரியர்: டாக்டர் மா.பா.குருசாமி**
**வெளியீடு: குரு தேமொழி பதிப்பகம்,**
**தாயன்பகம், 6-வது தெரு,**
**எ.கே.எம்.ஜி.நகர்,**
**திண்டுக்கல் - 624 001.**
**விலை: ₹300/-**

ஆதித்தனார் கல்லூரியின் நிர்வாகத் தலைவர் சிவந்தி ஆதித்தனார் குருசாமியை அவர் பண்புகளுக்காக, உழைப்புக்காக, நேர்மைக்காக, சாமர்த்தியத்துக்காக நேசித்தார். அவரை விடுதிக் காப்பாளராகவும் நியமித்தார். எதையும் நேர்படச் செய்யவேண்டும் என்று விரும்பிய மா.பா.குருசாமி விடுதிக் கணக்குவழக்குகளைச் சரிபார்த்தார். ஒன்றும் ஒழுங்காக இல்லை. எழுபத்தி ஐய்யாயிரம் ரூபாய் கையாடல் நடந்திருப்பதைக் கண்டுபிடித்தார். அதுமட்டுமல்ல, போலியான ஒரு முத்திரையைச் செய்து, அந்த விடுதி நிர்வாகி அதைத் திருட்டுத்தனமாகப் பயன்படுத்திக் கொண்டிருந்ததையும் கண்டுபிடித்தார். அவரைக் கல்லூரி விடுதியைவிட்டே வெளியேறவும் செய்தார்.


இன்னொரு சுவையான சம்பவம். கல்லூரி விடுதியில் யாரும் சீட்டாடக் கூடாது என்பது விதி. விதியை மீறி ஒரு மாணவர் சில நண்பர்களுடன் சீட்டாடினார். அறிவுரை சொன்னார் மா.பா.கு. வசதி உள்ள குடும்பத்தைச் சார்ந்த அந்த மாணவரோ மறுத்துப் பேசினார். முடிவு? கல்லூரியில் இருந்து அந்த மாணவர் நீக்கப்பட்டார். நீண்ட காலத்துக்குப் பின் மா.பா.கு. எழுதிய ஒரு நூலுக்காக அண்ணாமலைச் செட்டியார் விருது இவருக்கு வழங்கப்பட்டு, அந்த விருதைப் பெற அங்கு அவர் போனபோது, முன்பு கல்லூரியில் இருந்து நீக்கப்பட்ட மாணவர் இவரிடம் வந்து "அய்யா அன்று நீங்கள் கண்டித்துத் தண்டித்ததால் இன்று நன்றாக இருக்கிறேன். உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்," என்று மனம் நெகிழ்ந்து சொன்னார்.

கல்லூரிக் கல்வியை மா.பா.குருசாமி முடித்ததும் அவருக்கு முதலில் கிடைத்த வேலை வணிக வரித் துறையில். அங்கே அளவுக்கு அதிகமான சலுகைகள், தேவையில்லா பண வரவுகள், எலிகளும், பெருச்சாளி களுமாக எங்கும் கும்மாளம் போடும் லஞ்சமும், ஊழலும். இவரால் அங்கு தாக்குப்பிடிக்கவே முடியவில்லை. அந்த வேலையை விட்டு விட்டு தி.கல்லுப்பட்டிக்கு ஆசிரியர் வேலை பார்க்கப் போனார்.

இப்படியான சுவையான செய்திகள் நூலெங்கும் விரவிக் கிடக்கின்றன. மா.பா.குருசாமியின் 80ஆவது வயது நிறைவையொட்டி வெளியிடப்பட்டுள்ள இந் நூலில் ஏராளமான வாழ்வியல் செய்திகள் மற்றும் படங்கள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்று. ●

# அகில இந்திய அளவில் தமிழ்நாட்டில் மட்டும்தான் ஒரே ஒரு பெரியார் இருந்திருக்கிறார்

## ந.முத்துமோகன்



நேர்காணல் கண்டவர்: க.காமராசன்

தேர்தல் அரசியலில் இந்துத்துவா வெற்றிகளைக் குவித்து வரும் வேளையில், இந்தியாவின் - ஜக்கி வாசுதேவ் போன்ற - நவீன சாமியார்கள் பொதுத்தளத்தில் இந்திய மரபுகள் முழுவதும் மறைஞான யோக மரபே எனவும், அவை முழுக்க ஐரோப்பியத் தத்துவ மரபுகளுக்கு - அதாவது பகுத்தறிவு, அறிவியல் மரபுகளுக்கு எதிரானது எனவும் வாதிட்டு வருகின்றனர். இவ்வேளையில், இந்தியத் தத்துவ மரபுகளின் தளங்களிலிருந்து விலக்கப்பட்ட நவீன சாதி எதிர்ப்பு, பகுத்தறிவுச் சிந்தனையாளர்களுக்கு - குறிப்பாகப் பெரியாருக்கு இந்தியத் தத்துவ மரபுகளில் வேர்கள் உள்ளனவா என்ற கேள்வியோடு மார்க்சிய அறிஞர் ந.முத்துமோகன் அவர்களுடன் தொலைபேசி வழியாக உரையாடலைத் தொடங்கினோம்.

**இந்தியத் தத்துவங்களுக்கு ஒரு சமகாலத் தன்மை உள்ளதா? அதாவது நமது சமகாலப் போராட்டங் களுக்கு இந்தியத் தத்துவங்களைப் பயன்படுத்த முடியுமா? அவ்வாறான இயல்பு இந்தியத் தத்துவங் களுக்கு உண்டா?**

எந்தத் தத்துவத்திற்கும் இயல்பிலேயே சமகாலத் தன்மை அதிகம் உள்ளது என்றெல்லாம் கூறிவிட முடியாது. பேரா.ஆ.சிவசுப்பிரமணியன் ஓரிடத்தில், "வரலாற்றுத் தகவல்கள் தாமாகப் பேசாது. அவற்றை நாம் தான் பேச வைக்க வேண்டும்" என்று எழுதிச் செல்வார். தானாகவே எல்லா வரலாற்று மெய்மைகளும் பேசிவிடாது. இதுநாள் வரையிலும் இந்தியத் தத்துவங் களை வலதுசாரிகள் பக்கமாக நாம் பேசவிட்டுள்ளோம் என்பதுதான் உண்மை. வேதாந்த, வைதீகத் தளங்களி லேயே அதிகமாக இந்தியத் தத்துவங்களைப் பேச விட்டுள்ளோம். இதற்குக் காரணம் நம்முடைய பலவீனங்கள். இந்தியத் தத்துவங்கள் குறித்து நாம் ஈடுபாடும் காட்டவில்லை; முன்கூட்டியே முன் முடிவுகள் செய்துகொண்டு, அவற்றில் ஒன்றும் தேறாது என்றும், கழித்துத் தள்ளவேண்டியவை என்றும் அவசர மாகப் போய்விட்டோமோ என்ற உணர்வு எனக்குத் தோன்றுகிறது. இன்றைக்கு வரைக்கும் இந்துத்துவா வெற்றி பெற்றிருப்பதற்கு இதுதான் காரணம்.

இந்தியத் தத்துவங்கள் குறித்து நிறைய வேலைகள் செய்ய வேண்டியுள்ளது. ஓராள், இரண்டாள் செய்ய வேண்டிய வேலை இல்லை; நூற்றுக்கணக்கான ஆட்கள் செய்ய வேண்டிய வேலை. இந்த வேலைகளைக் கொண்டுதான், அவற்றுக்குச் சமகாலத் தன்மையைக் கொண்டுவர முடியும்.

உட்டோபியாக்கள் ஐரோப்பாவில் மட்டும் உருவாக்கப்படவில்லை; இங்கும் கனவுத்தேசங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஜீவா அதைக் கம்பனில் கண்டுள்ளார். ரவிதாஸின் பேகம்புறா, குரு கோவிந்தரின் கால்சா ராஜ் இவை போல ஒவ்வொரு இந்திய மொழிகளிலும் ஏராளமான கனவுகள் கிடக்கின்றன. இவற்றை நாம் கையிலெடுக்கும் போது, அவை ஆயுதங்களாக, எதிர்ப்பின் அடையாளங்களாக மாறமுடியும். இந்த நாட்டில் சனாதன வடிவங்கள் நிறைய கிடப்பதைப் போன்று, எதிர்ப்பின் வடிவங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை நாம் கண்டறிய வேண்டும். இடதுசாரிகள், ஜனநாயகவாதிகள், தலித்துகள், பெண்ணியவாதிகள், பழங்குடிகள் ஆகிய அனைவரும் ஒன்றுபட்டு உழைத்து எதிர்ப்பின் வடிவங் களைக் கண்டறிந்து முன்னிலைப்படுத்த வேண்டும்.

இப்போது ஜனசக்தியில் இலத்தின் அமெரிக்காவைப் பற்றி தொடர்க் கட்டுரை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்காக இலத்தின் அமெரிக்கப் பழங்குடிகள் இலக்கியங்களைப் படித்தபோது, ஒவ்வொரு பழங்குடி இலக்கியங்களிலும் ஏக்கங்கள், போராட்ட வடிவங்கள், மாற்று குறித்த சிந்தனைத் தேடல் முதலான ஏராளமான விசயங்களைக் காண முடிகின்றது. இந்திய மக்களிலும் மிக அதிகமானோர் பழங்குடிகள் தாம். மிகக் குறைவானவர்களே மேட்டுக் குடிகள். இந்தப் பழங்குடி மக்களின் கனவுகளைத் தோண்டி எடுத்தோமென்றால், இன்றைக்குப் போராடு வதற்கான ஆயுதங்களாக மாறவும்கூடும். இதில் இன்னொரு முக்கியமான விசயம் ஒன்று உண்டு.

இடதுசாரிகளாகிய நாம் அரசியலில் நுழைந்த போது, அரசியல் என்பதைதான் மிகப் பெரிய தளமாக நாம் அடையாளம் கண்டுகொண்டோம். அரசியல் என்பது நம்மைப் பொறுத்தவரையில், அரசு குறித்த அரசியல், காலனியம் குறித்த அரசியல், இந்திய அரசாங்கம் குறித்த அரசியல். லெனின்கூட சொன்னார் அல்லவா, "அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் முக்கிய மான விசயம்" என்று. இதை முன்வைத்துதான் நாம் வேலை செய்தோம். ஆனால், அதிகாரத்தைக் கைப் பற்றுவது என்பதைவிட, ஒரு நாட்டின் பண்பாடுகளை அறிவது, உள்வாங்குவது, அவற்றுக்குள் ஊடாடிச் செல்வது, அவற்றில் சமகாலத் தன்மைகளைக் கண்டறிவது, கனவு நிலங்களைக் கண்டறிவது, நடை முறைக்கான நிலங்களாக மாற்றுவது - அதாவது உட்டோபியாவை மெய்யானதாக மாற்றுவது போன்ற தேவைகள் எல்லாம் இங்கு இருக்கின்றன.

பண்பாட்டு அரசியலில் இந்துத்துவவாதிகளும், திராவிட இயக்கவாதிகளும் நம்மை முந்திச் சென்று விட்டார்கள். நாம் பல நல்ல வேலைகளைச் செய்துள்ளோம். ஆனால் பரவலாகச் செய்யவில்லை, வெகுசன தளத்திலும் செய்யவில்லை. சில சமயங்களில் அறிவாளிகளாக மட்டுமிருந்து, தத்துவ அறிவாளிகளாக, அரசியல் அறிவாளிகளாக, வரலாற்று அறிவாளிகளாக மட்டுமிருந்து செய்துள்ளோம். வெகுசனத் தளத்தில் கவனக் குறைவாக இருந்துள்ளோம். உதாரணமாக, வெகுசன சினிமாக்கள் என்றாலே நமக்கொரு அலட்சிய பாவம். எங்கள் காலத்தில் எல்லாம் அப்படித்தான் நிலைமை இருந்தது. இப்போது நிலைமை கொஞ்சம் பரவாயில்லை. நம் தலைவர்கள் வெகுசன சினிமாக் களைப் பற்றிப் பேசுவது விதிவிலக்குகளாக நடந்தனவே தவிர, பொதுவாகப் பேசவில்லை என்றே சொல்லி விடலாம். வெகுசன மக்களுக்காகத்தான் நாம் போராடி யுள்ளோம். நம் கட்சி வெகுசனக் கட்சியாக ஆக வேண்டும் என்பது நம் லட்சியம். ஆனால் நம்மை அறியாமலேயே, வெகுசனத் தளத்தைத் தொடர்ந்து புறக்கணித்து வந்துள்ளோம். ஆகவே, வெகுசனத் தளத்தைக் கவனமெடுத்தல், வெகுசனமயமாக்கல் போன்ற வற்றைக் கவனம் எடுத்துக்கொண்டால், இந்தியத் தத்துவங்களைச் சமகாலப்படுத்தும் பிரச்சினையில் பல புதிய புள்ளிகளை வெளிக்கொணர முடியும்.

**இந்தியத் தத்துவ மரபுகளுக்குள் வைத்து பெரியார், அம்பேத்கர் ஆகியோரைப் புரிந்துகொள்ள முடியுமா? எப்படிப் புரிந்துகொள்வது? இந்தியத் தத்துவ மரபு களில் பொருள்முதல்வாத மரபுகளின் தொடர்ச்சியாக இன்றைய இந்திய மார்க்சியர்கள் உள்ளனர் என்று சட்டோபாத்தியாய இந்திய நாத்திகம் நூலின் முன்னுரையில் கூறுவார். அப்படி ஒரு தொடர்ச்சியை, வேர்களை வலியுறுத்த முடியுமா?**

இந்தியத் தத்துவ மரபுகளுக்குள் வைத்து பெரியார், அம்பேத்கர் ஆகியோரைப் புரிந்துகொள்ள முடியுமா என்பதற்கு இரண்டுவிதமாகப் பதில் சொல்லலாம்.

அம்பேத்கர் ரொம்ப வலுவாக பௌத்தத்தைக் கையிலெடுத்தார். தேவைப்பட்ட இடங்களில், அதில் சில முக்கியமான திருத்தங்களைக்கூட செய்தார். பௌத்தத்தைக் கொஞ்சம் புரட்சித்தன்மை கொண்டதாக மாற்றினார். சமூகவியல் படுத்தினார். அதனால் அம்பேத்கருக்கு இந்திய மரபுகளுக்குள் வேர்கள் கிடையாது என்று சொல்லமுடியாது. ஏனென்றால், தனது வேர்களை வேகமாகவும், அழுத்தமாகவும், தொடர்ச்சியாகவும் பௌத்தத்திற்குள் அம்பேத்கர் தேடியுள்ளார். அவர் பௌத்தத்தை முன்வைத்து மார்க்சியத்தை எதிர்கொள்ளவும் முயற்சி செய்தார் என்று சொல்ல முடியும். ஆகவே அம்பேத்கருக்கு இந்திய மரபுகளுக்குள் வேர் வலுவாகத்தான் இருக்கின்றது.

இதற்கு இணையாக இங்கு அயோத்திதாச பண்டிதர் வேலை செய்தார் என்பதையும் பார்க்க முடியும். அம்பேத்கருக்கு முந்தியவர் அயோத்திதாசர். அவரும் பௌத்தத்திற்குச் சென்றுசேரும் ஒரு நிலை இருந்தது. ஆகவே, தலித் இயக்கம் இந்த மரபு சார்ந்த வேரை நன்கு தேடியுள்ளது என்று தோன்றுகிறது.

வேகமாக, மேலோட்டமாகப் பார்க்கும்போது, பெரியாரைப் பொறுத்தமட்டில், அவருக்கு மூன்று விதமான வேர்கள் காணப்படுகின்றன. ஒன்று சாருவாகம்-உலகாயதம். இதைப் பற்றி, பிரகிருதிவாதம் அல்லது மெட்டிரியலிசம் என்று தலைப்பிட்டு அவரே பேசியுள்ளார். மற்றொன்று நியாய-வைசேடிகத்தைக் ஓரளவு சொல்லலாம். இதனுடன் பௌத்தக் கூறு களையும் இணைத்து ஏற்றுக்கொண்டுள்ளார். இதைப் பற்றி இப்போது வெளியாகியுள்ள, ‘இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும்’ என்ற எனது நூலில், ‘பெரியாரும் பௌத்தமும்’ என்ற கட்டுரையில், அவரது அனாத்மா வாதம், துக்கம், துக்கநிவாரணம் போன்ற கருத்தாக்கங்கள் குறித்து எழுதியுள்ளேன். பெரியாரிடமும் சாருவாகம்-உலகாயதம், நியாய வைசேடிகம், பௌத்தம் ஆகிய வேர்கள் இருக்கின்றன. ஆனால் இந்த வேர்களை எல்லாம் அவர் ரொம்ப சிலாகிக்கவில்லை. அம்பேத்கர் கூட தன் வேர்கள் குறித்து அவ்வப்போது சிலாகித்துப் பேசியுள்ளார். ஆனால் பெரியார் அந்த மாதிரி சிலாகித்துப் பேசுவதற்காக அந்தத் தத்துவ நூல்களை மெனக்கெட்டுப் படிப்பது போன்ற செயல்களில் ஈடுபடவில்லை. அவரது கேள்வி ஞானம், சில அறிஞர் களுடனான உரையாடல், தேர்ந்தெடுத்த நூல்களைப் படிப்பது ஆகியவையே அவருக்குப் போதுமானதாக இருந்தது. திருக்குறளில் பெரியார் நுழைந்து பார்த் துள்ளார். திருக்குறளின் கருத்துகளை ஏற்றுக் கொண்டு உள்ளார். விமர்சனங்களையும் வைத்துள்ளார்.

சமூக வரலாற்று வெளிகளில் தீவிரமான உரை யாடல்களுக்கு ஒருவர் முயலும்போதே, மரபு சார்ந்த வேர்கள் அவருக்குக் கிடைத்துவிடும். மரபார்ந்த வேர்கள் என்பது, கண்ணை மூடிக்கொண்டு ஒன்றை ஏற்றுக் கொள்வது என்பதல்ல. வேர் என்பது விமர்சன ரீதியான தாகவும் இருக்க முடியும். நிராகரிப்பாக இருக்கக் கூடாது. நிராகரிப்பு வேறு, விமர்சனம் என்பது வேறு. நிராகரிப் பதை வேர் என்று சொல்ல முடியாது. அப்படிப் பார்க்கும் போது பெரியார், அம்பேத்கருக்கு வலுவான வேர்கள் உண்டு என்பதை மறுக்க முடியாது.

இன்னொரு கோணத்திலிருந்து, இந்திய மரபுகளில் பெரியார், அம்பேத்கருக்கு வலுவான வேர்கள் உண்டு என்று சொல்ல முடியும். அது என்னவென்றால், அவர்கள் பேசிய பிரச்சனைகளின் சமூகவியல் பரிமாணம். சாதி, வருணம், பார்ப்பனியம், இவர்கள் காலத்தில் முன் வைக்கப்பட்ட இந்துமதம் என்னும் அடையாளம், அந்த இந்துமதத்தை வைத்து ஒரு தேசியத்தை உருவாக்கும் அரசியல் ஆகிய பிரச்சினைகளின் மூலமாகவும் அந்த வேர் கிடைக்கின்றது. அதாவது, எந்தப் பிரச்சினையை எடுத்துப் பேசுகிறார்கள், எந்தப் பிரச்சினையை முன்னிலைப்படுத்துகின்றார்கள் என்பது மூலமாகவே, அந்த மரபின் உரையாடல்களில் ஓர் இடம் கிடைத்து விடுகின்றது.

இந்த அளவுக்கு மார்க்சியர்களுக்கு அந்த வேர்களில் வலு இல்லை. நமக்கு உலகாயத-சாருவாக வேர் உண்டு என்று தேவிபிரசாத் சொல்கிறார். ஆனால் அந்தத் தத்துவச் சொல்லாடல்களில் நமக்கு ஒரு தொடர்ச்சி இல்லை. நாம் சாதி, வருணம், பார்ப்பனியம், இந்துமதம் பற்றியெல்லாம் அதிகமாகப் பேசவில்லை. மார்க்சியர் களைப் பொறுத்தமட்டில், இதில்தான் பிரச்சினை ஏற்படு கின்றது. செவ்வியல் மார்க்சிய மொழியில் சொல்ல வேண்டுமென்றால், மார்க்சியர் சமூகரீதியாக சாதியை விட, வர்க்கத்தை முன்னிலைப்படுத்தி விட்டார்கள். நடைமுறைத் தளத்தில் சாதியை எல்லாம் தொட்டு இருக்கின்றார்கள், இல்லையென்று சொல்ல முடியாது. விவசாய இயக்கத்தை நடத்தியபோது, சாதிப் பிரச்சினையைத் தொட்டுச் சென்றுள்ளார்கள். நிலச்சுவான்தாரின் சாதி என்ன? கூலி விவசாயிகளின்

சாதி என்ன? என்று தெரியாமல் அங்கு படுகொலைகள் நடக்காது. ஆனால் அம்பேத்கர் போல ஏராளமாகக் கருத்தாக்கத் தளங்களில் நுழைந்து நாம் விவாதிக்க வில்லை.

ஆகவே அம்பேத்கருக்கும், பெரியாருக்கும் மரபில் இடம் இல்லை என்று சொல்ல முடியாது. மரபில் இடம் வேண்டுமானால், வேதாந்தத்தைப் பேசினால்தான் உண்டு, சமஸ்கிருதத்தை ஏற்றுக்கொண்டால்தான் உண்டு என்ற வாதம் மிகமிக மொன்னையானது. இது இவர்களிடத்து கிடையாது. ஏன் புத்தரிடமும் அந்த ஏற்பு இல்லைதானே. கபீரிடம் கடுமையான பார்ப்பனிய, சனதான, மூடநம்பிக்கை எதிர்ப்பு உண்டு. ஆகவே பெரியார், அம்பேத்கர் தொட்ட பிரச்சனைகளுக்குச் சமூகரீதியான ஒரு வரலாறு இருக்கின்றது. இந்தப் பிரச்சனைகள் நேற்று, இன்று ஆரம்பித்தவை அல்ல; அவை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் ஆரம்பித்தவை. அந்தப் பிரச்சினைகளைப் பேசிய அம்பேத்கர், பெரியார் ஆகியோரும் அந்த மரபுகளுள் நின்றும், தாண்டியும் அந்தப் பிரச்சினைகளை எதிர்த்து, வெவ்வேறு தளங்களில் நின்று பேசுகிறார்கள்.

**பெரியாரையும் அம்பேத்கரையும் சமகால இந்துத்துவ அரசியலுக்கு எதிராக நிறுத்துகிறோம். அவர்கள் நாத்திகர்கள், அவைதீகர்கள் என்பதாலா? அவ்வாறு நிறுத்துவது நம் சமகாலத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்ய முடியுமா?**

பெரியாரையும் அம்பேத்கரையும் இந்துத்துவ அரசியலுக்கு எதிராக நாம் நிறுத்தவில்லை. இந்துத்துவ அரசியலே அவர்களை அவ்வாறு நிறுத்துகிறது. ஹைதரா பாத்தில் ரோஹித் வெமுலாவை, ஜேஎன்யூ மாணவர் களை நாமா இந்துத்துவத்திற்கு எதிராக நிறுத்தினோம். இல்லை, மஹாராஷ்டிரம், குஜராத், ஹரியாணாவில் தலித்துகள் தாக்கப்பட்டது, தாக்கப்படுவது, அதனால் தலித்துகள் இந்துத்துவத்திற்கு எதிராகப் போராடி வருவது ஆகியவற்றைப் பார்த்தால் நாமாக தலித்துகளை இந்துத் துவத்திற்கு எதிராக நிறுத்தவில்லை. இந்துத் துவமே அவர்களை எதிரிகளாகக் கருதுகின்றது; எதிரி களாக ஆக்கி வைத்துள்ளது. இதை இந்துத்துவ வாதிகள் சில சமயங்களில் வெளிப்படையாகப் பேசுகின்றார்கள்; சில சமயங்களில் மறைமுகமாகப் பேசுகின்றார்கள். ஆனால் மிகுந்த வக்கிரத்தோடு செயல்படுகின்றார்கள். அதனால் பெரியாரையும் அம்பேத்கரையும் இந்துத்துவ அரசியலு எதிராக நாம் நிறுத்துகிறோம் என்பது கிடையாது.

ரொம்ப முக்கியமானது, இங்குச் சமூகப் பிரச்சினை களுக்கு ஒரு சமயப் புனிதம் கொடுத்து வைத்துள்ளார்கள். இப்போது மேற்கத்திய ஆய்வுகளில் பௌத்தம், சீன, ஜப்பானிய மரபுகள் உள்ளிட்டு கீழைநாடுகளின் சமயங்களைக் குறிக்க, dharmic religions என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். கிறித்தவத்தையும் இசுலாமையும் குறிக்க abrahamic religions என்ற சொல்லைப் பயன்படுத்துக்கின்றார்கள். ஆனால் வருணாசிரமத் தர்மம், வருணத் தர்மம், சாதித் தர்மம், சனாதன தர்மம், சுதர்மம், மனுதர்மம் போன்ற கருத்தாக்கங்களை, சொல்லாடல்களை எல்லாம் ஏராளமாகப் பரப்பி, பயன்படுத்தி நிற்கின்ற இந்துத்துவ அரசியல், இந்த தர்மம் என்ற சொல்லையே ரொம்ப கேவலப்படுத்தி வைத்திருக்கிறது.

சமூகப் படிநிலைகளுக்குச் சமயரீதியான புனிதம் கற்பித்தத்தை இந்துத்துவவாதிகள் சுயவிமர்சனம் செய்து கொண்டதே கிடையாது. இந்தப் புனிதம் கற்பித்தல் குறித்து, எந்தவொரு மடாதிபதியோ, எந்தவொரு சங்கராச்சாரியாரோ, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எந்தவொரு சைவ மடத் தலைவரோ அதிகாரப் பூர்வமாக சுயவிமர்சனம் செய்துகொண்டதே கிடையாது. மத அந்தஸ்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு மடாதிபதியோ, யோகியோ யாராவது ஒரு இந்துமதத் தலைவர், வருணாசிரமம், சாதிவேறுபாடுகள் இந்து மதத்தில் ஏதோ ஒரு காலத்தில் நுழைந்துவிட்டன, அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று வெளிப் படையாக, பிசிறுகள் இல்லாமல் சொன்னது கிடையாது. ஏதாவது அக்கன்னா, இக்கன்னா போட்டுத்தான் அவர்கள் சொல்கிறார்களே தவிர, வெளிப்படையாகப் பேசுவது கிடையாது.

ஆகவே அம்பேத்கர், பெரியார் ஆகியோரின் தேவை, கால இயைபு, முக்கியத்துவம் எதில் உள்ள தென்றால், தாங்கள் தேர்ந்துகொண்ட விமர்சனக் கருவி, அதை எந்தளவு கூர்மைப்படுத்தியுள்ளார்கள் என்பது போன்ற மற்ற விசயங்களெல்லாம் ஒருபுறமிருக்க, அவர்கள் தேர்ந்துகொண்டு பேசிய பிரச்சினையின் தளத்தில் உள்ளது. அதுவே, அவர்களை இந்துத்துவம் நிராகரிக்கும்படி ஆக்கிவிடுகின்றது. அதனால் அவர் களைப் பற்றி நாம் மீண்டும் மீண்டும் பேச வேண்டிய தாகவும் உள்ளது.

**பெரியாருக்கு தத்துவப் பார்வை உண்டா? அல்லது நடைமுறைரீதியாக பார்ப்பனியத்தை, சாதியத்தை, இந்து மதத்தை எதிர்த்த, பார்ப்பனரல்லாத இடை நிலைச் சாதிகளின் நலன்கள் முன்னிறுத்திய சொல் லாடல்கள்தாம் பெரியார் சிந்தனையா?**

இந்தக் கேள்வியில், பெரியாருக்குத் தத்துவப் பார்வை உண்டா, இடைநிலைச் சாதிகளின் நலன்கள் முன்னிறுத்திய சொல்லாடல்கள்தாம் பெரியார் சிந்தனையா என்ற இந்த இரண்டு சொற்றொடர்களும் மிகக் கடுமையானவையாகப் படுகின்றன.

அந்தோனியா கிராம்சி எல்லோருக்கும் தத்துவப் பார்வை இருக்கின்றது என்று சொல்வார். தத்துவம் என்பது என்னமோ தலையில் கொண்டை முளைத்த வருக்கு மட்டும்தான், பல்கலைக்கழகப் படிப்பாளிக் களுக்கு மட்டும்தான், பெரிய மேதாவிகளுக்கு மட்டும்தான் என்பதைக் கிராம்சி ஏற்றுக்கொள்ள மாட்டார். அவரைப் பொறுத்த வரையில், அவரது நாட்டுச் சூழலில் கிறிஸ்தவப் பங்குத் தந்தை, பள்ளிக்கூட ஆசிரியர், அந்த வட்டார மக்களை ஒருங்கிணைத்துப் போராடும் செயல்பாட்டாளர்கள் ஆகிய எல்லோருக்குமே தத்துவப் பார்வை உண்டு. ஆகவே தத்துவப் பார்வை ஒரு அபூர்வமான சங்கதி அல்ல. அசாதாரணமான ஆற்றல் ஒன்றுமில்லை. ஒருவகையில் அது சாதாரணப் பார்வை தான். ஆகவே பெரியாருக்கு மிக வலுவான, வளமான தத்துவப் பார்வை உண்டு என்பதை மேலே உரையாடிய வற்றால் அறியலாம்.

இடைநிலைச்சாதிகளின் நலன்களை முன்னிறுத்திய சொல்லாடல்கள்தாம் பெரியாரின் சிந்தனைகள் என்ற குற்றச்சாட்டு திரும்பத் திரும்ப முன்வைக்கப்படுகின்றது. ஒருகட்டத்தில் இதைத் தோழர் ரவிக்குமார் ஆரம்பித்து வைத்தார். அது தொடர்ந்து பேசப்பட்டது. இந்த இடத்திலும் நீண்ட நெடிய கால வரலாறு கொண்ட பார்ப்பன எதிர்ப்பை உற்றுப் பார்த்துப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.

பார்ப்பன எதிர்ப்பு புத்தர் காலத்தில் தொடங்கி, சாருவாகம் - உலகாயதம், தாந்திரிகம், தாந்திரிக அடிப்படை கொண்ட சித்தர் மரபு, பக்தி மரபு, இந்தோ - இசுலாமிய மரபு, சந்தர் மரபு, கபீர் மரபு, குருநானக் கினுடைய சீக்கியம் ஆகிய பல இடங்களில் உள்ளது. பல காலங்களில், பல மரபுகளில் பார்ப்பன எதிர்ப்பில் சத்திரியர்கள், வைசியர்கள், கறாராகக் கலைச் சொற்களைக் கொண்டு குறிப்பிட்டால் கைவினைஞர்கள் போன்ற இடைநிலைச்சாதிகள்தாம் முன்னிலை எடுத்து நின்றிருக் கின்றார்கள். கைவினைஞர்களுக்குச் சித்தர் மரபோடு ஒரு நெருங்கிய தொடர்புண்டு. சித்தர் மரபில் தனிப்பட்ட திறன்களை மையப்படுத்துவதால், அதனைக் கை வினைஞர் சிந்தனை என்று சொல்வார்கள். ஆகவே பார்ப்பன எதிர்ப்பு என்பது பார்ப்பனரல்லாத எல்லாச் சாதிகளிடமும் குறைவாகவோ, அதிகமாகவோ இருந்து வந்திருக்கின்றது. அது நீண்ட கால வரலாறு கொண்டது.

ஆகவே, இந்தக் குற்றச்சாட்டு என்பது ஒரு கொடூரமான குற்றச்சாட்டு என்றும் கொள்ள வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. சாதிகளின் மோதல் தளத்தில், இடைநிலைச் சாதிகளும் பார்ப்பன எதிர்ப்பு வேலைகளைச் செய்துள்ளார்கள்.

தமிழ்நாட்டிலும் இதே மாதிரி நடந்து வந்திருக் கலாம். தமிழ்நாட்டில் சித்தர் மரபுக்கு உள்ள சமூக அடித்தளங்கள் இன்னும் கறாராகக் கண்டறியப்பட வில்லை. தமிழ்நாட்டில் பக்தி வடிவத்தின் சிக்கல்களும் இன்னும் முழுமையாக அறியப்படவில்லை. வைணவத்தில் உள்ள சில தீவிரமான நிலைகள் எல்லாம் எவ்வாறு உருவெடுத்தன. தமிழில் இன்னும் ஆழ்ந்து ஆய்வு செய்ய வேண்டிய வட்டாரங்களெல்லாம் அதிகம் இருக்கின்றன. இது ஒரு பக்கம்.

தமிழ்நாட்டின் சமகால வரலாற்றில் இடைநிலைச் சாதிகளின் நலன்களை முன்னெடுத்ததில் பெரியாரையும் திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற தேர்தல் அரசியல் கட்சிகளையும் பிரித்துப் பார்க்க வேண்டியுள்ளது. அப்படிப் பிரித்துப் பார்க்காததால், சில சமயங்களில் எல்லாப் பழிகளையும் பெரியார் மீதே சுமத்தி விடுகின்றோம். பெரியாரின் தனிப்பட்ட பண்பு நலன்களே சற்று வித்தியாசமானது. அவை அராஜகப் பண்பு கொண்டவை. இந்த விசயம் பற்றி, எஸ்.வி.ஆரை ஹவிட, பின்னை நவீனத்துவங்கள் வந்த காலத்தில் தெரிதா, பூக்கோ ஆகியோரை எல்லாம் முன்வைத்து அ.மார்க்ஸ் அதிகம் சிந்தித்துள்ளார். பாரதியிடம் எப்படி ரொமாண்டிக்கான கருத்துகள் இருந்தனவோ, அப்படி பெரியாரிடம் ஒரு அராஜக வெடிப்புகள், தீப் பொறிகள் போல கருத்துகள் வந்து விழும். அவர் தன்னை ஒரு மேட்டுக்குடியாக, அறிவாளியாகக் காட்டிக் கொள்ள வில்லை. பட்டறிவுத் தளத்திலிருந்து பேசிய தெறிப்புகள் அவரிடம் உண்டு. ஆகவே அவர் திட்டமிட்டு இடை நிலைச் சாதிகளின் நலன்களைப் பற்றிய உணர்வோடு செயல்பட்டார், அவற்றை முன்னிறுத்திப் பேசினார் என்று என்னால் சொல்ல முடியவில்லை. அவர் முன்வைத்த விவாதத் தளங்கள் நம்மை எங்கெங்கோ அழைத்துச் செல்லும் பண்பு கொண்டவை. அந்த விவாதத் தளங்களின் அடிப்படை விரிவுநிலைப் பண்புகள் மிகப் பரந்தவை. அவற்றால்தாம் நம்மிடையே அவர் தொடர்ந்து நிற்கின்றார்.

பெரியாரிடம் தேர்தல் அரசியல் இல்லை. தேர்தல் அரசியல் நலன்களுக்காக, அந்த ஊரில் உள்ள பெரும் பான்மை சாதி எது, அதிலிருந்து ஓர் ஆளை எடுப்பது, அந்தச் சாதி பற்றி பெருமைப்படுத்திப் பேசுவது எல்லாம் பெரியாரிடம் இல்லை. ஆனால் இவையெல்லாம், இடைநிலைச் சாதிகளின் நலன்களை முன்வைத்துத் தேர்தல் அரசியலைக் கையிலெடுத்த திராவிட இயக்க அரசியல் கட்சிகளிடம் உண்டு. இந்தக் கட்சிகள் இடைநிலைச் சாதிகளை முன்னிறுத்தி, ஆட்களைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். ஓட்டு வங்கிகளாக அவர் களைப் பயன்படுத்தியுள்ளார்கள். சில சமயங்களில், சில மோதல்களில் இடைநிலைச் சாதிகளை ஆயுதப் பாணிகள் ஆக்கியுள்ளனர். ஆகவே, பெரியாரையும் தேர்தல் அரசியல் திராவிடக் கட்சிகளையும் பிரித்துப்

பார்க்க வேண்டும். அவ்வாறு பிரித்துப் பார்த்தால்தான் பெரியாரைப் புரிந்துகொள்ள முடியும்; இடைநிலைச் சாதிகளின் நலன்களை முன்னிறுத்திய சொல்லாடல்கள் என்ற குற்றச்சாட்டையும் முன்வைக்க முடியாது என்று நினைக்கிறேன்.

சாதி, வருணம், பார்ப்பனியம், இந்துமதம் ஆகிய வற்றுக்கு எதிராக, வலுவாகப் பெரியார் நின்றிருக் கின்றார். அகில இந்திய அளவில், தமிழ் நாட்டில் மட்டும்தான் ஒரே ஒரு பெரியார் இருந்திருக்கிறார் என்று இன்று உணரமுடிகிறது. மதம் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும், கிறிஸ்தவர்கள், இசுலாமியர்கள், சீக்கியர்கள் ஆகியோருக்கு பெரியாரை நோக்கி ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. ஏனென்றால் பெரியார்தான் இந்துப் பெரும்பான்மைவாதத் தேசியத்திற்கு எதிராக வலுவான தளத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளார். அவரைச் சின்ன சின்ன குற்றச்சாட்டுகளை முன்வைத்துப் புறக்கணிப்பதில் பயனில்லை என்றுதான் நான் எண்ணு கிறேன். இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள் இழப்புகளையும் தோல்விகளையும் சந்திக்க வேண்டி வரும் என்று நினைக்கிறேன்.

**சுயமரியாதை, பகுத்தறிவு, மானம், அறிவு ஆகிய பெரியாரின் சொல்லாடல்களை எவ்வாறு புரிந்து கொள்வது? குறிப்பாக, பெரியாரின் பகுத்தறிவு வாதம் நவீன ஐரோப்பாவின் அறிவுவாதம் (ரேசனலிசம்) போன்றதா?**

பெரியாருடைய சுயமரியாதை, பகுத்தறிவு, மானம் அல்லது தன்மானம், அறிவு முதலான கருத்துகள் மேற்கத்திய ரேசனலிச சாயல் கொண்ட கருத்துகள் போலத் தோற்றம் அளிக்கும். ஆனால், பெரியார் மேற் கத்திய ரேசனலிசத்தையெல்லாம் கற்றுத் தேர்ந்து, ஓர் அறிவுத்தளத்தில் நின்று அவற்றைக் கையாண்டார் என்பது மாதிரியெல்லாம் எனக்குத் தெரியவில்லை. அவரிடம் ஓர் உள்ளூர்த்தன்மை உண்டு. அதாவது இங்குள்ள சமூக-பொருளாதார-பண்பாட்டு-அரசியல் தளங்களில் நின்று இந்தச் சொற்களை உருவாக்கினார் போலத் தெரிகின்றது.

காங்கிரஸ்காரர்கள் சுயராஜ்யம் என்று வைத்ததற்கு எதிராகப் பெரியார் சுயமரியாதை என்பதை உருவாக்கினார் என்று நினைக்கிறேன். டொமினியன் அந்தஸ்து, அரசியல் அதிகாரப் பங்கீடு, அரசியல் சுதந்திரம் என்ற பல தளங்களில் வைத்து சுயராஜ்யம் என்ற சொல்லைப் பயன்படுத்தினார்கள். பெரியார் சுயமரியாதை என்பதை மனிதனுக்கானதாக முன்வைத்தார். காங்கிரஸ்காரர்கள் அரசை, அரசியல் அதிகாரம் என்பனவற்றை மனதில் இருத்திக் கொண்டு சுயராஜ்யம் குறித்துப் பேசினார்கள். அது இந்துத்துவவாதிகளுக்குச் சுயராஷ்டிரம் ஆகி விடுகின்றது. பெரியார் மனிதரின் சுரணையைச் சீண்டக்கூடிய சுயமரியாதை குறித்துப் பேசினார். “உன் அம்மா இப்படித்தான் உன்னை அடிமையாகப் பெற்றாளா?” என்பது போல கேள்வி கேட்டு, மனிதரின் கோபத்தை, ரோசத்தை சீண்டுகிறதுதான் சுயமரியாதைக் கருத்தாக்கம். இதற்கு ஒப்புமையான ஐரோப்பியக் கருத்தாக்கம் என்றெல்லாம் தேடவேண்டியதில்லை; பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை. இது தனிமனித வாதமும் இல்லை. சுயமரியாதையை ஆங்கிலத்தில் “self-dignity” என்று சொல்லலாம். "self-respect" என்று மொழியாக்கம் செய்கின்றார்கள். ஆனால் இந்தக் கருத்தை உள்ளூர் சூழலிலிருந்துதான் எடுத்துள்ளார்; உருவாக்கியுள்ளார்.

பகுத்தறிவு என்பதும் அப்படித்தான். பகுத்தறிவு என்பதைத் துல்லியமான ஆங்கிலத்தில் சொன்னால் analytical approach என்று மொழிபெயர்க்கலாம். ஐரோப்பாவில் analytical என்பதற்கு ஆங்கில அகராதிகள் பக்கம்பக்கமாக விளங்கங்கள் தருகின்றன. ஆனால் பகுத்தறிவு என்பது analytical என்ற கருத்தைப் பெற்றிருந் தாலும், அது மட்டுமல்ல. பகுத்தறிவு என்பதில், பகுத்துப் பார்த்துப் பிரித்தறிதல் என்பதெல்லாம் வருகின்றது. ஐரோப்பாவில் analysis என்றால், அதற்கு இணையாக syntheses என்பது உண்டு. ஆனால் syntheses என்பதற்குத் தொகுப்பு, இணைவாக்கம் என்பன போன்ற தமிழ்ச் சொல் உருவாக்க முயற்சியையே இப்போதுதான் சில கட்டுரைகளில் காண முடிகின்றது. Theses, antithesis, syntheses என்றெல்லாம் வரும்போது இந்தத் தமிழ்ச் சொல்லாக்க முயற்சியும் தொடங்கியது. ஆனால், ஐரோப்பாவில் syntheses என்பதற்கு இணையாக analysis பயன்படுத்தப்பட்ட மாதிரி, பகுத்தறிவு என்பதைப் பெரியார் பயன்படுத்தவில்லை.

ஐரோப்பிய தத்துவங்களில் நேர்காட்சிவாதத்தில் analytical school என்றொரு சிந்தனைப்பள்ளி உண்டு. இந்த அர்த்தத்திலும் பெரியார் பயன்படுத்தவில்லை. அவர் பகுத்தறிவு என்பதற்கு அனுபவப்பூர்வமாகப் பார்த்தல், இயற்கைக்கு முரணில்லாமல் பார்த்தல், மனிதத் தன்மை கொண்டு பார்த்தல் என்ற அர்த்தங் களைத் தருவிக்கின்றார். பெரியாரிடம் அனுபவப் பூர்வமாகப் பார்த்தல் என்பது வலுவாக இருக்கும். இது மனிதருக்கு இயற்கை உணர்ச்சி என்பார். ஆகவே பெரியார் பகுத்தறிவு என்பதை ஐரோப்பாவிலிருந்து எடுக்கவில்லை.

பல சமயங்களில் அண்ணா, கருணாநிதி ஆகியோ ரெல்லாம்கூட, அங்கே அவர் சொன்னார், இங்கே இவர் சொன்னார் என்றெல்லாம் பேசுவார்கள். இந்த மாதிரியான அலம்பல் பேச்செல்லாம் பெரியாரிடம் கிடையாது. முழு மனிதத் தன்மையோடு மிக எளிமை யாகப் பெரியார் பேசுவார். இது ஒரு மாதிரியான

பட்டறிவு தன்மை ஆகும். இதை இன்னும் கவனமாக உற்றுநோக்க வேண்டும்.

பெரியாரிடம் காணப்படும் மதம் என்பது இயற்கைக்கு மாறானது, எதிரானது என்ற வாதம் நீட்சேவிடம் உண்டு. கிறிஸ்தவத்தை விமர்சிக்கும்போது நீட்சே, துறவு என்பது இயற்கைக்கு எதிரானது, மாறானது என்பார். பெரியாரைப் படிக்கும்போது நான் இதை உணர்ந்துள்ளேன். ஆனால் இந்த வாதத்தை நீட்சேவிட மிருந்து எடுத்தார் என்றும் சொல்ல முடியாது. சுதந்திர மாக இந்த வாதத்தைப் பெரியார் உண்டாக்கியுள்ளார். பெர்னாட்ஷா முதலான ஒருசில பகுத்தறிவுவாதிகளை அவர் படித்திருக்கலாம்.

> **“ விடுதலை அரசியலை முழுவதும் சாத்தியப்படுத்த திராவிட இயக்க தேர்தல் அரசியல் கட்சிகளால் முடியாது; அவை இடமளிக்காது. உண்மையில் அந்த அரசியல் கட்சிகளைவிட பெரியார் ரொம்ப பெரியவர், வலுவானவர். ”**

மறுமலர்ச்சிக்கால ஐரோப்பாவில், அறிவை முதன்மைப்படுத்துகிற sensualism அல்லது empiricism, rationalism ஆகிய இரண்டு தத்துவப் பள்ளிகள் தோன்றின. empiricism என்பது புலன் சார்ந்த அறிவு என்பது பற்றியது ஆகும். இன்னும் கொஞ்சம் விரித்து நோக்கினால், அனுபவம் சார்ந்த அறிவு என்பது ஆகும். Rationalism என்பது லாஜிக்கில் உள்ள a priori என்ற லத்தின் சொல் குறிக்கும் அனுபவம் சாராத அபூர்வமான அறிவு என்பது பற்றியது ஆகும். மனதிற்குள்ளிருந்து எழுகின்ற, உள்ளங்கை நெல்லிக்கனிப் போலத் தெரிகின்ற ஒன்றுதான் reason என்பதற்கு கறாரான வரையறை ஆகும். இதற்குப் பல நேரங்களில் நிரூபணம் கூட இருக்காது. கணிதம் சார்ந்த அருவச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு தெகார்த், லைப்னிஸ் போன்றோர் ரேசனலிசத்தை ஒரு தத்துவமாக நிறுவினார்கள். இத் தத்துவத்தில் கணித அடிப்படைகளிலிருந்து வரவழைக்கப்படும் அறிவுக்கு அனுபவம் சார்ந்த நிரூபணம் தேவையில்லை. அவசியமில்லை. அந்த அளவுக்கு அவர்கள் அறிவை உச்சாணி கொம்புக்குக் கொண்டுசென்று விட்டார்கள். அமைப்பியல்வாதத்தில் பைனரிகள் - எதிரிணை நிலைகள் மனித மனத்திலேயே இருக்கின்றன என்பதை இம்மானுவேல் காண்டிலிருந்து எடுத்து வாதிடுவார்கள். காண்ட் antinomies என்பது மனித மனத்தில் உள்ளார்ந்து உள்ளது என்றார். ஒரு கட்டத்தில் ரேசனலிசத்தில் அறிவை மறைஞானத் தன்மை கொண்டதாக, அனுபூதத் தன்மை கொண்டதாக மாற்றினார்கள். ஆகவே ஐரோப்பாவின் ரேசனலிசத்தில் உள்ள கூறுகள் எவைவும் பெரியாரிடம் இல்லை. அனுபவம் சார்ந்த அறிவுவாதக் கூறுகள், empiricism - எம்பிரிசிசக் கூறுகள் பெரியாரிடம் உண்டு.

ஐரோப்பியத் தத்துவங்களில் நேர்க்காட்சிவாதம், பயன்பாட்டுவாதம், மார்க்சியம் ஆகிய மூன்று தத்துவங்களின் சாயலை, செல்வாக்கைப் பெரியாரிடத்தில் காணமுடியும். நேர்க்காட்சிவாதத்தின் அனுபவம் சார்ந்த அறிவு என்ற செல்வாக்கு பெரியாரிடத்து உண்டு. ஒன்றின் பயன்பாட்டை வலியுறுத்தும் பயன்பாட்டு வாதத்தின் செல்வாக்கும் அவரிடம் உண்டும் பெரியார் எதனொன்றின் பயன்பாடு பற்றியும் அடிக்கடிக் கேள்வி எழுப்புவார். நவீன விஞ்ஞானங்களை எதற்காக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், அவற்றின் ரேசனாலிட்டி என்பதைக் கருதியல்ல, அவற்றின் பயன்பாடு கருதி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பார் பெரியார். இதே போல மார்க்சியத்திலும் சில கூறுகளைப் பெரியார் எடுத்துக் கொள்வார். இந்த மூன்று தத்துவங்களோடும் பெரியார் தொடர்பு வைத்துக்கொள்வார். உடன்பாடுடைய இடத்தில் அவற்றின் செல்வாக்கை ஏற்றுக் கொள்வார். மாறுபாடுடைய இடத்தில் அவற்றை மறுத்துவிடுவார். அத் தத்துவங்கள் பற்றி பெரியாருக்கு என்ன படுகிறது என்பதுதான் முக்கியம். இதையெல்லாம் ரேசனலிசம் என்று ஆங்கிலத்திலும் நீங்கள் போட்டிருப்பதால் சொன்னேன்.

மற்றபடிக்கு, இயற்கையாய் இருத்தல், இயற்கை உணர்ச்சிக்கு மதிப்பளித்தல், இன்ப நாட்டம், சுதந்திரம் ஆகிய அறிவொளி இயக்கச் சிந்தனைகள் மீது பெரியாருக்கு ஈர்ப்பு உண்டு. ரூசோ, வால்டேர் ஆகியோரை மேற்கோள் காட்டிப் பேசியுள்ளார். ஆனால் ரேசனலிசம் என்றால், எந்த அர்த்தத்தில் அச்சொல்லைப் பயன்படுத்துகிறோம் என்பதுடன்தான், பெரியாரை அதனுடன் தொடர்புபடுத்தலாமா, இல்லையா என்பதை யோசிக்க முடியும். தெகார்த்தின் ரேசனலிசச் சிந்தனையுடன் பெரியார் சிந்தனை ஒத்துப்போகாது.

**சாதி, கற்பு போன்ற ஆதிக்கச் சொல்லாடல்களை மட்டுமில்லாமல், காதல், தொண்டு, பொதுநலம் போன்ற சொல்லாடல்களையும் நிராகரித்த பெரியார், இந்தியத் தத்துவ மரபில் சொல்லப்படும் விதண்டா வாதியா?**

காதல், தொண்டு, பொதுநலம் போன்றவற்றை மிகைப்படுத்தும் போதுதான் பெரியார் நிராகரித்து எழுதியுள்ளார். ஆனால் அவற்றையெல்லாம் அவர் முழுக்கவும் நிராகரிக்கவில்லை. இவற்றின் நியாயமான அர்த்தப்பாட்டில் அதனை அங்கீகரிப்பார்.

சாதி, வருணம், மதம் பற்றிப் பேசும்போதெல்லாம், அவை வெறும் சுயநலக்காரர்களுடைய நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டன, இலாபங்களுக்காக உருவாக்கப்பட்டன. இவையெல்லாம் எந்தவித பொதுநோக்கங்களும் இல்லாதவை என்று நிராகரிப்பார். இது போன்று காதல், தொண்டு, பொதுநலம் ஆகியவற்றைப் பெரியார் நிராகரிக்கவில்லை.

ஆனால், சமகாலத்தில் இச்சொல்லாடல்கள் பயன்படுத்துகிற சூழ்நிலைகளைப் பொறுத்து விமர்சித்துள்ளார். சில வேளைகளில், இச்சொல்லாடல்களைக் குறித்து போலித்தனமானவற்றை முன்வைத்து, திராவிட முன்னேற்ற இயக்கத்துக்காரர்கள் ரொம்ப சிலாகிக்கும் போது இவற்றை நிராகரித்துப் பேசியுள்ளார்.

காதல் என்பதைக்கூட, அது இயற்கை இன்பம், இயற்கைக்கு முரணானதாக இருக்கக் கூடாது என்ற வகையில் பெரியார் ஏற்பார். ஆங்கிலத்தில் platonic love என்று சொல்வார்களே, அது போல பௌத்திரமான, தூய, புனித, உன்னத காதல் என்ற அர்த்தப்பாட்டில் நிராகரிப்பார். தாவரங்களிடத்தில், விலங்குகளிடத்தில் காதல் உண்டு, அதற்குப் புனிதம் ஒன்றுமில்லை, இயற்கையானது என்பது பெரியாரின் கருத்து. வ.சுப. மாணிக்கனார், தமிழ்க் காதல் புத்தகத்தில், 'காதல் என்பது அகத்திணை. அகத்திணை தமிழில் முதன்மையானது. காதலைக் காமம் என்றும் சொல்லலாம். அதை இயற்கையான தளத்தில் புரிந்துகொள்ள வேண்டும்' என்று வலியுறுத்துவார். இந்தப் பார்வையைக் கா.சிவத்தம்பி பாராட்டி எழுதியுள்ளார். காதலைப் பற்றி இது மாதிரியான பார்வைதான் பெரியாரிடமும் உண்டு. காதலை இயற்கை உணர்ச்சியாகப் பார்க்க வேண்டும் என்ற பார்வை நல்ல கருத்தாக்கம்தான்.

'அரசியல் சுயநலமானதாகி விட்டது. சாதி, மதம் ஆகியவற்றை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதின் மூலம் சாதாரணத் தொண்டைச் செய்து வருகிறேன்' என்பது போன்ற வாசகங்கள் பெரியாரிடம் உண்டு. பொதுநலம், தொண்டு ஆகியவற்றை ரொம்ப சிலாகித்து, உன்னதப் படுத்தப்படும் வேளையில்தான் அவற்றைப் பெரியார் நிராகரித்துள்ளார். ஆகவே, பெரியாரை விதண்டாவாதி என்று சொல்ல முடியாது.

**பெரியார், அம்பேத்கர் ஆகியோரை இந்திய இடது சாரிகள் / மார்க்சியர்கள் பயன்பாட்டுவாத நோக்கில் கைகொள்கின்றார்கள். ஆனால் இந்திய மார்க்சியர்கள் தங்கள் சிந்தனையுடன் இவர்களை இணைவாக்கம் செய்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. இது சரியா? சில தமிழ் மார்க்சியர்கள், மார்க்ஸ் காலத்து முந்தைய ஐரோப்பிய பொருள் முதல்வாத மரபுடன் ஒப்புவைத்து, பெரியாரைக் கொச்சைப் பொருள்முதல்வாதி என்று வரையறை செய்கின்றனர், வாதிடுகின்றனர். இது சரிதானா? இந்த இந்திய மரபில் தங்கள் வேர்களில் ஊன்றி நின்று, இவர்களையும் தமது ஊற்றுகளாக இந்திய, தமிழக மார்க்சியர்கள் கொள்ள முடியுமா?**

நமது கட்சியின் பெருந் தலைவர்களில் ஒருவரான ராஜேஷ்வர்ராவ் அறக்கட்டளை, இந்தியப் பொருள் முதல் வாதங்கள் பற்றி ஒரு கருத்தரங்கம் நடத்த இருக்கின்றது. அக்கருத்தரங்கில் கலந்துகொள்ள எனக்கு ஒரு அழைப்பு வந்தது. அந்த அழைப்பை விடுத்த தோழருக்கும் எனக்கும் நடந்த உரையாடலில் நவீன காலத்துக்கு முந்தைய இந்தியப் பொருள் முதல்வாத வகைகளின் முக்கியத்துவம் குறித்து பேசிக் கொண்டோம். இந்தியாவின் அந்தந்த வட்டாரத் தாய்மொழிகளில் உள்ள பொருள்முதல்வாதங்கள் பற்றி அறிந்துகொள்ளுதல் மிகமிக அவசியம். பொதுவாகச் சொல்வதென்றால் நவீன காலத்துக்கு முந்திய சிந்தனை முறைகளை அறிந்துகொள்ள வேண்டும்.

கறாராக நோக்கின், நவீன காலப் பொருள் முதல் வாதத்தை முன்னுக்குக் கொண்டு சென்றவர்கள் ஐரோப்பாவின் முதலாளிகள். பாயர்பாக்கின் ஜெர்மானியப் பொருள்முதல்வாதம் மானிடவியல், மனிதப் பண்பியல் சார்ந்த பொருள்முதல்வாதம் என்பார்கள். பிரான்சிஸ் பேக்கன், ஜான் லாக் போன்றோருடைய பொருள்முதல்வாதம் முரட்டுப் பொருள்முதல்வாதம், முதலாளியத்தின் பொருள்முதல் வாதம், வணிகத் தொழிற்சமூகத்தின் பொருள்முதல் வாதம். இதில் கொச்சைத் தன்மை உண்டு. இது அதிகாரத்தின் கோட்பாடாகவும் இருந்தது. பொருள் முதல்வாதம் என்று சொன்னால், நாம் என்னமோ புனிதமான மார்க்சியக் கோட்பாடு போல நினைத்துக் கொள்ள வேண்டியதில்லை.

அறிவியல்-தொழில்நுட்பங்களை அதீதமாக உன்னதப்படுத்திப் பார்க்கும்போதுதான், நவீன காலத்துப் பொருள்முதல்வாதங்கள் அதிக அற்புதமானதுபோல தெரியும். ஆனால் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிற காலத்தில் அறிவியல்-தொழில்நுட்பங்களை அதிகமாக உன்னதப்படுத்த இயலாது. முதலாளிய காலகட்டத்தில் உருவான கோட்பாடுகள், தொழில்நுட்ப வாதம்,

பொருளாதாரவாதம் ஆகியவற்றைக் கொஞ்சம் சந்தேகப்பட வேண்டியுள்ளது.

ஆகவே, நான் சொல்ல வருவது என்னவென்றால், நவீன காலத்து ஐரோப்பிய பொருள்முதல்வாதங்கள் என்று பேசப்படுவதைப் போல, மூன்றாம் உலகப் பொருள்முதல்வாதங்கள் பற்றிப் பேச வேண்டும். பழங்குடிகளின் பொருள்முதல்வாதங்கள் பற்றிப் பேசிப் பார்க்க வேண்டும். சாருவாகம் ஒரு பொருள்முதல் வாதம். சாங்கியத்தில் பொருள்முதல்வாதம் உண்டு. தாந்திரிகத்தில் பொருள்முதல்வாதம் உண்டு. வைசேடி கத்தில் பொருள்முதல்வாதம் உண்டு. தமிழில் திணைக்கோட்பாட்டில் பொருள்முதல்வாதம் உண்டு. சாக்த சிந்தனையில் பொருள்முதல்வாதம் உண்டு. இந்திய பொருள்முதல்வாதங்களின் பல்வேறு வடிவங்கள் பற்றி ஆழமாகப் பேச வேண்டும்.

தமிழில் உள்ள திணைக் கோட்பாட்டில் அட்ட காசமான பொருள்முதல்வாதம் இருக்கின்றது. நிலமும் பொழுதும் முதல் எனப் பேசும்போது, அது வித்தியாசமான பொருள்முதல்வாதத்தைப் பேசுகிறது. மார்க்ஸ் காலத்துக்கு முந்தைய பொருள்முதல்வாதங்கள் சரியானவை அல்ல என்று கழித்துக் கட்டுகிற வரைசட்டகமே சரியான தில்லை.

பெரியார் ஒரு வித்தியாசமான பொருள்முதல்வாதி. அவர் கொச்சைப் பொருள்முதல்வாதி அல்ல, அப்படி வரையறுப்பது தவறு. இந்தியச் சூழல்களில் பார்ப்பனிய எதிர்ப்பு சார்ந்த, பெரியாரின் நாத்திகம் என்பது ஒரு நியாயமான வரலாற்றுத் தொடர்ச்சியின் - historical argumentative- வரலாற்று நிலைப்பாட்டின் உச்சம்; எல்லை. ஆகவே அதை அப்படியே நிராகரித்துவிட, மறுதலித்துவிட முடியாது. அதனுடன் நின்றுதான், நாம் அதைக் கொஞ்சம் நெகிழ்வார்ந்த நிலைக்கு கொண்டு செல்லலாம், வித்தியாசமான இயங்கியல்நிலைக்குப் பயணிக்கலாம். ஆனால் பெரியார் பேசிய நியாயத் தன்மை கொண்ட வைதீக எதிர்ப்புப் பொருள்முதல் வாதம் என்பது ஒரு வரலாற்று அறிவிக்கை. பழைய தத்துவார்த்தக் கலைச் சொற்களில் சொன்னால் வரலாற்றின் மகாவாக்கியம். அதனால் பெரியார் சிந்தனை நெடுநாளைக்குத் தங்கி நிற்கும்.

மாறும் அரசியல் விவாதச் சூழ்நிலைக்கு ஏற்ப, இன்னும் சில புதிய நெகிழ்வார்ந்த நிலைக்கு கொண்டு செல்ல வேண்டியதாக இருக்கலாம். இப்போது நாத்திகம், செக்குலரிசம் - சார்பின்மைவாதம் பற்றி புதிய விவாதங்கள் எழுந்துள்ளன. அவற்றுக்குப் பண்பாட்டு வேர்கள் இல்லை என வாதிடப்படுகின்றது. மானிடவியல் ஆய்வுகளின், பண்பாட்டு ஆய்வுகளின் வழியாக அவற்றுக்குப் பண்பாட்டு வேர் கிடைக்கும்போது, பண்பாட்டு வேர் கொள்ளல் நடக்கும்போது அவை சற்று வேறுவிதமாக மாறக்கூடும். தமிழிலேயே பண்பாடு மற்றும் பெரியாரியம் பற்றிய விவாதம் நடந்திருக் கின்றது. இவற்றைத் திராவிட இயக்கச் சிசுக்களும் நாமும் செய்துள்ளோம். தொ. பரமசிவன் முழுக்க, வலுவான பெரியாரியவாதி. ஆனால் மானிடவியல், நாட்டார் வழக்காற்றியல் வழியிலான ஆய்வுகள் செய்திருக்கின்றார். பண்பாட்டுக் கூறுகளை யெல்லாம் ஆழமாகத் தன்வயப்படுத்திக் கொள்வார். ஆனாலும்கூட பெரியார் சிந்தனை என்பது வரலாற்று வாக்கியம். அதை நிராகரிக்க முடியாது. கொஞ்சம் நெகிழ்வாக்கம் செய்யலாம். பெரியார் கொச்சைப் பொருள்முதல்வாதி என்பதெல்லாம் பொறுப்பில்லாத, அப்புறப்படுத்த வேண்டிய வார்த்தைகள்.

எஸ்.வி.ஆருடைய பணிகள், அ.மார்க்ஸ் உள்ளிட்ட பின்னை நவீனத்துவரின் வேலைகள், பெண்ணிய தளங்களிலிருந்து வ.கீதா அவர்கள் பெரியாரைத் தனதாக்கிக் கொள்ளும் இடங்கள் போன்ற நியாயப்பாடுகள் வலுவாகும்போது, மார்க்சியர்களாகிய நமது பார்வைகளும் மாறிக் கொண்டே வருகின்றது. பயன்பாட்டுவாத நோக்கில் பெரியாரை எடுத்துக் கொண்டோம் என்று சொல்ல முடியாது. பெரியாரை ஏற்றுக்கொள்ளலாமா, வேண்டாமா என்ற விவாதம் நம்மிடையே நீண்ட நாட்களாக நடைபெற்று வருகின்றது. நாம் பெரியாரை ஏற்றுக்கொள்ள முடியாமல் போனமைக்குப் பலவித காரணங்கள் இருந்திருக்கின்றன. எரிச்சல்படுத்தக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியலும் சில சமயங்களில் காரணமாக இருந்திருக் கின்றது.

'பெரியார் சுயமரியாதை சமதர்மம்' எஸ்.வி.ஆர் - வ.கீதா ஆகியோரின் மிக நல்ல படைப்பு. அதில் அவர்கள் பெரியார், சுய மரியாதை சமதர்மக் கட்சி ஆரம்பிப்பதற்கு முயன்றதைப் பற்றியெல்லாம் விரிவாக ஆவணப்படுத்தியுள்ளனர். அது நமக்குப் புதுவெளிச்சங் களைத் தருகின்றன. பெரியாரின் சில பரிமாணங்கள் பற்றிய அ.மார்க்ஸின் பார்வைகளும் மிக முக்கிய மானவை. பெரியாரிடம் உள்ள கட்ட விழ்த்தல், அராஜகக் கூறுகள் இல்லாமல் இந்தியப் பழமையை எதிர்கொள்ள முடியாது என்ற அ. மார்க்ஸின் பார்வை முக்கியமானது.

ஆனால் நாம் இன்னும் இயங்கியல் பொருள் முதல்வாதம் என்ற சொல்லை மட்டும்தான் பயன் படுத்திக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்தியச் சூழல் களுக்குள் பொருள்முதல்வாதம் என்பது சாதி, அதைத் தாங்கிப் பிடிக்கிற சனாதனம், இந்துத்துவம் ஆகியவற்றை விமர்சிக்கின்ற ஒன்றாகத்தான் இருக்க முடியும். அப்படி உருவானால்தான் சமூகத்திற்கும் பயனுடையதாக இருக்க முடியும். இதிலில்லாமல் வெறும் வர்க்கவாதம் பேசினால் பயனில்லை.

ஆங்கிலத்தில் ஒரு தத்துவ விவாதம் நடந்து வருகின்றது. அது correctness எனப்படுகிற சரித்தன்மை பற்றியது. இந்தச் சரித்தன்மை என்கிற வாதமானது பல சமயங்களில் செக்டேரியனிசத்திற்கு - குழுவாதத்திற்குக் கொண்டுசென்று விடும். சரித்தன்மை என்பது அறிவியல் ரீதியாக, தொழில்நுட்பரீதியாக இந்த நெட்டைப் போட்டால்தான் அந்தச் சக்கரம் சுற்றும் என்பது போல எந்திரத்தனமாகச் சரித்தன்மை என்பது சரியாக இருக்கலாம். ஆனால் வாழ்க்கை என்பது இந்தச் சரித் தன்மையோடு மட்டும் குறுகிவிடுகிற விசயமில்லை. பல சமயங்களில் மார்க்சியக் கோட்பாட்டாளர்கள், இந்தச் சரித்தன்மையை மட்டும்தான் கோட்பாட்டுரீதியாகப் பார்க்கின்றார்கள் என்ற விமர்சனம் மேலைநாடுகளில் வந்துள்ளது. இந்த விமர்சனத்திற்கு வாழ்க்கையை வாழ்க்கையாகப் பார்க்கவில்லை, எந்திரத்தனமாகப் பார்க்கின்றோம் என்று அர்த்தம். நமது கோட்பாடுகளில் எந்திரத்தனம் இருக்கிறது என்று பொருள்.

உங்களுக்குத் தெரியுமா? “பொருள்முதல்வாதம் உண்மையாக இருக்கலாம், ஆனால் கருத்துமுதல்வாதம் சுவையாக இருக்கின்றது” என்று கார்க்கி சொல்வார். பொருள்முதல்வாதம் எல்லா சமயங்களிலும் சரியாக இருப்பது பலமாக இருக்கலாம், பலவீனமாகவும் இருக்கலாம். கார்க்கி ஏதோ கொடூரமான தப்பாகச் சொல்லிவிட்டார் என்று எனக்குத் தோன்றவில்லை. இந்த இடங்களில் இயங்கியல்ரீதியாக, நெகிழ்வாகச் செயல்பட வேண்டும் என்றுதான் கார்க்கி வலியுறுத்து கின்றார் என்று நினைக்கிறேன்.

லத்தின் அமெரிக்க புரட்சியாளர்கள் புரட்சியில் அறிவார்ந்த கூறுகள் மட்டுமில்லை, அதற்கு மாறான கூறுகளும் இருக்கும் என்கிறார்கள்; புரட்சியில் கற்பனை, உணர்ச்சி ஆகிய கூறுகளெல்லாம் இருக்கும் என்கிறார்கள். தொன்மச் சிந்தனையும் புரட்சியும் என்று லத்தீன் அமெரிக்கர்கள் கட்டுரை எழுதுகிறார்கள். அதனால் நாம் சரித்தன்மையை மட்டும் வைத்துக் கொண்டு, பெரியாரைக் கொச்சையானவர் என்றெல்லாம் சொல்வது, விமர்சிப்பது சரியாக இருக்காது.

**தேசியம் எதிர் காலனியம் - ஏகாதிபத்தியம் என்ற முரண்நிலை சட்டகங்களுக்குள், பெரியார், அம்பேத்கர் போன்ற சாதி எதிர்ப்புத் தலைவர்கள் காலனியத்திற்கு ஆதரவாளர் என்றும் விமர்சனம் செய்துவருகின்றோம். இந்த முரண்நிலை சட்டகம் இன்னும் நம்மிடையே வலுவாக இருக்கின்றது. இந்த விமர்சனத்தை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

இந்தியாவில் காலனியம் குறித்த விவாதங்கள் இன்னும் முழுமை அடையவில்லை. இன்னும் இந்த விவாதங்களில் குறைபாடுகள், இடைவெளிகள் இருக்கின்றன. வரலாற்றுரீதியாக அதிகமாக இந்தியச் சமூகம் தேங்கி நின்றதைக் காலனியம் உடைத்து, முன்னுக்குத் தள்ளியது என்பார் மார்க்ஸ். கம்யூனிஸ்ட் அறிக்கையில் மார்க்ஸ் ஒன்றரை பக்கத்திற்கு முதலாளி யத்தின் புரட்சிகரமான பணிகள் என்று சில விசயங் களைக் குறிப்பிடுவார். நிலவுடைமைமுறை உறவுகளை உடைத்தெறிந்து, இதுவரை கல் போல உறைந்து கிடந்த மதிப்பீடுகள், உறவுகள் எல்லாம் காற்றாகிக் கரைந்து விடுகின்றன. அன்பு, பாசம், குடும்பம், காதல். நட்பு என்பது போன்று வைத்திருக்கின்ற விசயங்களை யெல்லாம் முதலாளித் துவம் உடைத்தெறி விடுகின்றது என்பார் மார்க்ஸ்.

இந்த மதிப்பீடு தவறு என்று சொல்ல முடியாது. முதலாளித்துவத்தின் புரட்சிகரமான பணிகள் என்றொரு பகுதி மார்க்சியத்தில் உண்டு. முதலாளித்துவம் அதனுடைய பணிகளைச் செய்துமுடிக்கும், அதற்குப் பிறகு முதலாளித்துவம் உருவாக்கும் தொழிலாளி வர்க்கம் அப்பணிகளை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் என்ற பார்வையை மார்க்சே உருவாக்கி யுள்ளார். 1853-க்குப் பிறகு முதலாளித்துவ அரசுகளே புரட்சித் தன்மைகளை இழந்துவிட்டன என்ற முடிவுக்கு வரும்போதுதான், மார்க்ஸ், கம்யூனிஸ்ட் அறிக்கையின் நிலைப்பாடுகளைக் கடந்து செல்வார். இதற்குப் பிறகுதான் விவசாயிகளுடன் கூட்டணி என்ற போர் தந்திரத்தை மார்க்சும் எங்கெல்சும் உருவாக்குவார்கள். இது மார்க்சியத்திற்கு உள்ளே அமைந்துள்ள சில வளர்ச்சி கட்டங்கள்.

அனுபவரீதியாக முதலாளியத்திற்கு முற்போக்கு பாத்திரம் ஏதுமில்லை, அவர்கள் நிலப்பிரபுத்துவத்துடன் கூட கூட்டுச் சேர்ந்து கொள்கிறார்கள் என்பது தெரிந்தவுடன்தான் மார்க்சும் எங்கெல்சும் விவசாயி களுடன் கூட்டணி என்ற முடிவுக்குச் செல்கிறார்கள். இதற்கு முந்தி விவசாயி வர்க்கம் உடைமை வர்க்கம், குட்டி முதலாளிய வர்க்கம் என்பது போன்ற விமர்சனங் களெல்லாம் உண்டு. பிறகு இந்த நிலைப்பாடுகள் சற்று மாறின. பிற்காலத்தில் ரஷ்ய விவசாயி, சீன விவசாயி, இந்திய விவசாயி ஆகியோரைப் பற்றியெல்லாம் மார்க்ஸ் கொஞ்சம் வித்தியாசமாகப் பேசுவார்.

காலனியம் பற்றிப் பேசும்போது இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், காலனியம் ஒரே நேரத்தில் காலனியமாகவும் முதலாளியமாகவும் இருக் கின்றது. காலனியம் என்பது மிக மோசமான முதலாளியம் என்ற கருத்தும் உண்டு. காலனியம் ஒரு வரலாற்றுக் காரணி என்ற கருத்தும் உண்டு. காலனியத்தின் பாத்திரம்

என்ன என்பது மார்க்சியத்தில் சிக்கலான இடம். அந்தச் சிக்கல் மார்க்சின் எழுத்துகளில் உள்ளது. இன்னும் மார்க்சியத்தில் அந்தச் சிக்கல் நீடித்து வருகின்றது. அந்தச் சிக்கல் அம்பேத்கர் எழுத்துகளிலும் பெரியாரின் எழுத்துகளிலும்கூட இருக்கின்றது.

இந்தியாவில் மிகவும் உறைந்து போன பழமைக் கூறுகளை அடித்து நொறுக்கும் வேலையை, ஐரோப்பாவில் முதலாளித்துவம் செய்ததைப் போல, இங்குக் காலனியம் செய்யும் என்ற எதிர்பார்ப்பு பெரியார், அம்பேத்கர் ஆகியோரிடம் இருந்துள்ளது. இன்றும்கூட தலித், பெரியார் இயக்க அமைப்புகளில் இன்றைய இந்திய ஆட்சியில் இருப்பதைவிட, பிரிட்டிஷ் ஆட்சியில் சில அனுகூலமான நிலைமைகள் நிலவின என்ற எண்ணம் இருக்கின்றது. அதனால் காலனியம் குறித்த விவாதங்கள் இன்னும் நடைபெற வேண்டியுள்ளது.

காலனியம் குறித்த கேள்வியை மீண்டும் ஒருமுறை எழுப்பி, காலனியத்தின் பண்புநிலைகள் குறித்து முழுக்க எதிர் நிலையான மதிப்பீடுகளை முன்வைத்து மறுதலிக்கும் பின்னைக் காலனிய விவாதங்கள் இப்போது நடந்து வருகின்றன. வங்காளத்தில் பார்த்த சடர்ஜியும் கியோனேந்திர பான்டேயும் அவரது கூட்டாளிகளும், அடித்தள மக்கள் நோக்குநிலை - சபால்டர்ன்னில் தொடங்கி, பின்னைக் காலனிய நோக்கிலான ஆய்வுகளை முன்னெடுக்கின்றனர். அடித்தள மக்கள் நோக்குநிலையும் பின்னைக் காலனியப் பார்வைகளும் இணையும்போது காலனிய தேசியம் பற்றிய புதிய உரையாடல்கள் முன்னுக்கு வருகின்றன. அந்த உரையாடல்களில்தான் தேசியம் எந்த அளவுக்குக் காலனிய முதலாளியத்தின் கூறுகளை உள்வாங்கிக் கொண்டுள்ளது என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது. பெரியாரின் தேசியம் குறித்த நிலைப்பாடுகளுடன் அவற்றை ஒப்பிட முடியும்.

ஆகவே முதலாளியம், காலனியம், தேசியம் பற்றிய மார்க்சிய நிலைப்பாடுகள், அம்பேத்கர் நிலைப்பாடுகள், பெரியார் நிலைப்பாடுகள் ஆகியவற்றை உடன்வைத்து நோக்கி, ஆழமாகச் சிந்தித்து, மதிப்பிட வேண்டும். எடுத்த எடுப்பிலேயே, அம்பேத்கரும் பெரியாரும் காலனிய ஆதரவாளர்கள், ஏகாதிபத்திய ஆதரவாளர்கள் என்று வரையறுப்பது சரியாக இருக்காது. இந்த உரையாடலை எம்.எஸ்.எஸ். பாண்டியனின் Brahmin and Non-Brahmin, அலாய்சியஸின் Nations Without Nationalism போன்ற ஒருசில எழுத்துக்கள் முன்னெடுத்துள்ளன. இதைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும்போதுதான் தெளிவுகள் கிடைக்கும்.

காலனிய இந்தியாவில், பெரியாரின் நவீனம் எனபது ஒரு மாற்று நவீனம் என்ற நோக்கில் விவாதத்திற்கு உட்படுத்த வேண்டும். அதில் சாதி-வருண எதிர்ப்பு, சனாதன எதிர்ப்பு, இந்துத்துவ எதிர்ப்பு ஆகிய இந்தியக் கூறுகளும், ஐரோப்பியக் கூறுகளும் கலந்து இருக்குமாக இருக்கலாம். பெரியாரின் நவீனத்திற்கு ஒரு விடுதலை அரசியல் உண்டு. அந்த விடுதலை அரசியல் ஒரு incomplete project, அதாவது நிறைவு பெறாத செயல்திட்டம். இந்த இடத்தில் ஹெபர்மாஸ் பயன்படுத்திய incomplete project என்ற சொல்லைப் பயன்படுத்திச் சொல்ல விரும்புகிறேன். அந்த விடுதலை அரசியலை முழுவதும் சாத்தியப்படுத்த வேண்டும். அதை முழுவதும் சாத்தியப்படுத்த திராவிட இயக்க தேர்தல் அரசியல் கட்சிகளால் முடியாது; அவை இடமளிக்காது. உண்மையில் அந்த அரசியல் கட்சிகளைவிட பெரியார் ரொம்ப பெரியவர், வலுவானவர்.

நவீனம் என்பதை இந்தியச் சூழல்களில் பெரியார் அமரச் செய்திருக்கின்றார்; தொழிற்படச் செய்திருக்கின்றார். ஐரோப்பிய நவீனத்தை அப்படியே மொன்னையாக இங்கே எடுத்து ஒட்டக் கூடாது. அப்படி ஒட்டுவது அல்ல பெரியாரின் நவீனம். ஐரோப்பாவில் நடந்தது போன்ற பெருந்தொழில் மயமாக்கல், தேசிய அளவிலான பெருநிறுவனங்கள் உருவாக்கல் ஆகியவை அல்ல நவீனம். சாதி-வருண எதிர்ப்பு, சனாதன இந்துத்துவ எதிர்ப்பு, நம் சுயத்திலிருந்து நவீன வாழ்க்கைமுறை வளர்த்தல் ஆகியவை தாம் பெரியார் நவீனம். இப்போது இந்தியாவில் நடந்துகொண்டிருக்கும் நவீனமாக்கல் என்பது, இந்தியாவை ஐரோப்பாவிற்குத் திறந்துவிடுவது அவ்வளவுதான், வேறொன்றுமில்லை.


நவீனத்தை நம் பண்பாட்டில் வேர்கொள்ளச் செய்ய நமக்குப் பெரியார் தேவைப்படுகின்றார். பெரியாருக்கு முன்பு நவீனத்தைத் தமிழ்ப் பண்பாட்டில் வேர்கொள்ளச் செய்யும் பணியை அயோத்திதாசர் தொடங்கி வைத்தார். நவீனத்தைப் பண்பாட்டில் வேர்கொள்ளச் செய்ய நம்முடைய ஜீவா, நாவா போன்றோரெல்லாம் உழைத்துள்ளனர். ஆனால் அதனை பெரியார் இல்லாமல் செய்யமுடியாது. பெரியார்தான் திராவிட-தமிழ் அடையாளத்தை முழுக்கவும் வலிமையாகவும் ஒரு எதிர்ப்பு அடையாளமாக உருவாக்கியுள்ளார். பெரியார் இல்லாமல் இந்த எதிர்ப்பு அடையாளத்தை வேறு எவராலும் உருவாக்கியிருக்க முடியாது. எனவே தான் பெரியாரே நமது நவீன அடையாளமாகிறார். ●

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்




போன்சாய் நிழல்கள்
செம்பை முருகானந்தம்

பாரதிதாசன் நாடகங்கள் - ஓர் ஆய்வு
டாக்டர் ச.சு.இளங்கோ








ஏழாவது அறிவு
(மூன்று பாகங்கள்)
வெ.இறையன்பு




இந்தியர்களின் ஆங்கிலச் சிறுகதைகள்
தமிழில்: பேராசிரியர் கி.நடராஜன்

விடுதலைக்கு வித்திட்ட தியாக தீபங்கள்
பி.தயாளன்







விடியலைத் தேடி
ஜி. மார்க்ஸ்




இருள் யுகம்
தர்மவீர் பாரதி, தமிழில்: ஆ.சுமதீந்திரா

கம்போடிய நாட்டுத் தொன்மக் கதைகள்
தமிழில்: மாத்தளை சோமு







தமிழ் இலக்கிய வரலாறு
(தமிழ்ச் செம்மொழி வரலாறும் இணைந்தது)
முனைவர் சி.சேதுராமன்

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.com

**கிளைகள்**

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-2323990; மதுரை: 0452-2344106, 2350271; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.




# புத்தகங்களே ஞானத்தின் வேர்கள்

## முனைவர் நா.சுலோசனா

**பு**த்தகங்கள் மனத்தைச் செம்மைப்படுத்துகின்றன. பக்குவப்படுத்துகின்றன. நல்ல புத்தகங்கள் நல்ல மனிதர்களை உருவாக்குகின்றன. புத்தகங்களை வாசிப்பதும், புத்தகங்களை விசாலமான பார்வையில் நுணுகி ஆராய்வது என்பதும் தினந்தோறும் நடந்தாலும் அதற்கான நாளைக் கொண்டாடுவது தேவையாகிறது.

அறிவியல் நாள், உலகத் தாய்மொழிநாள், உலகச் சுற்றுச்சூழல் நாள் எனப் பல தினங்கள் யுனெஸ் கோவினால் அறிவிக்கப் பெற்று அத்தினங்களைக் கொண்டாடி வருகிறோம். அந்த வகையில் மனிதனை மாமனிதனாக்கச் சமூகத்தின் திறவுகோலாக விளங்கும் புத்தகங்களுக்கு என ஒரு நாள் கொண்டாட வேண்டு மல்லவா? அந்த நாள் தான் ஏப்ரல் 23, உலகப் புத்தக நாளாகும்.

ஸ்பானிய மொழி எழுத்தாளர் மிகுல் டி செர்வான்டஸ் (டான் குயிக்சாட் நூலாசிரியர்) மற்றும் வில்லியம் சேக்ஸ்பியர் இருவரது நினைவு நாளும் ஏப்ரல் 23. இந்த நாளை உலகப் புத்தக தினமாக 1923 இல் ஸ்பெயின் தேசத்தின் காட்டலோனியா நகரம் முடிவு செய்தது.

1948, ஏப்ரல் 23 உலகப் புத்தக தினமாகியது. எழுத்தாளரின் உரிமம் பாதுகாக்கும் தினமாக யுனெஸ்கோ நிறுவனத்தால் 1976 இல் உலகப் புத்தக தினம் மீண்டும் மறுபிறவி எடுத்தது.

சுவீடனில் இந்த தினம் குழந்தைகளுக்குப் புதிய புத்தகங்களைப் பரிசாகத் தரும் சிறப்பு நாளாகக் கொண்டாடப்படுகிறது. இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் இதை உலகப் புத்தக இரவு என்று அழைக்கிறார்கள். கனடாவில் வாரம் முழுவதும் புத்தக தின வாரம் எனக் கொண்டாடப்படுகிறது. புத்தக தினம் கொண்டாடு வதின் வழி ஒவ்வொரு படைப்பாளியையும் நாம் கொண்டாடும் தருணமாக அமைகிறது.

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு நாளைக் கொண்டாடும் போது நல்ல மனிதத்தைப் படைக்கும் புத்தகங்களுக்கென ஒரு நாளைக் கொண்டாடுவது இன்றைய சூழலில் அவசியமாகிறது. இயந்திரத்தனமான வாழ்க்கையில், போட்டிகள் நிறைந்த சமுதாயத்தில் இளம் தலைமுறையினர் பாடநூல்களை மதிப்பெண் பெறுவதற்காகவே வாசிக்கும் சூழலில், புத்தகங்களை ஒரு சுமையாகவே கருதுகின்றனர். எந்த நோக்கோடு நமது இலட்சியம் இருக்கிறதோ அதை நோக்கிய பயணமாகவே புத்தகப் பயணமும் தொடரவேண்டும்.

'புத்தகமே சிறந்த நண்பன்' என்பார்கள். புத்தகங்களை மட்டுமே நண்பனாக்கிய மனிதர்களும் உண்டு. பாரதி சொன்னான் 'எமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோரா திருத்தல்' எனப் படைப்பையே ஆத்மார்த்தமாக நேசித்தவர்கள் வாழ்ந்த, வாழும் மண்ணில்தான் நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மனிதர்களையும் சமூக வரலாற்றையும் மிகச் சரியாக வாசித்ததால் காலத்தால் அழியாத மாமனிதராக உயர்ந்தோர்கள் காரல்மார்க்ஸ், பிரடரிக் ஏங்கல்ஸ், வாசிப்புதான் மக்கள் புரட்சியின் உயிர் நாடி என வர்ணித்த சோவியத் புரட்சியின் நாயகன் லெனின், தனது வாசிப்பை சுவாசிப்பாக ஆக்கிக் கொண்ட ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், வாசிப்புக் கொள்கை மூலம் கலாச்சார புரட்சியென சீனத்தை வெல்ல வைத்த மாவோ, வரலாற்றின் வெற்றி அடையாளமான சேகுவேரா, சிறைச்சாலையை புத்தகச்சாலையாக்கிய மாமனிதன் நெல்சன் மண்டேலா, தூக்குக்கயிற்றை முத்தமிட்ட போதும் சுவாசிப்பை நிறுத்தினாலும் வாசிப்பை நிறுத்தமாட்டேன் என்ற மாவீரன் பகத்சிங், நாட்டின் அரசியல் சட்டத்தை எழுதும் அளவு உயர்ந்து வழி காட்டிய அண்ணல் அம்பேத்கர், இன்று தலைகுனிந்து வாசித்தால் நாளை தலைநிமிர்ந்து வாழலாம் என்ற ஏ.பி.ஜே அப்துல்கலாம் போன்றோர் வாசிப்பு மட்டுமே ஒரு மனிதனின் சுவாசத்தை சுத்தமாக்கி நல்ல வளமான மனிதன் ஆக்குகிறது என்பதற்கு காரணியமாக வாழ்ந்து காட்டியுள்ளனர்.

மாணவர்கள் மத்தியில் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த கல்லூரிகளில் நூலக வாரம் கொண்டாடப் படுகிறது. அந்நாள்களில் மாணவர்கள், அவர்கள் விருப்பப்பட்ட ஒரு புத்தகத்தைத் தேர்ந்தெடுத்து ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் எத்தனை பக்கங்களை வாசித் திருக்கின்றனர் என்றும் அவர்கள் வாசித்த பகுதியிலிருந்து வினாக்கள் கேட்கப்பட்டு அதற்கு பதிலளிக்கும் வகையில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதிலிருந்து இளைய சமுதாயத்தினருக்கு வாசிக்கும் பழக்கம், வாசிப்பதில் விரைவு, புரிந்துகொள்ளும் திறன், மனதில் பதியவைத்தல் மற்றும் நினைவாற்றல் போன்றவற்றை வளர்த்துக்கொள்ள இதுபோன்ற வாசிப்புப்பழக்கம் பயனளிக்கிறது.

'ஒரு நூலுக்குள் ஒரு நூலாசிரியன் உயிர் வாழ்கிறான்' என்பர். ஒரு நூலை வாசிக்கும்போது அந்நூலைப் படைத்தவரைப் பற்றிய மனநிலையை முழுமையாக அறிந்துகொள்ளமுடிகிறது.

'பேரறிஞர் என்று அழைக்கப்படும் அண்ணா, நூலகங்களிலேயே தவமிருப்பாராம். நூலக நேரம் முடிந்த பிறகும் நூலகர் நூலகத்தைவிட்டு வெளியேறும் வரை புத்தகங்களை வாசிப்பாராம். அண்ணா உயிர்காக்கும் சிகிச்சைக்காக அமெரிக்க மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார். அண்ணாவைப் பரிசோதித்த மருத்துவர் உங்களுக்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றார். அண்ணாவோ இந்த அறுவைச் சிகிச்சையை ஓரிரு நாள்கள் தள்ளிப்போடலாமா என்று கேட்டுக் கொண்டார். அதற்கு மருத்துவர் ஏன்? என்றார். அண்ணா, நான் ஒரு புத்தகம் வாசித்துக் கொண் டிருக்கிறேன். அப்புத்தகத்தை ஓரிரு நாட்களுக்குள் படித்து முடித்து விடுவேன். ஒருவேளை இந்த அறுவைச் சிகிச்சை வெற்றிபெறவில்லை என்றால் என்னால் அந்த புத்தகத்தை வாசிக்க முடியாமலே போய்விடும் என்றார். இப்படிப்பட்ட மகத்தான மனிதரை அவர் படித்த புத்தகங்கள் தான் 'அறிஞர்', 'பேரறிஞர்' என்னும் பட்டங்களோடு போற்றப்படுவதற்கு வழித்துணையாக இருந்தது.

நேரு சிறையிலிருக்கும்போது தமது மகளான இந்திரா காந்திக்கு எழுதிய கடிதங்கள்தான் இந்திராவை நாட்டின் பிரதமராக்கியது. காரல்மார்க்ஸ் எழுதிய 'மூலதனம்' தான் இன்றளவும் சிறந்த பொருளாதாரக் கொள்கையை வெளிப்படுத்தும் வகையில் பேசப் படுகிறது. பகத்சிங்குக்கு 'நான் ஏன் நாத்திகன் ஆனேன்?' எனும் சிந்தனை மேலோங்கியது.

கண்ணதாசன் சொல்வார், ஒரு மனிதன் இப்படித் தான் வாழ வேண்டுமென்றால் 'அர்த்தமுள்ள இந்து மதம்' படியுங்கள். ஒரு மனிதன் எப்படி வேண்டு மானாலும் வாழலாம் என்றால் என்னுடைய 'வனவாசம்' படியுங்கள் என்பார்.

'பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட வாழ்க்கை வாழ்க்கையல்ல. இறப்புக்குப் பின்னும் பேசப்படுவதுதான் வாழ்க்கை'. நாம் வாழ்ந்த காலத்தில் நமது சுவடுகள் எதிர்காலத் தலைமுறையினருக்குப் பாடமாக அமைய வேண்டும். நிறைய படைப்பாளிகள் தான் எழுதுவதை நிறுத்தி பல ஆண்டுகள் கடந்தாலும் அவர்களுடைய படைப்புகள் என்றென்றும் வாழும் வரம் பெற்றதாக விளங்குகிறது. படைப்போடு படைப்பாளனும் பேசப்படுகிறான். நேற்று எழுதி இன்று பேசுவதைவிட படைப்பாளன் எழுதுவதை நிறுத்திய பிறகும் பேசப்படுவதில் தான் அவன் படைப்பும் உயிர் பெறுகிறது. அவனும் உயிர் பெறுகின்றான்.

சிறையிலிருந்து புத்தகங்களைப் படித்து மாமனிதர்களானவர்களும் உண்டு. புத்தகங்களை அட்டைபோட்டு அட்டைப் படங்களை மறைக்கா தீர்கள். அட்டைப் படத்தைப் பார்த்தாவது பலருக்குப் படிக்கும் ஆர்வத்தை மிகுதிப்படுத்தும் என்பார்கள்.

தந்தை பெரியார் தமது கொள்கைகளை, கருத்தியல் களை அனைவரிடமும் கொண்டு போய்ச் சேர்க்க புத்தகங்களை மிகக்குறைவான விலைக்கு விற்றார். உன் நண்பன் யார் என்று சொல், உன்னை அறிந்து கொள்கிறேன் என்பது போல் நாம் படிக்கும் புத்தகங்களே நம்மைச் சீர்தூக்கிப் பார்க்க உதவுகிறது. இன்றைய சூழலில் 'புத்தக வங்கி' ஏற்படுத்தப்பட்டு பள்ளி, கல்லூரி மாணவர்கள் தமக்குத் தேவையான புத்தகங்களைப் புத்தக வங்கியில் மிகக் குறைந்த விலையில் பெற்று படிக்க வழிவகை செய்யப் பட்டிருக்கிறது.

கல்லூரிக்குச் செல்லும்போது புத்தகங்களைச் சுமந்து கொண்டுபோய் படித்த இளைஞர்கள் பிற் காலத்தில் நல்ல அரசியல் தலைவர்களாக, படைப்பாளி களாக, நாடு போற்றும் நல்லவர்களாகத் திகழ்ந்தனர். இன்றைய தலைமுறையினர் புத்தகத்தை விட உள்ளங் கையில் கைப்பேசியை வைத்துக்கொண்டு உலகையே வலம் வருகின்றனர். சமூக வலைத்தளங்களுக்கு ஆட் பட்டு தம்மை பட்டைதீட்டுவோரும் உண்டு.

பேருந்துகளில் கனத்த இதயத்துடன் பயணம் செய்யும் தருணத்தில் நல்ல புத்தகத்தை வாசித்தால் பேருந்துப் பயணத்தோடு நம் மனப் பயணமும் புத்தகத்தோடு ஒன்றி நாம் சென்றடையும் இடம் வரும்போது நம் மனதும் லேசாகிறது. நாம் எந்த ஒரு மனத்தைக் கொண்டிருந்தாலும் அப்புத்தகத்தில் உள்ள கதாபாத்திரமாகவே மாறிவிடுவதும் உண்டு. மனம் அமைதியாக இருக்கும்போது வாசிக்கும் புத்தகங்களின் சிந்தனைகள் நம் மன ஓட்டத்தின் நீங்காத நினைவு களைத் தருகின்றன.

'நூலகத்திற்குச் செல்ல மறந்த நாள்கள் நான் மூச்சுவிட மறந்த நாள்களே' என்பான் ஒரு கவிஞன். சமூகத்தின் வெளிப்பாடுகளை வெளிக்கொணரும் உந்து சத்தியாக புத்தகங்கள் இருக்கின்றன.

'நவில் தொறும் நூல் நயம் போல பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு' 'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு' என ஒருவனின் பண்பை மதிப்பிட அவன் படித்த புத்தகங் களே சான்றாக அமைகிறது. 'உவப்பத்தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்' பிறர் மனம் மகிழும்வண்ணம் பேசி, பிரியும்போது இனி இவரை எப்போது காண்போம் என்று வருந்தும் படி பிரிதலே புலவரின் தொழிலாகும். அவ்வகையில் ஒரு புத்தகத்தைப் படித்தபின் கிடைக்கும் இன்பமே மறுபடியும் அப்புத்தகத்தையும் படைத்த படைப் பாளியையும் நினைவு கூறுகின்றன.

ஆண்டுதோறும் புத்தகக் கண்காட்சியின் வாயிலாக புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்து கிறோம். அங்கு வரும் கூட்டத்தைப் பார்த்துத்தான் இத்தனைப் புத்தகப் பிரியர்கள் இருக்கிறார்களா எனும் வியப்பே மிஞ்சுகிறது. புத்தகங்களைக் கழிவு விலையில் விற்பனை செய்தும் புத்தகம் வாங்குவோரை ஊக்கப் படுத்துகின்றன.

ஒவ்வொரு வீட்டிலும் சமையலறை, பள்ளியறை, பூசையறை, வரவேற்பறை இருக்கும்போது படிப் பதற்கென படிப்பறையும் நூலகமும் இருக்கவேண்டு மென்றார் அண்ணா. வீடு என்பது வசிக்க மட்டுமல்ல வாசிக்கவும் தான் எனும் சிந்தனையோடு பெற்றோர்கள், பிள்ளைகளுக்கு முன்னோடிகளாக விளங்க வேண்டும். குழந்தைகளுக்குப் பரிசு தரவேண்டும் என்று நினைக்கும் போதெல்லாம் நல்ல புத்தகங்களைப் பரிசாகத் தர வேண்டும். இளவயதிலேயே நல்ல விதைகளை விதைத்தால் அதன் பலன் நல்லதாகவே இருக்கும் எனப் பெற்றோரும் மற்றோரும் எண்ணவேண்டும். திரைப் படம், கோயில் எனப் பொழுதுபோக்குவதற்குரிய இடங்களுக்கு இட்டுச்செல்வதைவிட அறிவுக் கோயிலான நூலகங்களுக்கு அழைத்துச் செல்வது குழந்தைப் பருவத்திலேயே நன்மையை விதைப்பதாகும்.

"அறிவு அற்றம் காக்கும் கருவி" அவ்வகையில் அறிவை ஊற்றெடுக்கச் செய்யும் புத்தகங்களைப் படித்து பண்படுவோம். பலருக்குப் பயன்படவும் செய்வோம். ஆண்டுக்கொரு முறை வருவது உலகப் புத்தக நாள். நாள்தோறும் வாசிப்போருக்கு ஒவ்வொரு நாளும் புத்தக நாளே! புத்தகங்கள் ஞானத்தின் வேர்களாகவும், சமூகத்தின் திறவுகோலாகவும் விளங்குகிறது. ●

நூல் மதிப்புரைக்கான கட்டுரைகளை அனுப்புவோர் தவறாமல்
நூலின் இரண்டு பிரதிகளைச் சேர்த்து அனுப்புமாறு
கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
நூல் பிரதிகள் இணைக்கப்படாத கட்டுரைகளைப் பிரசுரிக்க இயலாது.

- பொறுப்பாசிரியர்

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்




விலை ரூ. 210/-

படகோட்டியின் பயணம்
பாவண்ணன்

பொருநை நதிக் கரையினிலே (நாவல்)
கன்யூட்ராஜ்





விலை ரூ. 230/-




விலை ரூ.100/-

திசையாகும் திருப்பங்கள்
(தன்னம்பிக்கை மற்றும் விழிப்புணர்வுக் கட்டுரைகள்)
ஆ.லொயோலா




விலை ரூ. 165/-

INDIA 2020
for Students
A.P.J. Abdul Kalam, Y.S. Rajan

காலத்தை வென்ற
காதற் கவிதைகள்
மொழிபெயர்ப்பும் தொகுப்பும்: பேராசிரியர்




விலை ரூ.65/-




விலை ரூ.115/-

மறக்க முடியாத மனிதர்கள்
புலவர் முத்துவேலு




விலை ரூ. 200/-

நான் அறிந்த தமிழ் அறிஞர்கள்
செ.வை.சண்முகம்

அம்புப் படுக்கையில்
விவசாயிகள்
வெ.ஜீவகுமார்




விலை ரூ.30/-




விலை ரூ.20/-

மார்க்சியமும்
திருத்தல்வாதமும்
வி.இ.லெனின்

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.com

**கிளைகள்**

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-2323990; மதுரை: 0452-2344106, 2350271; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.

# பெருநகர வாழ்வும் புலிக்கலைஞனும்...

ஜி.சரவணன்

"புனைவுகள் எனக்கு அளப்பரிய சுதந்திரத்தையும் கதாபாத்திரங்களையும் அவர்கள் வாழ்வையும் எழுத வாய்ப்பளித்தன. எழுதுகிற புனைவுகள் ருசிகரமாகவும் வாசகருக்கு மகிழ்வூட்டிச் சிந்திக்க வைக்கவும் பயன்பட்டன. இதுவரை எனக்கு எவ்வித வருத்தங்களுமில்லை. நான் ஒரு நோயாளியாகிவிட்டாலும் அது எனது செயல்பாட்டை ஒன்றும் தடுக்கவில்லை. எனது குடும்பத்திற்கு போதுமான நேரத்தைச் செலவிடுகிறேன். அவர்களுக்கும் புத்தகம் படிப்பதற்கு போதித்து வந்துள்ளேன். வாசிப்பு அவர்களது வாழ்க்கைக்கு உதவும் என்பதை அறிவுறுத்தி யுள்ளேன்."

- அசோகமித்திரன்

தமிழ்ச்சூழலில் முழுநேர எழுத்தாளனாக வாழ்வதன் சாத்தியங்களையும் சாத்தியமின்மைகளையும் ஒருசேரத் தெரிந்துகொள்ள வேண்டுமெனில் அசோக மித்திரனிடமிருந்தே தொடங்கவேண்டும். நவீன இலக்கியத்தில் புதுமைப்பித்தனிலிருந்து தொடங்கி முழுநேர எழுத்தாளராக வாழ முயன்று முழுமையாக நிறைவேறாதுபோன குறிப்பிட்ட சில எழுத்தாளர் களிடையே அசோகமித்திரன் தன் எழுத்துத்திறனாலும் குணாம்சங்களினாலும் வெற்றிகரமாக அதனைக் கடந்தவர் என்று அறுதியிட்டுச் சொல்லமுடியும். தீவிரமாகப் படைப்புலகில் இயங்கிய காலங்களில் அவருக்குப் போதிய உணவு, வருமானம் கிடைக்க வில்லை, வசதி வாய்ப்பும் மதிப்பு அந்தஸ்துகளும் கிட்டவில்லை போன்ற புகார்களையெல்லாம் தனது எளிய புன்னகையால் புறந்தள்ளிவிட்டு வாழ்நாளெல்லாம் எழுத்துலகோடு தன்னைப் பிணைத்துக்கொண்டிருந்த அவரது படைப்புச் சாதனைகளை காலகாலத்துக்கும் வாசித்துக் கொண்டாடப்படுவதொன்றே அவருக்கு தமிழ்ச்சமூகம் செலுத்தும் மதிப்பாய்ந்த அஞ்சலியாக அமையும்.

எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து தான் கண்ட மனிதர்களின் வாழ்வனுபவங்களிலிருந்து மட்டுமே அவர் எழுதிக்கொண்டிருந்தார். அம்மனிதர்களுக்கான வாழ்க்கைச் சாத்தியங்களை வேறுவேறு விதங்களில் எழுதிப் பார்த்ததாக அவர் குறிப்பிடுகிறார். அதனா லேயே அவரது படைப்புலகில் வெவ்வேறு பண்பு களைக் கொண்ட வித்தியாசமான மனிதர்களைக் காண முடிகிறது. அவருக்கு நன்கு பரிச்சயப்பட்ட நகரவாழ்வை அதன் சகல கூறுகளையும் அவரளவுக்கு தமிழில் எழுதிய தாக பிறிதொருவரைச் சொல்லவியலாது என்ற நிலை இன்றும் இருப்பதிலிருந்தே அவரது தனித்த எழுத்தாளு மையை உணர்ந்துகொள்ளமுடியும்.

அவரது அநேகப் படைப்புகளில் பெருநகரங்களில் வசிக்கும் மத்தியதரவர்க்க வாழ்க்கையின் ஊடாக சமூகத்தின் மனசாட்சி பதிவுகளாகியுள்ளதைக் காணலாம். இலக்கியப் படைப்புகளில் பெரிதும் கவனப்படுத்தப் பட்டிராத திரைத்துறையைப் பற்றியும் அதில் ஈடுபட்டுள்ள துணைநடிகர்கள் மற்றும் அடிமட்டத் தொழிலாளர்களின் நடைமுறை வாழ்க்கையையும் திரைத்துறைக்கேயான ஏற்ற இறக்கங்களையும் அச்சுஅசலாகப் பேசும் 'கரைந்த நிழல்கள்' நாவல் அவரது தனித்தமுறையிலான கதைசொல்லலின் வீரியத்தை வெளிக்காட்டிய படைப்பு.

புறக்கணிப்பு அவமதிப்பு அவலங்களை எதிர் கொள்ளவியலா இயலாமையை சகித்துக்கொண்டு விரக்தியான நகைப்போடு நாளும்நாளும் கடந்து சென்று கொண்டிருக்கும் மனிதர்களே அவரது படைப்பு களெங்கும் உலவுகிறார்கள். ஒரு வகையில் அவ் வாழ்க்கை அவர்கள் உடன்படுகிறார்கள். லட்சோப லட்சம் மக்கள் தங்கள் அன்றாடக் கவலை மறந்து வாழ நிர்ப்பந்திக்கும் வாழ்க்கைச்சூழலின் பிரதிபிம்பம்தான், இயலாமையின் உச்சத்தை மெல்லிய பகடியோடு கடந்துவிடும் அவரது எழுத்துகள் என்பதை நகரத்தில் வசிக்கும் வாசகர்கள் உணர வாய்ப்புண்டு.

சென்னையின் சந்தடிமிக்க தெருக்களில் நெருக்கடியான வீடுகளில் குடியிருப்பவர்களின் பிரச்சினைகள் (கீழ் வீட்டில் குளித்துவிட்டு உடை மாற்றுவதை எதிர் மாடியிலிருந்து வேடிக்கை பார்ப்பவர்), கடும்பசியில் சாப்பாட்டுக்காக மதியவெயிலில் மைல்கணக்கில் சைக்கிள் மிதித்து மேம்பாலம் ஏறமுடியாமல் மூச்சிரைக்கச் சென்றும் உணவின்றி ஏமாந்து திரும்புபவர், நெரிசலான போக்குவரத்துக்கிடையில் சுயகௌரவத்தோடு சீப்பு விற்கும் ஏழைப்பெண், நடுஇரவில் ஓசையெழாமல் பிள்ளைகள் ஒவ்வொன்றாய்த் தாண்டி தவ்வித்தவ்வி சென்று கணவனுடன் மௌனமாக உறவுகொள்ளும் பெண் என ஏராளமான உதாரணங்கள். நமக்கு நன்கு அறிமுகமான மனிதர்களே அவரது கதைமாந்தர்கள் என்பதால் மிகவும் அணுக்கமானவர்களாக மாறி விடுகிறார்கள்.

'அசோகமித்திரனின் கதைகள் அதிர்ந்து பேசாதவை' என்று சுந்தரராமசாமி கூறியுள்ளதுபோல அவரது கதைகள் மனிதர்களின் இருப்பை சன்னமான குரலிலேயே பதிவு செய்கின்றன. ஆனால் அதன் ஊடுருவலின் வீச்சு ஆழமானது. அவர் உலவவிட்ட மனிதர்களை வாசகன் அத்தனை எளிதில் விலக்கிவிட்டு நகர்ந்துவிடமுடிவ தில்லை. கடக்கமுடியாத பல வரிகளை உள்ளடக்கி யவையே அவரது பெரும்பாலான படைப்புகள்.

உலகத்தரத்திலாகக் குறிப்பிடத்தக்க அவரது கதைகளிலொன்று 'புலிக்கலைஞன்'. டகர்பைட் காதர் புலிவேஷம் போட்டு நடிக்க வாய்ப்பு கேட்டு வரும்போது அவன் புலியாகவே மாறி உக்கிரமாக நடிப்பதை எழுதுமிடத்து ஒருவகையில் அசோக மித்திரனின் கலைத்திறன் மீதான பற்றாவேசமாகவும் அதனைப் புரிந்துகொள்ளலாம். தான் கற்றறிந்த கலையில் பித்துக் கொண்டிருக்கும் ஒருவனின் கலை தாகத்தையே அக்கதை வெளிப்படுத்துகிறது. ஆற்றுப் படுத்தவியலாத இந்தக் கலைப்பற்றே அசோகமித்திரனை கடுமையான வாழ்வியல் நெருக்கடிகளுக்கிடையிலும் முழுநேர எழுத்தாளராக வாழ வகைசெய்ததாகவும் கொள்ளலாம்.

எப்பேர்ப்பட்ட கலைஞனாக இருந்தாலும் பெருநகர வாழ்க்கையில் நிரந்தரமான வீடற்று அங்கு மிங்குமாய் மாறிமாறிக் குடியேற வேண்டிய சூழல் நெருக்கடியால் அவனுக்குக் கிடைக்கவேண்டிய வாய்ப்புகள் கிட்டாது போவதையும், அதனால் அவன் அனுபவிக்க நேரும் இன்னல்களையும் பாடுகளையும் சேர்த்தே இக்கதையைப் புரிந்துகொள்ளவேண்டும். பெருநகர பிரமாண்டங்களுக்கு முன்னால் அசல் கலைஞனாக இருப்பவன் எளிதில் அடையாளம் பெறவியலாத யதார்த்தம் இழையோடும் கதை. சென்னைபோன்ற பெருநகரங்களில் தன் கலைத்திறனை மட்டுமே ஆதாரமாகக்கொண்டு வாழ முற்படும் ஒவ்வொரு கலைஞனுமே புலிக்கலைஞன்தான் என்ற



நிதர்சனத்தையும் உணர்த்தும் இக்கதை அசோக மித்திரனின் உச்சபட்ச படைப்புகளில் ஒன்று.

60 களிலிருந்த சென்னையை அறிந்துகொள்ள ஆர்வ முள்ளவர்கள் அசோகமித்திரனை வாசிக்க வேண்டும். சென்னை நகரத்தின் பெரும்பாலான தெருக்களுக்கும் நடந்தே சென்றதாகக் கூறும் அசோகமித்திரன், அந்தக் காலத்து வாகனங்கள், கார்கள், சாலைகள், தெருக்கள், சந்துகள், வீடுகள், மனிதர்கள் எனப் பல சித்திரங்களை தனது படைப்புகளில் வரைந்திருக்கிறார். சென்னையில் எந்தப் பகுதிக்கு எந்தப் பேருந்தில் செல்லவேண்டு மென்பதைத் தெரிந்துகொள்ள அசோகமித்திரனைப் படித்தால் போதும் என்று அவரைப் பற்றிய ஒரு கேலியும் இலக்கிய உலகில் உண்டு. சென்னைப் பேருந்துகளில் அதிகமாகப் பயணம் செய்து பழகிய அவர் பேருந்துப் பிரயாணங்களைப் பற்றி நிறைய எழுதியிருப்பதே அக்கேலிக்குக் காரணம். நடுத்தர மக்களின் வாழ்வு அவலங்களை சிறுமைப்படுத்தி எழுதிய மேல்தட்டு பிராமண எழுத்தாளர் என்றும், திராவிட இயக்க ஒவ்வாமையுடையவர் என்றும் அவர்மீது மேலோட்டமான சில குற்றச்சாட்டுகள் உண்டு. தான் நேரில் கண்ட

மக்களின் வாழ்க்கையை எழுதியதன் வாயிலாக அவ் வாழ்க்கையில் உள்ள சிடுக்குகளை தமிழிலக்கியத்தில் அடையாளப்படுத்தியவர் என்றளவில் அவரைப் புரிந்துகொள்வதே உத்தமம்.

இறப்பதற்கு சிலநாட்கள் முன்னதாக **3-3-2017** அன்று 'தடம்' இதழுக்கு அவர் அளித்த பேட்டியிலிருந்து எழுத்து, வாழ்வு குறித்தம் அவரது அபிப்ராயங்களைப் புரிந்துகொள்ளலாம்.

> 'சில பேர் சொல்றாங்க, 'இது சவால், அது சவால்'ன்னு எழுதறதுல சவால்ன்னு என்ன இருக்கு? வாழ்க்கையை நடத்துறதுதான் சவால். வாழ்க்கையில் எதிர்ப்படும் சின்னச்சின்ன விஷயங்கள்தான் சவால்.'

வாழ்வென்பதே பெரும் சவால் என்பதை வாழ்வனுபவமாகவும் உணர்ந்த எழுத்தாளர் எழுதிய கதை மாந்தர்களில் பெரும்பகுதியினர் இன்னல்களையும் சவால்களையும் எதிர்கொண்டவர்களே. சவாலை சமாளிக்க இயலாமல் துன்பப்படுபவர்களே. வாழ்வின் கொடூரமான அத்தனை தாக்கங்களையும் ஏற்றுக் கொண்டவர்களே என்பதையே திரும்பத்திரும்ப அவரது படைப்புகள் சொல்கின்றன.


பல மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு இந்திய அளவில் அவரது படைப்புகள் கவனம் பெற்றிருக்கின்றன. ஆங்கிலத்தில் அவர் எழுதிய பத்து நூல்கள் வெளிவந்துள்ளன. இந்தியன் எக்ஸ்பிரஸ், ஹிண்டு, டைம்ஸ் ஆப் இந்தியா, இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி, ஸ்டேட்ஸ்மென் உள்ளிட்ட பத்திரிகைகளில் ஏராளமான ஆங்கிலக் கட்டுரைகளை எழுதியுள்ளார். சிறுகதை. குறுநாவல், புதினம், கட்டுரை என ஏராளமாக எழுதிக் குவித்த அவர் சாகித்ய அகாடெமி உள்ளிட்ட பல்வேறு விருதுகளால் கௌரவிக்கப்பட்டவர் என்றாலும் அவரது இணையற்ற எழுத்தாளுமைக்கு ஈடான அளவில் அவர் கௌரவிக்கப்படவில்லை என்பதே நிதர்சனம்.

சரியெனப் பட்டதை நேரிடையாகச் சொல்லும் திறந்த மனமும், திறமையானவர்களைக் கண்டு ஊக்கமளிக்கும் குணமும், எந்த சந்தர்ப்பத்திலும் மற்றவர்களை குறைகூறாத பண்பும், தன்னை முன்னிலைப்படுத்த முனையாத எளிமையுமான அசோகமித்திரன் பொதுவான இலக்கியவாதிகளுக்கு வாய்க்காத அபூர்வ குணாதிசயங்களைக் கொண்டவர்.


இறப்புக்குப் பின்னால் ஒரு எழுத்தாளரை அதீதமாகப் போற்றுவதையும் தூற்றுவதையும் விடுத்து அவரது படைப்புகள் மறுவாசிப்பு செய்யப்படுவதும் நேர்மையோடு அவை விமர்சனத்துக்கு உட்படுத்தப்படுவதும் அடுத்த தலைமுறையினருக்கு அவற்றைத் தரப்படுத்துவதுமே தேர்ந்த வாசகனின் காரியமாக இருக்க வேண்டும். ●





# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்





விலை ரூ. 80/-





விலை ரூ. 100/-





விலை ரூ.80/-




விலை ரூ. 99/-




விலை ரூ. 225/-




விலை ரூ.80/-

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.com

**கிளைகள்**

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-2323990; மதுரை: 0452-2344106, 2350271; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.



# நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் என் அறிவுப் பசியைத் தீர்த்தது

## திருச்சி சிவா

*26/03/2017 அன்று திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கத்தில் பேராசிரியர் கி.நடராஜன் அவர்களின் 'இந்தியர்களின் ஆங்கிலச் சிறுகதைகள்', 'வள்ளுவரும் ஷேக்ஸ்பியரும்', 'காலத்தை வென்ற காதற் கவிதைகள்' ஆகிய மூன்று நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் தலைவர் ஆர்.நல்லகண்ணு தலைமையேற்ற இந்த நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா சிறப்புரையாற்றினார்.*

**ஆர். நல்லகண்ணு உரை:**

கி.நடராஜன் அவர்கள் இதுவரை 23 நூல்கள் வெளியிட்டிருக்கிறார். அவரது நூல்கள் தமிழ் நாட்டு கல்லூரிகளில் பாட நூல்களாக அங்கீகரிக்கப் பட்டு உள்ளன. இப்போது மூன்று நூல்கள் வெளியிட்டுள்ளார். அவருக்கு வயது 70.

இங்கே பேசிய பேராசிரியர்கள் காதல் கவிதைகளைப் பற்றிச் சொன்னார்கள். காதலுக்கும் வயதுக்கும் சம்பந்தமில்லை. காதலிக்கக் கூடியவர்கள் ஒரு ஆணும் பெண்ணும் காதலிக்கும்போது காதலை விட பெரிய அன்பு வேறு இல்லை என்பதை நினைவு படுத்தக்கூடிய வகையில் காலத்தை வென்ற காதல் கவிதைகள் நூலை வெளியிட்டுள்ளார்.

இவ்விழாவுக்கு யார்யாரெல்லாம் வருகிறார்கள் என்று அவரிடம் கேட்டேன். என்னிடம் படித்த மாணவர் ஒருவருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தேன். அவர் மாநிலங்களவையில் சிறந்த உறுப்பினராக விளங்குகிறார். ரொம்பப் பெருமையாக இருக்கிறது என்று இவரிடம் படித்த மாணவர் சிறப்பானவராக திகழ்வதைப் பற்றிப் பெருமையாகப் பேசினார் நடராஜன் அவர்கள்.

அவரும் என்.சி.பி.எச்சும் இணைந்து இவ் விழாவை நடத்துகிறோம். நாங்களே இவ்விழாவை நடத்துகிறோம் என்று சொன்னபோது பேராசிரியர் எனக்கு சில கடமை இருக்கிறது. அதனால் அவரே இவ்விழாவை நடத்துவதாகச் சொல்லி விட்டார். 1995லிருந்து அவரது அனைத்து நூல்களையும் என்.சி.பி.எச். மூலமாகத்தான் வெளியிட்டு இருக்கிறார். 22 வருடங்களாக என்.சி.பி.எச்.

பதிப்பித்திருக்கிறது. அவை பாடநூல்களாக இருக்கின்றன, அந்தப் பெருமைக்காக நான்தான் விழாவை நடத்துவேன் என்று பிடிவாதமாக அவர் பொறுப்பில் இங்கே நடத்துகிறார்.

வாசிப்புப் பழக்கத்தை அதிகப்படுத்த வேண்டும். விடுதலைப்போராட்டத்திலும் அதற்குப் பின்னாலும் சமுதாய மாற்றத்திற்கான கருத்துகளை பகுத்தறிவு இயக்கங்கள், சுயமரியாதை இயக்கங்கள், சமத்துவ இயக்கங்கள், இவையெல்லாம் வெளியே கொண்டு வர வேண்டும் என்றஅடிப்படையில் பாரதி பாரதி தாசன் நூல்களை வெளியிட்டோம். இந்த நூல் களை ஊர்திகளில் வைத்து திருவிழாக் காலங்களில் ஊர்ஊராக எடுத்துச்செல்லவேண்டும் என்ற வகையில் இரண்டு விற்பனை பேருந்துகளை உருவாக்கி னோம். கடந்த 51ம் வருடத்திலிருந்து கிட்டத்தட்ட 70 ஆண்டுகள் தொடர்ந்து நூல்களை வெளியிட்டு வருகிறோம்.

பாரதி பாரதிதாசன் மட்டுமல்ல சங்க இலக்கியங் களைத் தொகுத்து வழங்கினோம். மேலும் சிங்கார வேலர் சிந்தனைக்களஞ்சியம் தொகுப்பாக வெளி யிட்டோம். அதேபோல ஜீவானந்தம் நூல்களை ஐந்து தொகுப்பாக வெளியிட்டோம்.

இந்திய வரலாற்றைப் பற்றி பேராசிரியர் பகுத்தறிவு சிந்தனையாளர் ரொமிலா தாப்பர் அவர்கள் இந்தியாவை எப்படிப் பார்க்கவேண்டும் என்றும் இன்றைய இந்தியா முற்கால இந்தியா என்பவற்றை வரலாற்றுப்பிழை இல்லாமல் திரிக்கப் படாத உண்மையான விவரங்களை எல்லாம் இந்த ஆண்டு ஒரு தொகுப்பு நூலாக வெளியிட்டுள் ளோம். அதேபோல ராகுல சாங்கிருத்யாயன் நூல்கள், இப்படிப் பலநூல்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் பாரம்பரியம், தந்தை பெரியாருக்கு ஒரு பெரிய பாரம்பரியம் இருக்கிறது. பகுத்தறிவு இயக்கங்களுக்கு முன்னாலேயே 1910ம் வருடத்தி லேயே இந்திய லௌகீக சங்கம் என்று பகுத்தறிவு இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அறிவியல் வாயிலாக வாழ்க்கையை எப்படிப் பார்க்க வேண்டும் என்ற நூல்களெல்லாம் இந்தியாவில் வடமாநிலங்களைவிட தமிழகத்தில் வெளியிடப் பட்டிருக்கிறது. கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் அரசு அவர்கள் தொகுத்து நூலை வெளியிட்டிருக் கிறோம். அது தமிழகத்தின் வரலாறு, பெரியா ரோடு சேர்த்து பெரியாருக்கு முந்தின காலத்தி லிருந்து இன்று வரை மூடப்பழக்கங்களை யெல்லாம் எதிர்த்து முற்போக்கு சிந்தனையுடன் ஜாதி மத வேற்றுமை இருக்கக்கூடாது, மனிதன் மனிதனாக வாழ வேண்டும். பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்ற திருவள்ளுவரின் திருக் குறளையும் வரலாறாக தத்துவமாக உள்ள மற்ற நூல்களையெல்லாம் தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

அம்பேத்கர் நூல்கள் 38 பகுதிகளாக தமிழ்ப் படுத்தியுள்ளோம். இப்போது பெரியார் எழுதிய நூல்களை வெளியிடவுள்ளோம். அதுவும் பெரியார் எழுதிய எழுத்துகளை இலக்கியம், மொழி, பகுத்தறிவு, ஜாதி என்பது எப்படி, வருணாச்சிரமம் என்பது என்ன என முக்கியமான கட்டுரைகளை தொகுத்து அளித்து வெளியிட உள்ளோம்.

**திருச்சி சிவா எம்.பி. உரை:**

எங்களுக்குப் பாடம் சொல்லித் தந்த பேரா சிரியரின் நூலை வெளியிடுகிறோம் எனும் போது எங்கள் உருவாக்கம் சோடை போகவில்லை என்பதன் அடையாளம்தான் இந்த நிகழ்ச்சி என்று நினைக்கிறேன்.

ஒரு ஆசிரியர் எத்தனையோ மாணவர்களுக்கு பாடம் சொல்லித் தந்தாலும், எதிர்காலத்தில் உயர்ந்த நிலையிலிருக்கிற ஒரு மாணவரைப் பார்த்து என்னுடைய தயாரிப்பு என்று சொல்கிற பெருமிதம் ஆசிரியர்களைத் தவிர வேறு யாருக்கு மில்லை.

நடராஜன் எங்கள் மதிப்புக்குரியவர். அன்பிற்கும் பெருமைக்கும் உரியவர். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். இந்தப் புத்தகங்களை வெளியிட்டதற்காக மட்டுமல்ல, தமிழ்நாட்டில் ஒரு மிகச் சிறந்த பணியினை நீங்கள் மேற்கொண்டு வருவதற்காக ஒரு காலத்தில் கல்லூரியில் படித்த நாட்களில் விரும்பிய நூல்கள் கிடைப்பது அரிது, அதனால் தான் சொல்கிறேன்.

பெரியார் கல்லூரியில் இவர் பேராசிரியராக பணிபுரிந்தபோது நாங்கள் மாணவர்களாக இருந் தோம். அற்புதமான மழையாக கொட்டும் அவரது ஆங்கிலம். கருத்துச் செறிவோடு பாடம் நடத்து வார். நட்புணர்வோடு நடந்து கொள்வார். அதனால் இவரது வகுப்பு எப்போது வரும் என்று காத்திருப் போம்.

நாங்கள் படித்த பின்னர்தான் இந்தியர்கள் எழுதிய ஆங்கில சிறுகதை பாடமாக வந்தது. நாங்கள் படித்ததெல்லாம் 17, 18, 19, 20 ஆம் நூற்றாண்டு ஆங்கில இலக்கியங்கள். அவரது பாட வகுப்பு முடிந்தால் சினிமா தியேட்டரை விட்டு வெளியே வருவதுபோல ஒரு உணர்வு வரும். பாடம் நடத்தி வகுப்பை விட்டு வெளியே வரும் போது அவரும் எங்களுடன் சேர்ந்து கொள்வார். டீக்கடைக்கு வருவார். சினிமாவுக்கு சேர்ந்து போவோம். காலம் மாறியது. பாதைகள் மாறின. ஆனாலும் நெஞ்சத்தில் நினைவுகள் தங்கிவிட்டன. இதையெல்லாம் நினைவுகூர்வதற்காகவே இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன்.

இந்தப் புத்தகத்தில் முல்க்ராஜ் ஆனந்த், பிரேம் சந்த் போன்ற முற்போக்கு எழுத்தாளர்கள் எழுதிய கதைகள் இருக்கின்றன. இதையெல்லாம் நீங்கள் படிக்க வேண்டும். கதைகளைப் படித்து முடிக்கிற போது சுரீர் என்று முடிவில் ஒரு சீர்திருத்தக் கருத்து வெளிப்படும்.

நான் ஒருமுறை லண்டன் சென்ற போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் கலந்து கொண்ட ஒரு நிகழ்வில் இணைந்திருந்தேன். அப்போது ஷேக்ஸ்பியர் பிறந்த ஊருக்குச் சென்றேன். அந்த மண்ணில் சிலிர்ப்பை உணர்ந்தேன். அவர் வாழ்ந்த வீடு, நாடக அரங்கு அவற்றைச் செப்பனிட்டு பராமரிக்கிறார்கள். அதைப் பார்த்து பரவசப் பட்டேன். அந்த உணர்வை இந்த நூல்களில் பேராசிரியர் தந்துள்ளார். இந்த நூல்களை நீங்கள் வாங்க வேண்டும், வாங்கிச் சென்று அலமாரியில் வைக்காமல் படிக்க வேண்டும். படிக்கப் படிக்கத்தான் அறிவு பெருகும். என்ன தான் இணையதளம், கணிப்பொறி இருந்தாலும் ஏராளமான நூல்கள் கொட்டிக் கிடந்தாலும் இந்த நூலை எடுத்து ஒரு பக்கத்தைப் படித்து விட்டு மடித்து வைக்கிற சுகம், ஒரு ஓரத்தில் கோடு போடுகிற போது கிடைக்கிற பரவசம் வேறு எங்குமே கிடைக்காது.

இந்த இனிமையான இலக்கியக் கூட்டத்தைச் சிறப்பாக நடத்தியதற்கு நன்றி. இனிவரும் நாட்களில் நடக்கிற கூட்டங்களுக்கு இந்தச் சாலையை மறைக்கும் அளவிற்குக் கூட்டம் வர வேண்டும். அப்போதுதான் எழுத்தாளர்களுக்கு மரியாதை இருக்கிறது என்று அர்த்தம். படிக்கிற ஆர்வம் குறைவது, கூட்டம் கேட்கிற ஆர்வம் குறைவது, இதுவெல்லாம் நல்ல அறிகுறி அல்ல. உங்கள் வீட்டு பிள்ளைகளுக்குப் புத்தகம் படிக்கப் பழக்குங்கள். சின்னச்சின்னப் புத்தகங்களை வாங்கிக் கொடுங்கள். நியூ செஞ்சுரி புக் ஹவுஸில் நிறைய சிறிய சிறிய புத்தகங்கள் இருக்கின்றன. நான் அவர்களுக்காகவே பேசுகிறேன். காரணம் ஒரு காலத்திலே என் அறிவுப் பசியை, படிப்பு தாகத்தைத் தீர்த்தது நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்தான். சிங்காரத் தோப்பிலே மெட்ரோ ஹோட்டலும், ராயல் ஹோட்டலும் மட்டுமா இருந்தது. நியூ செஞ்சுரி புக் ஹவுசும் இருந்தது. அந்த அடிப்படையில் தான் சொல்கிறேன். பிள்ளைகளுக்குச் சின்னச் சின்னப் படக்கதைகளை வாங்கித் தாருங்கள். பீர்பால் கதை, மரியாதை ராமன் கதைகளிலிருந்து ஆரம்பியுங்கள். ஒன்றும் தவறில்லை. நல்ல புத்தகங்களைப் படிக்க பழக்கப்பட்ட பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்ல குடிமகனாக வருவார்கள்.

எங்களுக்குப் பாடம் நடத்திய பேராசிரியர் அந்தப் பாடங்களையெல்லாம் புத்தகமாக வெளியிட்டுள்ளார். அவருக்கு எங்கள் வணக்கம். அதனை வெளியிட்ட நியூ செஞ்சுரி புக் ஹவுசுக்கும் நன்றி. ●

# வாசகர் குரல்

நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம் இதழ் இடதுசாரி முற்போக்கு எழுத்தாளர்களது எழுத்தோவியங்களைத் தாங்கி புதுப்பொலிவுடன் வெளிவந்து கொண்டிருப்பது பாராட்டிற்குரியது. மார்க்சிசம் - லெனினிசம் குறித்த யதார்த்தமான விளக்கத்தோடு இந்தியப் புரட்சியாளர்கள் புரட்சிகர சித்தாந்தமான மார்க்சியத்தை ஏற்று சோஷலிச இலட்சியத்திற்காகப் பாடுபட உறுதி ஏற்றனர் என்று தோழர் ஏ.பி.பரதன் கடந்த காலத்தில் எழுதியிருந்த ‘‘இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 80 ஆண்டு’’ நூல் தொகுப்பிலிருந்து கட்டுரை மார்ச் மாத இதழில் இடம் பெற்றிருப்பது சிறப்பு அம்சம்!


பேராசிரியர் தோழர் நா.வானமாமலையின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அவரைக் குறித்த கட்டுரைகளும் தகவல்களும் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழில் இடம் பெறுவது வரவேற்கத்தக்கது. நா.வானமாமலை மணிவிழா மலரில் கடந்த காலத்தில் தோழர் ப.மாணிக்கம் எழுதியிருந்த நா.வா.பணியும் பண்பும் கட்டுரையும், தோழர் தி.க.சி., நா.வா. உடனான நேர்காணலின்போது ‘‘லாபக்கணக்குப் பார்க்காமல் தமிழ்த் தொண்டை முதன்மையாகக் கருதி நூல் வெளியிட்டவர்கள்’’ என நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் குறித்த நா.வா.வின் கணிப்பு சரியான முறையில் அமைந்துள்ளது.

**நெல்லை ச.இசக்கிப்பாண்டியன்**
ஆழ்வார் குறிச்சி

போலந்தில் பிறந்து மார்க்சியத்தை தூக்கிப் பிடித்து சோசலிசத்தை மலரச் செய்ய தன் உயிரையும் பொருட்படுத்தாத உலகின் முதல் கம்யூனிஸ்ட் போராளி ரோசா லுக்ஸம்பர்க். அவரைப் பற்றி தோழர் இசக்கிப்பாண்டியன் வடித்த குறுங்காவியத்தை படித்தேன். அவரின் சிந்தனை, செல்பாடுகள், வீரம், மற்றும் காதல் ஆகியவற்றை எளிய நடையில் விளக்கியிருந்தார். ஒரே நேரத்தில் ஒரு கவிதை, வரலாறு, தத்துவம், பெண்ணியம் ஆகியவற்றை படித்தது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

**ஊரப்பாக்கம் மணிகண்டன்**

# நியூ செஞ்சுரி புக்ஹவுஸின் அனைத்து விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்




விலை: ₹ 160/-

**நா.வானமாமலையின் மாணவர்கள் நடத்தும்**
**தமிழின் மிகச் சிறந்த ஆய்விதழ் 'புதிய ஆராய்ச்சி.'**

நொபொரு கராஷிமாவின் முதலாமாண்டு நினைவையொட்டிய
சிறப்புப் பகுதியுடன்,

**எ.சுப்பராயலு, ஜெயசீல ஸ்டீபன், ந.முத்துமோகன்,**
**பக்தவத்சல பாரதி, அ.கா.பெருமாள்,**
**ந.அதியமான், ச.பிலவேந்திரன், கி.இரா.சங்கரன்,**
**ந.கோவிந்தராஜன், அ.பாஸ்கரன், க.காமராசன்**

ஆகியோரின் பங்களிப்புடன்

**புதிய ஆராய்ச்சி – இதழ் 6**

(ஜூலை - டிசம்பர் 2016)

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.com

**என்.சி.பி.எச். கிளைகள்**

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-2323990; மதுரை: 0452-2344106, 2350271; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.

# ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை முழக்கம்

உதயை மு.வீரையன்

**க**விதையும், காவியமும் ஒரு காலத்தின் வரலாறாகும். கவிதை எழுதுவதும், காவியம் புனைவதும் காலம் அவனுக்குத் தந்த கடமை யாகும். அவையே அக்கால மொழியின் சிறப்பாகவும், அந்த இனத்தின் அடையாளமாகவும் திகழ்கின்றன.

அவற்றை இழந்துவிட அரசும் ஒப்புவதில்லை; அந்த மக்களும் அனுமதிப்பதில்லை. எல்லா நாடுகளிலும் இதுதான் உண்மை. இதற்காக நடந்த போர்களும் ஏராளம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலம் முதன்மையானது. அடுத்து சங்கம் மருவிய காலம், இடைக்காலம், பிற்காலம் என்றும் அழைக்கப் படுகின்றன. பிற்கால இலக்கிய வரலாறு பாரதியில் தொடங்குகிறது.

பாரதிதாசனுக்கென ஒரு பரம்பரையே உருவானது. அவரையே முன்மாதிரியாகக் கொண்டு ஒரு பாட்டுப் பட்டாளம் படையெடுத்தது. அவர் களுள் கவிஞர் தமிழ்ஒளி முதலில் வைத்து எண்ணத் தக்கவர் ஆவார்.

தமிழ் ஒளியின் படைப்புகளில் கவிதை, காவியம், சிறுகதை, கட்டுரை, நாடகம், திறனாய்வு எனப் பலவகைப்படும். தமிழ் ஒளி பன்முகம் கொண்டவர் என்பதை அவர் படைப்புகள் கூறாமல் கூறுகின்றன.

அவர் ஒன்பது காவியங்கள் இயற்றியுள்ளார். கவிஞரின் காதல், நிலைபெற்ற சிலை, வீராயி, மேதின ரோஜா, விதியோ, வீணையோ? மாதவி காவியம், கண்ணப்பன் கிளிகள், புத்தர் பிறந்தார், கோசலைக் குமரி ஆகியவையே அவை.

இவற்றில் 'புத்தர் பிறந்தார்' என்பது மட்டும் முழுமை பெறாமல் அரைகுறையாக நின்று விட்டது, இதுபற்றி டாக்டர் மு. வரதராசனார் கூறும்போது, "புத்தர் பிறந்தார் என்ற அருமை யான காவியம் முடிக்கப்படாமலேயே குறையாக நின்றுவிட்டது. தமிழ் இலக்கியத்தின் குறை யாகவே ஆகிவிட்டது" என்று குறிப்பிட்டுள்ளார்.

'வீராயி' என்னும் காவியம் முதல் 'தலித்' படைப்பு என்று திறனாய்வாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது 1947இல் வெளிவந்த இவரது மூன்றாவது காவியமாகும்.

"இந்நூலின் முதற்பதிப்பு 1947இல் தமிழர் பதிப்பகம் வாயிலாக தோழர் மா.சு. சம்பந்தன் வெளியிட்டார். அவரிடம் முறைப்படி பதிப்புரிமை பெற்று 2003இல் நான் வெளியிட்ட 'தமிழ்ஒளி காவியங்கள்' முதல் தொகுதியில் 'வீராயி' சேர்க்கப் பட்டது. இப்போது தோழர்களின் வேண்டு கோளை ஏற்று தனிநூலாக வெளியிடப்படுகிறது" என்று பதிப்பாளர் செ.து. சஞ்சீவி தமது பதிப் புரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் காவியத்துக்கு கவிஞர் தமிழ்ஒளி ஓர் அருமையான முன்னுரை எழுதியுள்ளார். எழுத்தாளர் களும், கவிஞர்களும் சமுதாய சிந்தனையோடு செயல்பட வேண்டும் என்பதைக் கொள்கை வழியோடு கூறுகிறார்.

"நம் கண் எதிரே நம் உடன்பிறந்தான் மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்து போகிறான். அவன் குடும்பம் வறுமைப்படுகுழியில் வீழ்ந்து கதறுகிறது. இதைக் கண்டு மனமிரங்காமல் மரத்துப்போன நெஞ்சுடன் உலாவும் மானிடப் பிண்டங்களின் உடலில் 'சுரீர் சுரீர்' என்று தைக்கும்படி எழுதுவது தான் உண்மை எழுத்தாளனின் கடமையும் நோக்கமும் ஆகும்" என்று அவர் கூறுகிறார்.

உண்மையான எழுத்தாளர் எப்படியிருக்க வேண்டும் என்று உபதேசம் செய்கிறவர் எப்படிப் பட்ட எழுத்துக்குச் சொந்தக்காரராக இருப்பார் என்று எதிர்பார்ப்பது இயல்பு. 'வீராயி' அதற்கு ஓர் எடுத்துக்காட்டான படைப்புதான் என்பதை படித்து முடித்ததும் தெரிந்துகொள்கிறோம்.

“தீண்டாமையும், வறுமையும் விளைந்த கொடுமையான சூழ்நிலையில் உள்ள வீராயி என்ற ஏழைப் பெண்ணின் சோகக் கதையை இந்நூல் சித்தரிக்கிறது. பாரதியும், பாரதிதாசனும் கையாண்டு நிலைநிறுத்திய எளிமையும், விறு விறுப்பும் கலந்தது என்பது அ. சீனிவாசராகவன் (முன்னாள் முதல்வர், வ.உ. சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி) ‘சிந்தனை’ ஏட்டில் எழுதிய விமர்சனம் ஆகும்.

ஐப்பசி மாத அடைமழை வெள்ளத்தில் மருதூர் சேரியே அழிந்தது. அதில் வீராயியும், அவள் தந்தையும் வெள்ளத்தில் மிதந்து வந்த வைக்கோற்போரில் அமர்ந்து தப்பிப் பிழைத்தனர். எனினும் தந்தை இறந்து போகிறார்.

“மருதூரின் சேரியினர் மண்ணோடு மண்ணாய்
மறைந்தனராம் தமிழரசு மறைந்ததனைப் போன்று!
பெருநாடே நீ அவர்க்குத் தந்தபரி சிதுவோ?
பிறர்வாழ உயிரு தவுந் தமிழ்நாடு நீயோ?”

என்று அதற்காகக் கவிஞர் வருந்துகிறார்.

புதுப்பட்டினத்தைச் சேர்ந்த வீரண்ணன் வீராயியைக் காப்பாற்றி வீட்டுக்கு அழைத்துப் போகிறான். அவனும், அவன் தந்தை மாரியும் அவளைக் குடும்பத்தில் ஒருத்தியாகச் சேர்த்துக் கொள்கின்றனர். வீரண்ணன் அவளைத் தங்கை யாகவே எண்ணி அன்பைப் பொழிகிறான்.

“வீராயி நீ சிறிதும் கவலையுற வேண்டாம்
வேறில்லை நாங்களெலாம் உன்சொந்தக் காரர்
யாராரோ செய்திட்ட புண்ணியம்டி அம்மா
உன்தந்தை இறந்திட்டார் நீ தப்பி விட்டாய்!”

என்று மாரிக்கிழவன் கூறுகிறான். ‘நீ எனக்கு மகள் தான், என் ஆதரவில் வாழ்வாய்!’ என்று ஆறுதல் கூறுகிறான்.

அந்தக் குடும்பத்தில் தங்கி அவ்வூர் பண்ணை யார் வயலில் நடவு வேலை செய்து வந்தாள். அவளது அழகில் மயங்கிய பண்ணையார் ஒரு நாள் பாலியல் வன்முறைக்கு முயல்கிறான்.

“பருந்தொன்று கோழியிளங் குஞ்சு தன்னை
பாய்ந்தடித்துக் கவ்வுதல்போல் அவளைப் பற்றி
ஒருகணத்தில் அறைக்குள்ளே இழுத்துச் சென்றான்!
ஓடியுமே இமைப்பினிலே தாழை யிட்டான்!”


அப்போது அவளைத் தேடிவந்த வீரண்ணன் அவளது அலறலைக் கேட்டான். கதவை உடைத்து அவளை மீட்டான். எனினும் இந்தக் கலவரத்தில் பண்ணையார் கொலையாகிறார். வீரண்ணன் கைது செய்யப்பட்டு அவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

வீராயியும், மாரிக் கிழவனும் அழுது ஆற்று கின்றனர். எனினும் நீதிமன்றம் இரக்கம் காட்ட வில்லை.

“உண்மைக்கு மதிப்புவரும் ஒருகாலம்
வரும்; அப்போ துணர்ந்து கொள்வர்
கண்போன்ற தங்கையினைக் கற்பழிக்க
முனைந்தவனின் உயிரைக் கொன்ற
அண்ணனுக்குத் தீங்கிழைத்த நடுநிலைமை
அற்றோரின் செயலைக் கண்டே
மண்ணுலகம் பழிதூற்றும்; யாவருமே
என்பேரை மறவார் அன்றோ?”

இந்நிலையில் வயதான மாரிக்கிழவன் மகனை யிழந்து தமிழ்நாட்டில் வாழ வழி தெரியாமல் ‘கங்காணி’யின் பேச்சைக் கேட்டு பிழைப்பிற்காக தென் ஆப்ரிக்காவுக்கு வீராயியுடன் செல்கிறான். அங்கு தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் போது பாம்பு கடித்து மாரி இறந்து போகிறான். வேறு துணையில்லாத வீராயி தற்கொலைக்கு முயல்கிறாள்.

“அண்ணன் இறந்தவுடன்- என்
ஆவி துறந்திருப்பேன்
புண்ணிய தந்தையினால் - அதைப்
பொறுத்துக் கொண்டிருந்தேன்
கண்ணிரண் டில்லை இன்று- பினர்
காட்சியும் தப்பிடுமோ?




**வீராயி**
ஆசிரியர்: கவிஞர் தமிழ்ஒளி
**வெளியீடு: புகழ் புத்தகாலயம்**
**48/105, பிள்ளையார் கோயில் தெரு,**
**செனாய் நகர், சென்னை - 600 030**
**விலை: ₹50.00**

மண்ணில் உயிர் விடுவேன்- என
மங்கை துணிந்துவிட்டாள்''

அப்போது ஆனந்தன் என்ற இளைஞன் அவளைக் காப்பாற்றுகிறான். அவளுக்கு வாழ்வு தருவதாகக் கூறி, தமிழ்நாட்டுக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்கிறான்.

''காளை இளம்பருவம்- அவன்
கண்களில் நற்பிரிவு!
மாள மனம்துணிந்தாய்- இது
மாபரி தாபம் அம்மா!
வேளை வந்தே இறந்தார்- அவர்
விசனம் நீங்கிடம்மா!
நாளைக் கழித்துவிட்டால்- நம்
நாட்டுக்குச் சென்றிடலாம்''

என்று கூறி ஆனந்தன் அவளைத் தேற்றுகிறான்.

ஆனந்தன் அவளை அழைத்துக் கொண்டு ஊருக்கு வருகிறான். அவர்களது திருமணப் பேச்சைத் தொடங்குவதற்கு முன்பாகவே அவள் பறைச்சி என்பது தெரிந்துவிடுகிறது. கவுண்டர் அவர்களை வீட்டை விட்டே விரட்டி விடுகிறார்.

''தொலையட்டும் கழுதையது பறைக்குட்டி யோடு!
துளியேனும் இடம் கொடுத்தால் உன் கழுத்து துண்டு
அலையட்டும்! எங்கேனும் சாகட்டும் சென்று!
அப்பண்ணக் கவுண்டரவர் ஆட்களுடன் வந்தார்''

ஆனந்தன் சினம் கொள்கிறான். 'மேல்சாதித் திமிரை அடக்கப் போவதாகக் கூறி அவளை அழைத்துக் கொண்டு சேரிக்கே செல்கிறான். சாதி மறுப்பு என்னும் புரட்சித் திருமணம் செய்யப் போவதாக பறையடித்து அறிவிக்கச் செய்கிறான். ஊரே கொந்தளிக்கிறது.

''காதெலாம் கிழியும்வணம்
பறையடித்து விட்டான்
'கவுண்டருக்கும் பறைச்சிக்கும்
கலியாணம்' என்று!''

இதுகேட்டு செல்லப்பக் கவுண்டரும், ஊராரும் ஓடோடி வந்தனர். 'இருவரையும் கொல்லுங்கள்' என்று ஆணையிட்டார். சேரியையே சிதைத்தனர். அவர்களை அடித்துத் துவைத்தனர்.

''குருதியிலே காதலர்கள் குளிக்கின்றார் அந்தோ!
கொடுமையிலே இதுபோன்ற கொடுமையதும்
உண்டோ?
ஒருவாறு வெறிதீர்ந்தே ஊரார்கள் சென்றார்
உடல்சோர்ந்து காதலர்கள் தரைசாய்ந்து விட்டார்
திருந்தாத தமிழ்நாடே! நீ செய்த தீமை
தீ மண் நீர் காற்றுவெளி உள்ளளவும் மக்கள்
ஒருபோதும் மறவார்கள் உண்மையிது சொன்னேன்!
உயர்காதல் கொன்றாய் நீ வாழுதியே நன்றே!''

சமுதாய மாற்றத்துக்காக பல காலமாகப் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கவிஞர் தமிழ்ஒளி எழுத்தின் மூலம் போராடியுள்ளார். திருந்தாத தமிழ்நாட்டைத் திருத்துவதற்காகப் பாடியுள்ளார். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை முழக்கமாகக் காவியம் முடிகிறது. ●


## திருத்தப்பட்ட சந்தா விவரம்

நியூ செஞ்சுரியின்
உங்கள் நூலகம்



நியூ செஞ்சுரியின்
உங்கள் நூலகம்
மாத இதழுக்கு
ஆண்டுச் சந்தாவை
புதுப்பித்துக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஆண்டு சந்தா**
**சலுகை விலை**
~~₹ 360/-~~ ₹ 300/-

சந்தா தொகையை மணியார்டர் மற்றும் DD அனுப்புவோர்
**New Century Reader's Sangam**
என்ற பெயரில் அனுப்ப வேண்டும்.


**நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்**
41 - பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098

NCBH நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

முன் வெளியீட்டுத் திட்டம்

# நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?

பெரியாரின் 1925-1973 வரையிலான
முழுமையான பதிவுகள்




## பசு. கவுதமனின்

பல்லாண்டு பெரும் முயற்சியில்
பெரியார் எழுதியபடியே வெளிவரும்
பெரியாரின் எழுத்துகளுக்கான ஒரு செம்பதிப்பு

**தொகுதி 1: மொழி**
**தொகுதி 2: கலையும் பண்பாடும்**
**தொகுதி 3: இலக்கியம்**
**தொகுதி 4: தத்துவமும் சொற்சித்திரமும்**
**தொகுதி 5: சித்திரபுத்திரன் கட்டுரைகளும் உரையாடல்களும்**

**ஐந்து தொகுதிகள் சுமார் 4000 பக்கங்கள்**
**விலை ₹ 4000/-**
**முன்வெளியீட்டுத் திட்டத்தில்**
**₹ 2000/- மட்டுமே**

A4 அளவு, தரமான தாள்,
அழகிய வடிவமைப்பு,
கெட்டி அட்டை கட்டு

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் அனைத்துக் கிளைகளிலும் பதிவு செய்து கொள்ளலாம்.**

**கிளைகள்**

அம்பத்தூர்: 044–26359906, 26241288, 26258410, 26251968; ஸ்பென்சர் பிளாசா: 044–28490027; திருச்சி: 0431–2700885; புதுக்கோட்டை: 04322–227773; தஞ்சாவூர்: 04362–231371; திருநெல்வேலி: 0462–2323990; மதுரை: 0452–2344106, 2350271; திண்டுக்கல்: 0451–2432172; கோவை: 0422–2380554; ஈரோடு: 0424–2256667; சேலம்: 0427–2450817; ஓசூர்: 04344–245726; கிருஷ்ணகிரி: 04343–234387; ஊட்டி: 0423–2441743; வேலூர்: 0416–2234495; விழுப்புரம்: 04146–227800; பாண்டிச்சேரி: 0413–2280101; திருவண்ணாமலை: 04175–223449.

# பால் - ஆல கால விஷமா?

சித்தார்த்தன் சுந்தரம்




ஜல்லிக்கட்டை ஆதரித்து உலகெங்கிலும் வாழ்ந்து வருகிற தமிழர்கள் குரல் கொடுத்தார்கள். அதற்கு 'தை எழுச்சி', 'மெரினா புரட்சி' என நாமகரணங்கள் சூட்டப் பட்டன. இந்த ஜல்லிக்கட்டு பிரச்சினை நாட்டுக் கால்நடைகளின் முக்கியத்துவம் பற்றியும், A1, A2 பால் வகைகள் குறித்தும் நாம் அறிந்து கொள்ள ஓரளவுக்கு உதவியது என்று சொன்னால் மிகையில்லை.

"பால் தேவாமிர்தத்துக்கு நிகரான சத்துணவு என்றும், கால்சியம் நிறைந்தது என்றும் ஊடகங்கள் மூலம் தவறான கருத்துகள் விதைத்து வளர்த்து விடப்பட்டுள்ளன" என்கிறார். 'மெல்லக் கொல்லும் பால்' என்ற புத்தகத்தை எழுதியிருக்கும் டாக்டர் த. ஜெகதீசன். குழந்தைகள் நல மருத்துவரான இவர் மருத்துவத்திலும், மரபியலிலும் முதுகலைப் பட்டங்கள் பெற்றவர்.

இந்தப் புத்தகத்தில் பால் குடிப்பதால் விளையும் கேடுகளை மருத்துவ ஆதாரத்துடன் தெளிவாக எழுதியிருக்கிறார். 'பால் குடிக்க மறுக்கும் குழந்தைகளை வற்புறுத்திக் குடிக்க வைப்பது தவறு' என்கிற செய்தியோடு ஆரம்பிக்கும் புத்தகம் 'பசும் பால் குடிப்பது கன்றுக்குட்டியின் பிறப்புரிமை; அயலார் அதில் பங்கு கேட்பது சரியில்லை" என்பதோடு முடிகிறது. உலகில் மனிதனைத் தவிர வேறு எந்தப் பாலூட்டியும் தன் தாயின் பாலைத் தவிர வேறு விலங்குகளின் பாலை உட்கொள்வதில்லை தானே?!

*1900 ஆம் ஆண்டுவாக்கில் தினம் நான்கு லிட்டர் பால் சுரந்த பசுக்கள், செயற்கை மாட்டுத் தீவனங்களைச் சாப்பிட்டு 1960 ஆம் ஆண்டுகளில் பத்து லிட்டர் பால் தரத் தொடங்கின. ஆனால் தற்போது இந்த ஹார்மோன் மருந்தின் உதவியால் கலப்பின பசுக்கள் தினம் முப்பது லிட்டர் பால் சுரக்குமளவுக்குத் தரம் மாறிவிட்டன. இதைத் தான் 'வெண்மைப் புரட்சி' என்று உலக மக்கள் புகழ்ந்து கொண்டாடி வருகின்றனர். இந்த விபரீதப் புரட்சியின் பக்கவிளைவுகளை மனித குலம் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறது.*


பால் செரிமானம் ஆவதற்கு அதிக நேரம் ஆகும் அதோடு இரத்தசோகை நோய், இரத்தப் புற்றுநோய், இதய நோய்கள், கண்புரை நோய், இளவயதில் முதுமையும் ஞாபகசக்தி குறைபாடும், மூளைப்பிறழ்வு நோய் (ஆட்டிசம்), இளவயது சர்க்கரை நோய், குழந்தை களிடையே மலச்சிக்கல் போன்ற எண்ணற்ற நோய் களின் ஊற்றுக்கண் நாம் தினந்தோறும் அருந்தும் பால் தான்!

தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் ஆசிரியர் அதில் இருக்கும் கால்சியமும், பாஸ்பரசும் குழந்தைகளின் எலும்பு வளர்ச்சிக்குப் போதுமானது

என்றும் அதன்பின் நமக்குத் தேவையான கால்சியத்தையும் மற்ற கனிமங்களையும் கீரை வகைகள், பச்சைநிறக் காய்கறிகளிலிருந்தே பெற்றுக் கொள்ளலாம் என்றும் சொல்கிறார். தாவரங்களில் இருக்கும் குளோரோபில் என்னும் பச்சையத்தில் மக்னீசியம் நிறைந்திருக்கிறது. காய்கறிகளிலிருந்து கிடைக்கும் கால்சியம் முதல் தரமானது என்றும் பாலிலிருந்து கிடைக்கும் கால்சியம் தரம் குறைந்தது என்றும் அது எலும்புச் சிதைவு நோய்க்கு வழிவகுக்கும் என்றும் நூலாசிரியர் எச்சரிக்கிறார்.

அதிக அளவில் பால் அருந்துபவர்கள் இரத்த சோகை நோயால் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் பெண்கள் கர்ப்ப காலத்தில் பால், டீ, காபி, பால் சார்ந்த பானங்கள் எதுவும் அருந்தாமல், சுத்தமான தண்ணீர் அல்லது பழச்சாறு மட்டுமே அருந்துவது குழந்தையின் உடல் நலத்துக்கு மிகச் சிறந்தது என்றும் கூறுகிறார்.

A1, A2 பீட்டா கேசின், பீட்டா கேசோமார்பின் - 7 (BCM 7) என்றால் என்ன, அது எப்படி நம் உடம்பில் பல விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதையும் ஆசிரியர் ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். பால் குடித்தவுடன் லேசாக கண்ணயர்வதற்கானக் காரணம் அதிலிருக்கும் கேசோமார்பின் தான்!




**மெல்லக் கொல்லும் பால்**
ஆசிரியர்: த.ஜெகதீசன்
**வெளியீடு: 52, கானாபாக் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005**
**விலை: ₹100/-**

பன்னாட்டு பால் பொருள் தயாரிப்புகள் அனைத்தும் A1 கலப்பினப் பசும் பாலிலிருந்தே உற்பத்தி செய்யப்படுகின்றன. நமது நாட்டின் பல கிராமங்களில் குழந்தைகளுக்கு A-2 விலங்குகளான ஆடு, காராம் பசு ஆகியவற்றின் பாலைப் பயன்படுத்துவது சற்று ஆறுதலான செய்தி. பசும் பால் அல்லது பசும் பாலிலிருந்து தயாரிக்கப்படும் பவுடர்பால் குடிக்காமல், இரண்டு வயது வரை தாய்ப்பால் மட்டும் குடிக்கும் குழந்தைகளை இன்சுலின் தேவைப்படும் சர்க்கரை நோய் - T1 DM - தாக்குவதில்லையாம். உலகிலேயே அதிக அளவில் தனி மனிதர்கள் பால் அருந்தும் நாடுகளான பின்லாந்து, ஸ்வீடன், நார்வே, டென்மார்க் ஆகிய நாட்டுக் குழந்தைகளையே இந்த நோய் அதிகம் பாதித்துள்ளதாக பல புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதாக ஆசிரியர் கூறுகிறார்.

எனவே தங்களுடைய அழகைப் பாதுகாக்கும் பொருட்டும், ஊடகங்களின் மூலம் பன்னாட்டு பால் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் செய்யும் பொய் பிரச்சாரத்திலும் மயங்கிவிடாமல் குழந்தைகளுக்கு முடிந்தமட்டும் தாய்ப்பால் கொடுக்க வேண்டுமென்றும், அதன்பின் காய்கறிகள் அதிகம் சாப்பிடுவதன் மூலம் நம் உடலுக்குத் தேவையான கால்சியமும் மற்ற கனிமங்களும் கிடைக்குமென்றும் இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

புத்தகத்தின் இறுதியில் அதிக ஆபத்தை உருவாக்கும் பால் பொருட்கள் (ஐஸ்க்ரீம், மில்க்ஷேக், கோல்ட் காஃபி முதலியவை), குறைந்த ஆபத்தை உருவாக்கும் பால் பொருட்கள் பட்டியலும் (பனீர் மட்டர், பால்கோவா, பால் அல்வா, தூத் பேடா, மில்க் பிஸ்கெட்டுகள், ரசகுல்லா போன்றவை), இந்நூல் எழுதுவதற்கு உதவிய ஆய்வுக்கட்டுரைகள், புத்தகங்கள் குறித்த குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளன. தாய்ப்பாலின் அவசியம் குறித்தும், பாலினால் விளையும் தீமைகள் குறித்தும் திரிகடுகம், சிலப்பதிகாரத்திலிருந்தும் ஆசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார்.

இந்தப் புத்தகம் பாலில் உள்ள நன்மைகள், தீமைகள் குறித்த ஒரு விவாதத்தை துறை சார்ந்த நிபுணர்களிடம் எழுப்பும் என எதிர்பார்க்கலாம்.

வளர்ந்து வரும் குழந்தைகள் பால் குடிக்கவில்லையே என தாய்மார்கள் ஆதங்கப்படாமல் அதற்கு மாற்றாக சத்துள்ள உணவை சாப்பிடக் கொடுத்து அவர்களை ஆரோக்கியமானவர்களாக வளருங்கள். ஆரோக்கியத்தின் மேல் அக்கறை கொண்ட அனைவரும் படிக்க வேண்டிய புத்தகம்.

●

# பாதயாத்திரை என்பது வாழ்க்கைப் பயணத்தின் ஒரு பகுதி


**செ.இரவி**

தினசரி யாத்திரை - நடை பயணம் - உடலுக்கு ஆறுதல் தருவது. கிரிவலம், கோவிலுக்குப் பாத யாத்திரை என்பது பக்தர்களின் மனதிற்கு நிம்மதி தரும் ஆன்மீக காரியம். இப்போது தமிழ்நாட்டில் பல கோவில்களின் விசேசங்களையொட்டி ஆன்மீக பக்தர்கள் பக்தி யாத்திரை மேற்கொள்கிறார்கள். அதில் மிக முக்கியமானது பழனி கோவிலுக்கு தைப்பூச சமயத்தில் நடைபெறும் பாதயாத்திரை. தமிழ்நாட்டிலிருந்து மட்டுமின்றி கேரளாவிலிருந்தும் பலர் அவ்வகைப் பயணம் மேற்கொள்கிறார்கள். வெளிநாட்டினரும் கூட.

அப்படி பழனி பாதயாத்திரையின் போது நடக்கும் நிகழ்வுகள், அனுபவங்களை இந்நாவல் சொல்கிறது. பனியன் தொழிலாளர்கள், பனியன் உற்பத்தி செய்யும் சிலர், பலதரப்பட்ட பெண்கள், இளைஞர்கள் என்று பலர் அப்பயணத்தை மேற்கொள்கிறார்கள். வெவ்வேறு வகையான சடங்குகள், தொன்மக் கதைகள் , பக்தி சார்ந்த நம்பிக்கைகள், சிறுசிறு சடங்குகள் என்று நான்கு நாட்கள் பக்திப் பயணத்தை இந்நாவல் விவரிக்கிறது.

பாதயாத்திரை தங்களின் தன் அகங்காரத்தை கழற்றி வைத்து விட ஒரு சந்தர்ப்பம். பணம், அந்தஸ்து, சாதி என்ற வேறுபாடு இல்லாமல் மேற்கொள்ளப்படுவது. அகங்காரத்தைத் தொலைத்து விட்டு பலருடன் பழகவும், பல இடங்களில் அன்னதானம் பெற்று உணவு உண்ணவும், போகும் பாதைகளில் சாதாரண இடங்களில் உறங்கவும், தங்கவும், பலருடன் கலந்து பேசவும் ஏற்படும் வாய்ப்பு பக்தியை மையமாக வைத்தே நிகழ்கிறது. முருகனை சந்தித்து வணங்கி தங்களின் பாரத்தை இறக்கி வைக்க ஒரு சந்தர்ப்பம். ஆனால் அங்கேயும் சாதி தட்டுப்பட்டு விடுகிறது. பண அந்தஸ்து குறுக்கிடுகிறது சிலசமயம். நாத்திக எண்ணம் கொண்ட ஓரிருவர் அவர்களுடன் பயணம் செல்வதால் மறை முகமாகப் பகுத்தறிவு சார்ந்த விசயங்களும் வெளிப் படுகின்றன. அதில் செல்பவர்கள் தங்களைச் சுயபரிசீலனை செய்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது.

பாதயாத்திரை என்பது வாழ்க்கைப் பயணத்தின் ஒரு பகுதி. அந்தப் பயணத்தின் வழியே வர்க்க வேறுபாடு.




**கோமணம்**
**ஆசிரியர்: சுப்ரபாரதிமணியன்**
**வெளியீடு: முன்னேற்றப் பதிப்பகம், சென்னை.**
**விலை: ₹80.00**

சாதியம், பண ஆதிக்கம், பக்தியின் போலித்தனம் போன்றவற்றை சுப்ரபாரதிமணியன் வெளிப்படுத்தி பல சமூக அவலங்களை வெளிக்கொணர்கிறார். குறிப்பாக குடிசார்ந்த விசயங்கள், பெண்களின் பிரச்சினைகள், தொழிலாளர்களின் நிலை என்று பல கோணங்களை இந்நாவல் காட்டுகிறது. பகுத்தறிவுப் பார்வை ஊடாடி நிற்பது ஆசிரியரின் சரியான நிலையைச் சொல்கிறது. புதிய களம், திருப்பூரைத் தாண்டிய சுப்ரபாரதி மணியனின் அனுபவங்கள் இதில் எழுதப்பட்டுள்ளன. முகநூல் பக்கங்கள், தொன்மக்கதைகள், ஆன்மீகக் கதைகள் சுவாரஸ்யமாக உள்ளன. பக்க அளவில் சிறியதாக இருந்தாலும் ஒருவகை முழுமையை இதிலும் காணலாம். எழுத்தாளனின் பார்வை எல்லா விசயங் களிலும் பதிவது, விமர்சனமாக படைப்பில் வைக்கப் படுவது சார்ந்த ஒரு முன் மாதிரி நாவல் இது. ●

# தமிழில் வட்டார வழக்குச்சொல் அகராதி உருவாக்கம்

## முனைவர் இரா. வெங்கடேசன்

**த**மிழின் அகராதி ஆக்க வரலாறு நீண்ட பின்புலத்தைக் கொண்டது. தமிழில் அகராதி உருவாக்கம், தொல்காப்பியத்தில் உருக்கொண்ட பின்னர் நிகண்டுகளாக வடிவம் பெற்றதின் தொடர்ச்சியாக, அகராதி என்னும் தனி நிலையை அடைந்து நிகழ்ந்துவருகின்றது. தமிழ் உரையாசிரியர்களின் உரைகூறும் முறைகளிலும் அகராதிக்குரிய கூறுகள் வெளிப்பட்டிருக்கின்றன. தமிழ் அகராதி வளர்ச்சி வரலாற்றில், இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் வட்டார வழக்குச் சொல்லகராதி உருவாக்கமும் நடந்தது. 1882இல் வெளிவந்த பெஸ்கியின் தமிழ் - லத்தீன் அகராதி அன்றைய வழக்குச் சொற்களுக்கான அகராதியாகவே அமையப்பெற்றிருந்தது.

வட்டார வழக்கு என்பதற்கு, ஒலிப்பு முறை, சொல் அமைப்பு, இலக்கண அமைப்பு ஆகிய கூறுகளின் அடிப்படையில் பொதுமொழியிலிருந்து சற்றே வேறுபடுவதும், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைச் சார்ந்தவர்களால் மட்டுமே பேசப்படுவதுமான மொழிவழக்கு என்று 'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி' விளக்கம் தருகின்றது (ப. 1194). இவற்றைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் ஒரு குறிப்பிட்ட மக்களால் பேசப்பட்டு, புரிந்துகொள்ளப் படும் மொழி வகையை வட்டாரமொழி என வரையறுத்துக்கொள்ளலாம். இவ்வகை மொழியில் வழங்கும் சொற்களையே வட்டார வழக்குச் சொற்களாக அடையாளப்படுத்துகின்றனர். வட்டாரச் சொல் எது என்பதற்குக் கீழ்வரும் ஒரு குறிப்பு இன்னும் மேலதிகப் புரிதலை வழங்குகின்றது.

பொது வழக்கில் இருக்கும் ஒரு சொல், பொதுப் பொருளிலிருந்து வேறுபட்டு வழங்குதல், ஒரு சொல் குறிப்பிட்ட வட்டாரத்தில் மட்டுமே வழங்க / புரிந்து கொள்ளப்படுதல், பொது வழக்குச் சொல்லாக இருப்பினும் திரிந்து, உச்சரிப்பில் வேறு சொல் போலத் தோற்றம் தருதல் என மூன்று நிலைகளில் இருப்பது வட்டாரச் சொல்லாகும் (பெருமாள் முருகன் அகராதி, ப. 15).

'நீர் இறைத்தல்' என்ற சொல்லிற்குக் கிணற்றிலிருந்து நீரை இறைத்தல், அதாவது நீரை எடுத்தல் என்ற பொருள் பொதுவழக்கில் வழங்குகின்றது. இதே சொல் கொங்கு வட்டாரப் பகுதியில் நீரை அள்ளித் தரையில் தெளித்தல் என்ற பொருளைத் தந்து வழங்கி வருகின்றது. இச்சொல் பொதுவழக்கில் இருக்கும் பொருளில் வழங்காமல், வேறு பொருளில் வழங்கிவரும் சொல்லாக உள்ளது. இதுவே வட்டார வழக்குச் சொல்லாகும்.

வட மாவட்டப் பகுதிகளில் (குறிப்பாகத் திருவண்ணாமலை) ஆரம்பப் பருவநிலையில் உள்ள தவளையினை 'முண்டா குஞ்சி' என்ற சொல்லால் சுட்டும் வழக்கமிருக்கின்றது. 'தலபிரட்ட' என்ற வழக்கும் அரிதாகக் காணப்படுகின்றது. கொங்கு வட்டாரத்தில் தலப் பிரட்ட என்பதோடு 'கொரத்திக் குட்டி' என்ற இன்னொரு சொல்லிலும் சுட்டப்படுகின்றது. இவ்வகைச் சொற்கள் குறிப்பிட்ட வட்டாரத்தில் மட்டுமே வழங்க, புரிந்துகொள்ளப்படுவதான சொற்களாக உள்ளன.

இவ்வகைச் சொற்களோடு ஒளி நிலையில் மாறுபட்டு வழங்கும் சொற்களையும் வட்டார வழக்குச் சொல்லாகவே கருதுகின்றனர். உதாரணமாக எங்கள் ஊரில் முடிவெட்டும் தொழிலைக் குறிக்கும் சொல்லாகப் 'பரேரி' என்ற சொல் வழங்குகின்றது. இச்சொல் தஞ்சைப் பகுதியில் 'பரியாரி' என்று வழங்கி வருகின்றன ('பரியாரி' என்றால் 'வைத்தியர்' என்று பொருள்). இச்சொல் ஒலி நிலையில் வேறுபட்டிருந்தாலும் பொருள் நிலையில் வேறுபட்டிருக்கவில்லை. கொங்கு பகுதியில் முடி வெட்டுதல், துணி துவைத்தல் ஆகிய தொழிலைச் செய்பவர்களை 'ஏகாலி' என்ற ஒரே சொல்லால் சுட்டும் வழக்கமிருக்கின்றது. வட மாவட்ட பகுதியில் துணி துவைக்கக்கூடியவர்களை மட்டும் 'ஏகாலி' என்று சுட்டும் வழக்கமிருக்கின்றது. 'வண்ணான்' என்பதும் இங்கு வழங்குகின்றது. இவ்வாறு ஒலி நிலையிலும் பொருள் நிலையிலும் மாறுபட்ட வளமையான சொற்கள் பல தமிழில் வழங்கிவருகின்றன. இவ்வகைச் சொற்களையே வட்டார வழக்குச் சொற்கள் என அழைக்கின்றனர். இந்த வட்டாரச் சொற்கள் மாறிவரும் சூழலுக்கேற்ப


வழக்கொழிந்து மறையும் தன்மைகொண்டவையாக உள்ளன.


சூழலுக்கேற்ப வழக்கொழிந்து மறைந்துபோகும் தன்மைகொண்டதாக வட்டார மொழிச் சொற்கள் உள்ள நிலையில் மிக வேகமாக மறைந்துவருகின்றன. குறிப்பாகத் தொழில் முறைச் சொற்கள் வேகமாக மறைந்துவிடுகின்றன. வேளாண், மட்பாண்டம், தச்சு, சலவை, மீன்பிடி முதலானத் தொழில் முறைகளில் அறிவியல் சாதனங்கள் மிக வேகமாகப் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. சில தொழில்கள் போதிய வருவாய் இன்மையாலும், சமூக அங்கீகாரமின்மையாலும் கைவிடப்பட்டுவிட்டன. இவ்வகைக் காரணங்களால் அந்தத் தொழில் சார்ந்து வழங்கிவரும் சொற்கள் காலப்போக்கில் மறைந்துவிடும் நிலை ஏற்படுகின்றது.

வழக்கிழந்து மறைந்துபோகும் தன்மைகொண்ட வழக்குச் சொற்களைத் தொகுத்துத் தமிழில் வட்டார வழக்குச் சொல்லகராதி ஒன்றை முதன் முதலில் உருவாக்கியவர் எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்கள். 1982இல் அன்னம் வெளியீடாக வெளிவந்த அவ்வகராதி வட்டார வழக்குச் சொல்லகராதி என்று பொதுப்பொருளில் இருந்தாலும், அது நெல்லை வட்டார மொழிச்சொற்களை மட்டும் கொண்ட அகராதியாக இருந்தது.

1982இல் கி. ரா. அவர்களால் ஏற்பட்ட வட்டார வழக்குச் சொல்லகராதி உருவாக்க மரபின் தொடர்ச்சி யாகச் சில வட்டார வழக்குச் சொல் அகராதிகள் தமிழில் உருவாக்கப்பட்டு வெளிவந்தன. 1982ஆம் ஆண்டிலிருந்து தமிழில் வெளிவந்துள்ள வட்டார வழக்குச்சொல் அகராதிகள் குறித்த விவரங்கள் இங்குத் தொகுத்துத் தரப்படுகின்றன.

1. 1982 வட்டார வழக்குச் சொல்லகராதி - கி. ராஜநாராயணன்
2. 1989 வழக்குச் சொல்லகராதி - புலவர் இரா. இளங்குமரன்
3. 1989 வட்டார வழக்குச் சொற்களும் விளக்கங்களும் - லேனா தமிழ்வாணன்
4. 1990 செட்டி நாட்டில் செந்தமிழ் வழக்கு - சுப. சண்முகம்
5. 1991 கொங்குத் தமிழ் - டி.எம். காளியப்பா
6. 2000 கொங்கு வட்டாரச் சொல்லகராதி - பெருமாள் முருகன்
7. 2001 ஜீவா தொகுத்த வழக்குச் சொல்லகராதி - கே. ஜீவபாரதி, வே. எழில்முத்து.
8. 2003 கோவை மாவட்ட வழக்குச் சொல்ல கராதி - ச. மகாலட்சுமி
9. 2004 கொங்கு நாட்டுத் தமிழ் - புலவர் மணியன்
10. 2004 நெல்லை வட்டார வழக்குச் சொல்ல கராதி - ப. முருகையா
11. 2004 நாஞ்சில் வட்டார வழக்குச் சொல்ல கராதி - அ.க. பெருமாள்
12. 2006 செட்டிநாட்டு வட்டார வழக்குச் சொல்லகராதி - வே. பழநியப்பன்
13. 2007 நடுநாட்டுச் சொல்லகராதி - கண்மணி குணசேகரன்
14. 2008 கொங்கு வட்டார வழக்குச் சொல்ல கராதி - இரா. இரவிக்குமார்



இந்த அகராதிகளுள் புலவர் இரா. இளங்குமரன், லேனா தமிழ்வாணன், கே. ஜீவபாரதி ஆகியோர் உருவாக்கிய அகராதிகள் பெயரளவில் மட்டுமே வட்டார வழக்கு அகராதி என்று உள்ளனவே தவிர, அவைகள் ஒரு குறிப்பிட்ட வட்டார மொழிக்கான அகராதிகளாக இல்லை. அது மரபுத் தொடர்களுக்கான அகராதிகளாகவே அமையப்பெற்றுள்ளன. இவற்றுள் கே.ஜீவபாரதியும் வே.எழில்முத்துவும் சேர்ந்து தொகுத்துப் பதிப்பித்து வெளியிட்ட 'ஜீவா தொகுத்த வழக்குச் சொல்லகராதி' என்பது ஜீவா தொகுக்கவில்லை என்றும், அவை ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களால் தொகுக்கப் பெற்றது என்றும், அவற்றை ஜீவா அவர்கள் சேதுப்பிள்ளையிடமிருந்து குறிப்பிற்காகப் பெற்றார் என்ற கருத்தும் உண்டு. இவற்றையே ஜீவபாரதியும் எழில்முத்துவும் பின்னாளில் வெளியிட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

மிக அதிகமாகக் கொங்கு வட்டார மொழிச் சொற்களைக் கொண்ட ஐந்து அகராதிகள் வெளிவந்துள்ளன. அகராதியின் பதிவமைப்பு, சொற்களுக்குத் தரும் பொருள் விளக்கம் ஆகியன அகராதிகள்தோறும் வேறுபட்டிருந்தாலும் பெரும்பான்மையான அகராதிகள் கி.ரா.வின் அகராதியை உருமாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளமை பதிவு செய்ய வேண்டிய செய்தியாகும்.

இலக்கணக் குறிப்பு தருதலும், ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்வரின் எண் வரிசை முறையினைக் கையாளுதலும் அகராதியின் முக்கிய கூறுகளாகும். இம்முறையினைத் தி. மகாலட்சுமி, பெருமாள் முருகன் இருவரும் முறையாகப் பின்பற்றியுள்ளனர். ப. முருகையா, கண்மணி குணசேகரன் இருவரும் சொற்களுக்கு இலக்கண வகையைத் தந்துள்ளனர். ஆனால், எண் வரிசை முறையினைப் பின்பற்றவில்லை. பழநியப்பா, புலவர் மணியன், சுப. சண்முகம், டி.எம். காளியப்பா ஆகியோர் உருவாக்கிய அகராதிகள் மேற்கண்ட இரண்டு முறைகளையும் பின்பற்றி உருவாக்கப்படவில்லை.

பெரும்பாலான அகராதி ஆசிரியர்கள் நாட்டுப்புறவியல் துறை சார்ந்தவர்கள் என்பதால், சொற்களுக்குத் தரும் பொருள்விளக்கம் மண்சார்ந்த தன்மையை, அதன் வாசனையைக் கொண்டிருக்கின்றன.

வட்டார வழக்குச் சொல் அகராதிகள் பெரும்பாலனவற்றில் வட்டாரம் சார்ந்த படைப்பில் இடம் பெற்றுள்ள சொற்களைத் தொகுத்துத் தரப்பட்டுள்ளமையை இங்குச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. வட்டார வழக்கு அகராதிகளை உருவாக்கிய பெரும்பாலான ஆசிரியர்கள் வட்டாரம் சார்ந்த எழுத்துகளிலும் ஆய்வுகளிலும் கவனம் செலுத்தக்கூடியவர்கள் என்பது இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். தமிழில் வட்டார வழக்குச் சொல் அகராதி உருவாக்கத்திற்கு, வட்டார அளவில் நேரடியான கள ஆய்வை மேற்கொண்டு, அந்த மொழியைக் கூர்ந்துநோக்கிச் சொல் தேர்வை மேற்கொள்ளும் முயற்சி இதுவரை நடைபெறவில்லை என்பது இங்குப் பதிவுசெய்யப்பட வேண்டியுள்ளது.

படைப்புகளில் இடம்பெற்றுள்ள வட்டார வழக்குச் சொற்களை மட்டுமே தொகுத்து வட்டார வழக்குச்சொல் அகராதி உருவாக்கப்பட்டுள்ளமை அத்துறையில் செய்ய வேண்டிய பணிகளுள் ஒரு பகுதி மட்டுமே ஆகும். இன்னும் செய்ய வேண்டிய பணிகள் நிரம்ப உள்ளன.

எந்த நிறுவத்தின் உதவியுமின்றி, சுய ஈடுபாட்டின் காரணமாக வட்டார வழக்கு அகராதிகளை மேற்கண்டவர்கள் உருவாக்கியுள்ளனர். இவர்களின் முயற்சி வட்டார வழக்கு அகராதி உருவாக்கத்தின் முன்னோடிப் பணியாகும். இவர்கள் தொட்டுச் சென்ற பாதையை நோக்கி இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டிய தேவையுள்ளது.

மேற்கண்ட அகராதிகளில் மட்டுமன்றி கல்லூரி, பல்கலைக்கழகங்களில் நடைபெற்றுள்ள வட்டாரப் பொருண்மை சார்ந்த ஆய்வுகளிலும் (முனைவர், ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வுகள்) வழக்குச் சொற்களை ஆய்வாளர்கள் தொகுத்தளித்துள்ளனர். சென்னைப் பல்கலைக்கழகத் 'தமிழ்ப் பேரகராதி', க்ரியாவின் 'தற்காலத் தமிழ் அகராதி' ஆகியனவற்றிலும் பல வழக்குச் சொற்கள் பதிவாகியுள்ளன. இவைகளில் இடம்பெற்றுள்ள சொற்களையும் தொகுத்து வகைப்படுத்த வேண்டிய கடமை நமக்கு உண்டு.

எழுத்தில் இடம்பெற்றுள்ள சொற்களைத் தொகுத்து அகராதி உருவாக்கிய முதன் முயற்சியிலிருந்து, களஆய்வு மூலமாகச் சொற்களைத் திரட்டி மொழியியல் அடிப்படையில் அமைந்த வட்டார வழக்குச் சொல்லகராதியை உருவாக்கும் பணி தமிழ் ஆய்வுலகம் செய்ய வேண்டிய ஒன்றாகும். இந்தப் பெரும் பணிக்குரிய குறிப்புகளை முன்னைய வட்டார அகராதி உருவாக்கத்தினர் நமக்கு விட்டுச்சென்றுள்ளனர். இதைத் தமிழ் ஆய்வாளர்கள் விரைந்து செய்ய வேண்டும். காலமும் சூழலும் மாறிக்கொண்டே இருக்கின்றன. சொற்களும் வழக்கிழந்துகொண்டே வருகின்றன.

**துணைநின்றவை**

பதிப்பாசிரியர் குழு. 2008. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (திருத்திய பதிப்பு) சென்னை: க்ரியா

பெருமாள் முருகன். 2000. கொங்கு வட்டாரச் சொல்லகராதி, ஈரோடு: குருத்து வெளியீடு. ●